சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

30/-

பக்கம் - 24

ஓகஸ்ட்.28 - செப்ரெம்பர்.03, 2013


# கடவுள் கைவிட்ட தளிர்கள்



## விலைபோகும் இலங்கை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைபோகும் இலங்கை

அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள மயிலாடுதுறை அல்லது மதுரையை குறிவைக்கலாம். சில மாதங்களுக்குள் இந்தத் தாக்குதல் நடத்தப்படலாம்.

ஆனாலும் இந்திய புலனாய்வு அமைப்பு முற்கூட்டியே உசார் அடைந்திருக்கிறது. இந்தியா முழுவதிலும் உயர் விழிப்பு நிலையில் இருக்கும்படி, பாதுகாப்பு முகவர் அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.

இந்தத் தகவல் கிடைத்ததை அடுத்து மும்பை காவல்துறை எல்லா தகவல் மூலங்களையும் உசார்படுத்தியுள்ளது.

தாக்குதலுக்கான சூத்திரதாரிகள் யாழ்ப்பாணத்தை தளமாகப் பயன்படுத்தவுள்ளனர் என்பதுதான் இந்திய புலனாய்வு அமைப்பின் எச்சரிக்கை.



■ பூமுகன்



இந்தியா, வெளியுறவு தொடர்பில் இப்போது போராடிக்கொண்டிருக்கிறது. வல்லரசுக்கான போட்டி ஒருபுறமிருக்க அண்டைநாடுகளது அச்சுறுத்தலும் மிரட்டலும் இந்த உறவு நிலையில் பாதிப்புக் களை ஏற்படுத்தக்கூடும் என்று இந்தியா குழப்பமடைந்துள்ளது.

யாருக்காக வக்காலத்து வாங்குவது என்பதில் கூட இந்தியா திணறிவருகிறது. இப்போது இந்தியாவுக்கு இருக்கும் அழுத்தங்களாக அமெரிக்கா சீனா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் காணப்படுகின்றன. தகுதி நிலைகளில் அழுத்தங்கள் மாறுபட்டாலும் பிராந்திய,சர்வதேச நிலைகளில் இந்த அழுத்தம் முக்கியத்துவம் வாய்ந்தது.

குறிப்பாக இந்திய உள்விவகாரங்களில் இந்த அழுத்தங்கள் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் நிலைமை மாறியுள்ளது.

தற்போது இலங்கையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக இந்தியாவும் சீனாவும் போட்டா போட்டி போட்டுவருகின்றன. இதற்கான விலைப் பேச்சுக்களுக்கு இலங்கை அரசு காரணமாகியுள்ளது. விலைபேசுவது உண்மை. இருந்தாலும் சரிக்குச்சரி பங்கீட்டு விலைதான் பேசுகிறோம் என்று பொருள்பட இலங்கை அரசு நடந்துகொள்கிறது.

## பாகிஸ்தான் வலிந்த தாக்குதல்

இந்திய பாகிஸ்தான் எல்லைப்பகுதியான காஷ்மீரில் இருநாட்டு இராணுவத்துக்கும் இடையில் அடிக்கடி பலத்த மோதல் வெடிக்கின்றது. உயிரிழப்புக்கள் குறைவாயினும் இரு நாடுகளினதும் எதிர்கால உறவுக்கும் பாதுகாப்புக்கும் இந்த திடீர் மோதல்கள் ஆரோக்கியமானதாக இருக்காது என்பதே பல நாடுகளினதும் எதிர்பார்ப்பு.

இந்தியா சுதந்திரம் பெற்ற கையோடு காஷ்மீர் எல்லை சண்டை உருவாகியது. இன்றளவும் அந்த ஆபத்தை காஷ்மீர் எதிர்நோக்கிவருகிறது என்பதே உண்மை.

## புலனாய்வு அறிவிப்பு

இந்திய-பாகிஸ்தான் எல்லைப்போர் ஒருபுறம் இருக்க தற்போது பயங்கரவாத தாக்குதல் குறித்த எச்சரிக்கையை அந்த நாட்டு மத்திய புலனாய்வு அமைப்பு வெளியிட்டுள்ளது.

இது புதுவிதமான நகர்வு. இந்தியாவின் வடக்குப்பகுதியில் இதுவரை நிலைகொண்டிருந்த பயங்கரவாத எச்சரிக்கை தெற்குக்கு நகர்த்தப்பட்டிருக்கிறது.

இந்திய புலனாய்வு அறிவிப்பின்படி, தென் இந்தியாவைத் தாக்கவென எட்டுத் தீவிரவாதிகளுக்குப் பாகிஸ்தானில் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும், இவர்களில் நான்கு பேர் பஞ்சாபிகள் என்றும் ஏனையவர்கள் காஷ்மீரிகளும், பதான்களும் என்றும் கூறப்படுகிறது.

லஷ்கர் , தொய்பா, அனைத்துலக பப்பர் கால்சா, ஜய்ஷ் , மொகமட், ஜமத் உட் தாவா, லஷ்கர் ஜாங்வி, அல் உமர் முஜாகுதீன், ஹிஸ்ப் உல் முஜாகுதீன் ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து இந்தத் தாக்குதலுக்குத் திட்டமிட்டுள்ளன.

இவர்கள் தமிழ்நாட்டில் உள்ள மயிலாடுதுறை அல்லது மதுரையை குறிவைக்கலாம். சில மாதங்களுக்குள் இந்தத் தாக்குதல் நடத்தப்படலாம்.

ஆனாலும் இந்திய புலனாய்வு அமைப்பு முற்கூட்டியே உசார் அடைந்திருக்கிறது. இந்தியா முழுவதிலும் உயர் விழிப்பு நிலையில் இருக்கும்படி, பாதுகாப்பு முகவர் அமைப்புகள் எச்சரித்துள்ளன.

இந்தத் தகவல் கிடைத்ததை அடுத்து மும்பை காவல்துறை எல்லா தகவல் மூலங்களையும் உசார்படுத்தியுள்ளது.

தாக்குதலுக்கான சூத்திரதாரிகள் யாழ்ப்பாணத்தைத் தளமாகப்பயன்படுத்தவுள்ளனர் என்பதுதான் இந்திய புலனாய்வு அமைப்பின் எச்சரிக்கை.

## மறுக்கும் இலங்கை

இலங்கை முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளது. இந்திய புலனாய்வு தகவல்படி அத்தகைய எந்த ஆயுதக்குழுவும் இலங்கையைத் தளமாகப் பயன்படுத்த முடியாது.

இலங்கைத்தீவின் எல்லைகள் அனைத்தும் பாதுகாப்பாக உள்ளன.

எந்த ஆயுதக்குழுவுமே, வடக்கு, கிழக்கு உள்ளிட்ட எந்தவொரு பகுதியிலும், ஒருங்கிணையவோ, பயிற்சி பெறவோ, தாக்குதல் தொடுக்கவோ முடியாது. பாகிஸ்தான் தீவிரவாதிகள் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டுள்ளதாக வெளியான செய்திகளும் அடிப்படையற்றவை என்று இலங்கை இராணுவம் மறுத்திருக்கிறது.

பயங்கரவாதம் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் இந்த செய்திகள் கடும்போக்கை தோற்றுவிக்கும் முயற்சியாகவே கருதப்படுகிறது. இந்தியாவுக்குள் வேறு அமைப்புக்கள் ஊடுருவிவிடாமலும் உள்நாட்டு பாதுகாப்பை பலப்படுத்தவும் இந்தியா முயற்சித்துவருகிறது. இவ்வாறான அடிப்படையில்தான் அவ்வப்போது தன்னையும் தன்னைச்சூழவுள்ள நாடுகளையும் இந்தியா பரீட்சித்துவருகிறது.

இது விடயத்தில் இலங்கை அரசே வெட்கப்படவேண்டும். நாட்டை ஒருநிலையற்று வெவ்வேறு பிரிவுகளுக்கு விலைபேசுவதால் எதிர்காலத்தில் அவப்பெயரையும் ஆபத்துக் களையும் இலங்கை சம்பாதிக்கவேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதமாக மாறும் மக்களின் வாக்கு

■ நீலன்

பெரும்பான்மைச் சமூகம் அனுபவிக்கும் சகல வாய்ப்புக்களும் சிறுபான்மைச் சமூகத்திற்கும் கிடைக்க வேண்டும் எனும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில் வெறும் மணமற்ற கடதாசிப் பூவாக கிடைக்கப்பெற்ற மாகாணசபை தற்போது ஊசலாடிக் கொண்டிருக்கிறது .இந்த நிலையில் தான் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் அறிவிப்பு அதிகார பூர்வமாக விடுக்கப்பட்டது.

13 ஆவது திருத்தத்திற்கமைய உருவாக்கப்பட்ட மாகாண சபை மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு வடகிழக்கு என இணைக்கப்பட்டது. இம் மாகாண சபை 1990 ஆம் ஆண்டு ஜீன் மாதம் கலைக்கப்பட்டு ஆளுநரின் தலைமையின் கீழ் கொண்டுவரப்பட்டது. பின்னர் 2006 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதி உயர் நீதிமன்றின் தீர்ப்புக்கமைய வடக்கும், கிழக்கும் பிரிக்கப்பட்டன. அவ்வாறு 2006 இல் பிரிக்கப்பட்ட வடக்கு மாகாண சபைக்கு முதலாவது தேர்தல் செப்ரெம்பர் 20 இல் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண சபை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், ஆகிய ஐந்து மாவட்டங்களைக் கொண்டது. இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு,வவுனியா, மன்னார் ஆகிய மாவட் டங்கள் வன்னி மாவட்டம் எனும் அடிப்படையிலேயே கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஆகவே, நடைபெறவுள்ள வடக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகளின் இறுதிப் பெறுபேறுகள் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டம் எனும் அடிப்படையிலேயே வெளியிடப்படவுள்ளன.

வடக்கு மாகாண சபைக்கு 38 ஆசனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதில் இரண்டு போனஸ் ஆசனங்களுமடங்கும். யாழ். மாவட்டத்திற்கு 16 ஆசனங்களும், வன்னிமாவட்டத்திற்கு 20 ஆசனங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஒரு கட்சியில் 51 அபேட்சகர்கள் போட்டியிட்டு வடக்கு மாகாண சபைக்கு 36 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இலங்கையில் மாகாண சபை முறைமை நடைமுறைக்கு வந்ததன் பின் தனித்து வடமாகாண சபைக்குத் தேர்தல் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து 2006 இல் வடக்கு கிழக்கு என இரண்டாகப் பிரிந்ததைத் தொடர்ந்து வடமாகாண சபைத் தேர்தல் நடைபெறாது இழுத்தடிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் வடமாகாண சபைத் தேர்தல் முற்று முழுதாக கைவிடப்பட்ட ஒன்றாகவே இருந்துவந்தது. எனினும் முன்று தசாப்தகால போர் முடிந்து மூன்றாண்டுகள் கழிந்துவிட்ட நிலையில் வடக்கில் இடம்பெறும் மாகாண சபைத் தேர்தல் என்ற வகையில் இது முக்கியமானதொன்றாகவே கருதப்படுகின்றது. எனவே, தேர்தல் ஜனநாயக ரீதியில் நடைபெற்று தகுதியான பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே மக்கள் அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

அதேவேளை, அச்சம், பீதி என்பன இல்லாமல் வாக்காளர் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்கும் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். அதன் மூலமே அதிக வாக்காளர்கள் வாக்களிக்கக் கூடியதான சூழ்நிலை உருவாகும். அதனையே ஜனநாயகத் தேர்தல் என்று சர்வதேசமும் ஏற்றுக் கொள்ளவும் செய்யும். பொதுவாகவே இலங்கையில் தேர்தல் என்றவுடன் ஒருவித அச்ச உணர்வு தலை தூக்குவதை அவதானிக்க முடியும்.

வேட்பாளர்கள் மத்தியில் காணப்படும் ஏட்டிக்குப் போட்டியான தன்மை, வன்முறைகள் ஆதரவாளர்கள் மத்தியிலான கைகலப்புக்கள் என்பன வாக்காளர்களைப் பீதி கொள்ளச் செய்கின்றன. இவை வேட்பாளர்களையும், கட்சியையுமே வெகுவாகப் பாதிக்கும். இவ்வித மான சூழலைத் தவிர்த்துக் கொள்ள ஆரம்பத்திலிருந்தே நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும்.



அச்ச உணர்வும், அடக்கு முறைகளும், அழுத்தங்களும் தொடருமாயின் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கும் சாந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும் என்பதையும் கவனத்திற் கொள்வது இன்றியமையாதது. அது மட்டுமன்றி, சுதந்திரமான தேர்தல் நடைபெற வேண்டுமென்றால் வடமாகாண சபை தேர்தல் காலங்களில் இராணுவத்தினரின் தலையீடுகள் இருக்கக் கூடாது. இராணுவத்தினர் முகாம்களில் முடக்கப்பட வேண்டும் என்று தமிழ்தேசியக் கூட்டமைப்பு உட்பட சமூக நல அமைப்புக்களும் கருத்துத் தெரிவித்து வருகின்றன.

அதேவேளை, வடக்கு மாகாணத்தில் தேவைக்கு அதிகமாக குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தைக் குறைக்க வேண்டுமென சர்வதேச நாடுகளும் கூறிவருகின்றன. ஆயினும் பாதுகாப்புக் காக எனக் கூறிக் கொண்டு இராணுவத்தை அகற்ற இலங்கை அரசு மறுப்புத் தெரிவித்து வருகின்றது.

இந்த நிலையில், இலங்கை இராணுவத்தின் 20 ஆவது தளபதியாக தயாரட்ணாயக்க ஒகஸ்ட் முதலாம் திகதி வியாழக்கிழமையன்று உத்தியோக பூர்வமாக பதவியேற்றுக் கொண்டார். அவர் இராணுவத் தலைமையகத்தில் வைத்து ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் "வடக்குத் தேர்தலிலோ, அங்கு காணப்படுகின்ற மக்களின் வாழ்வாதாரத்திலோ இராணுவம் எவ்வகையிலும் ஆதிக்கம் செலுத்தாது. தேசிய பாதுகாப்பு மற்றும் ஜனநாயகம் என்பவற்றைக் கருத்தில் கொண்டே இராணுவம் செயற்படும்" என்று தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது.

வடக்கில் இராணுவப் பிரசன்னம் அதிகரித்து இருப்பதனால் போருக்குப் பின்னரான சூழ்நிலையில் படையினர் தொடர்பில் மக்களினதும் அரசியல் கட்சிகளினதும் அச்சமும், சந்தேகங்களும் தவிர்க்க முடியாதவையாகும். இவையனைத்திற்கும் மேலாக வடமாகாண சபைத் தேர்தல் மிகுந்த எதிர்பார்ப்புக்களை உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் ஏற்படுத் தியுள்ளது. எனவே அநாவசியமான நெருக்கடிகள் உரு வாகாமல் இருப்பதை உறுதி செய்து கொள்வது அவசியமாகும்.

வடமாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்டுவதிலேயே தமிழ்மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளது. எனவே அதிகூடிய ஆசனங்களைப் பெற்று தமிழ்த் தேசியக் கூட்[illegible] ஆட்சி அமைக்க வேண்டும். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் நிதானமாகச் சிந்தித்துப் பொருத்தமான பிரதிநிதிகளைச் தெரிவு செய்யத் தவறினால் இறுதியில் அதன் துயரங்களையும் அவர்களே சுமக்க நேரிடும்.

நடைபெறவுள்ள இத்தேர்தலானது உலகில் பலரின் கழுகுப் பார்வைக்குள் உள்வாங்கப் பட்டுள்ளதன் காரணத்தாலும் அரசுக்கும் தமிழ்த் தரப்பினருக்கும் புலம் பெயர் தமிழர்கள் ,இந்தியா போன்ற நாடுகள் சர்வதேச அமைப்புக்கள் போன்றவற்றின் எதிர்பார்ப்புக்களைத் தீர்மானிக்கின்ற தேர்தலாக அமைகின்ற காரணத்தாலும் இந்தத் தேர்தல் முக்கியத்துவம் பெறுகின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள 426,703 வாக்காளர்களும் வன்னி மாவட்டத்திலுள்ள 287,785 வாக்களர்களுமாக மொத்தத்தில் 714,488 வாக்களர்கள் வாக்களிக்கத் தகுதியுடயவர்களாக உள்ளனர். இவர்களில் குறைந்தது 70 வீதமானவர்களாவது வாக்களிப்பார்களேயாயின் வெற்றி நிச்சயம். இதில் மக்களை வாக்களிக்க வைப்பது என்பதில் கூடுதலான பங்களிப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கைகளிலேயே தங்கியுள்ளது. ஏனெனில் மக்கள் வாக்களிக்கவில்லையாயின் அதுபெரும் வெற்றியினை அரசதரப்புக்கு ஏற்படுத்தும். அதாவது வாக்களித்தால் ஒரு கட்சிக்குச் சாதகமாக அமைவுறும். மறுபக்கம் வாக்களிக்காதுவிட்டால் மறுதரப்புக்கே சாதகமாக அமையும். இதுவே தேர்தல்.

2009 ஆண்டு முள்ளிவாய்க்காலில் முடிந்துபோன போரோடு தமிழர்களை வென்றுவிட்டதாகவும், தமிழர்கள் தோற்றுப் போன இனம் என்னும் இந்நாட்டில் இனப்பிரச்சினை ஏதும் இல்லை என்றும் கூறிவரும் அரசுக்கும்,சர்வதேசத்திற்கும் சகல பிரச்சினைகளும் தீர்வின்றித் தொடர்கின்றன என்ற செய்தியைத் தமிழ்மக்கள் ஜனநாயக வழியில் தெரிவிப்பதற்கான ஓர் சர்ந்தர்ப்பமாக இத்தேர்தல் அமைகின்றது.

எமக்கு ஓர் நீதியான, நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்று தேவை என்ற செய்தியை மேடைகளில் மட்டும் கூறி வருவதானால் மட்டும் பலனில்லை. மக்கள் ஒவ்வொருவரும் அரசுக்கும் சர்வதேசத்திற்கும் செய்தியாகச் சொல்ல வேண்டிய தேவையுள்ளது. அதற்கு வடமாகாணத் தேர்தலில் தங்கள் வாக்குகளை ஆயுதங்களாக தமிழர்கள் மாற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் புதிய முகமூடி

*சண்டேலீடரில் மண்டன இஸ்மாயில் அபேவிக்கிரம எழுதியது.*

**தமிழில்: ஜஸ்ரீன்**

**போ**ர்க்காலப்பகுதியில், இலங்கை இராணுவம் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக சர்வதேச சமூகத்தினால் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் கம்பஹாப் பிரதேசத்திலுள்ள வெலிவேரியாவில் இடம்பெற்ற பொதுமக்கள் மீதான இராணுவத்தினரின் தாக்குதலால் மக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள் இணையத் தளங்களினுடாக வெளிவந்தன. ஆயினும் உண்மையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு மூடி மறைப்பதற்கான முயற்சிகளை எடுத்து வருவதாகத் தெரியவருகின்றது. வெலிவேரியாவில் பொதுமக்கள் மீது ஒளிவு மறைவின்றி மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலானது காட்சிகளாக வெளிப்படுத்தப்பட்டமையால் அதனை மூடி மறைப்பது கடினமானதே.

வடமேல் மாகாண சபை உறுப்பினரான சரத்குமார என்பவர் அவரது மகளைப் பாடசாலையில் தண்டித்த ஆசிரியை ஒருவரை முழந்தாளிட வைத்தமைக்காக கைது செய்யப்பட்டவர். அவரை எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்காக வேட்புமனுவைச் சமர்ப்பிக்க அனுமதித்ததும் பின்னர் அதன் பின்விளைவுகள் குறித்து உணர்ந்து கொண்டபின்னரே அவரை நிராகரிக்கும் முடிவுக்கு அரசு வந்திருந்தது.

கிளர்ச்சியைத் தூண்டும் விதத்திலும் மக்கள் மத்தியில் ஒரு சூழலை உருவாக்குவதும் அதன் பின்பு மக்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்ப்பதும் போன்றதான ஓர் எண்ணப் போக்கினை உருவாக்கும் அணுகுமுறையே இது. அத்துடன் அண்மையில் அலரிமாளிகையில் இடம்பெற்ற அச்சு ஊடகங்களின் தலைவர்களுடானான மாதாந்த காலையுணவு நேரச் சந்திப்பின் போது ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்தும் முழுக்கவனத்தையும் செலுத்தவேண்டியுள்ளது.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசு பக்கத்திற்கு மாறி வருவதற்கான சகல வாசற்கதவுகளையும் மூடிவிட்டோம். செப்ரெம்பரில் இடம்பெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தல்களை நடைபெறாமற் செய்வதற்கான வாய்ப்பு நிலைகள் இருப்பதான வதந்தி வலம் வருகிறது. மாகாண சபைகளில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மாற்றப்படவில்லையெனினும், அந்த அதிகாரங்கள் அரசின் வசமே இருக்கும் . நாட்டில் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது தொடக்கம் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் எதுவும் இதுவரை நடைமுறைக்கு வரவில்லை. அதனால் தற்போது இது குறித்து விசேட கவனம் செலுத்தப்படவேண்டுமென நான் கருதவில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

நாட்டின் மாகாண சபை முறைமையின் 13ஆவது திருத்தத்தை நீக்கிவிடுவதற்கும் அத்துடன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதன் மூலமாக வடக்கு மாகாணசபைத் தேர்தலைத் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்துவதற்கும் அரச தரப்பிலுள்ள கூட்டணிக் கட்சிகளை அரச தரப்பு பயன்படுத்தும் எனப் பரவலாக நம்பப்படுகின்றது. இவ்வாறாக மனதில் உள்ள எண்ணங்கள் மூடிமறைத்துக் கொண்டு தற்போதைய செயல் நிகழ்வுகளுக்காகப் பொதுவான விமர்சனங்களைச் செய்து வருவதும் ராஜபக்ஷக்களின் ஒருவிளையாட்டாகவே கருதப்படுகின்றது.

அடுத்த மாதம் நடக்கவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரின் போதும் மற்றும் கொழும்பில் இவ்வருடம் நவம்பரில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் கூட்டத்திலும் அங்கும் இங்குமாக ஊசலாடிக்கொண்டிருக்கும் அரசின் பிம்பத்தை சீர் செய்வதற்கு ராஜபக்ஷ நிர்வாகம் இத்தகைய காட்சிகளை மேடை யேற்றியே சமாளிக்க வேண்டியுள்ளது. உண்மையாகவே, வடமாகாண சபைத் தேர்தலை நடத்தாது விடுவதே ராஜபக்ஷ அரசின் உள்மன உணர்வின் நம்பிக்கையான ஓர் தந்திரமான அணுகுமுறையாகும்.

ராஜபக்ஷ அரசும் தற்பொழுது அதன் முழுக் கவனத்தையும் பொது நலவாய நாடுகளின் மாநாட்டிலேயே செலுத்திவருகின்றது. எவ்வளவு செலவிலாயினும் சரி எது வித தடங்கலும் இன்றி உச்சி மாநாட்டினை நடத்தியே தீருவது என்பதை இலக்காகக் கொண்டு தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது.

போர்க்காலத்தில் திருகோணமலையில் இடம்பெற்ற ஐந்து மாணவர்களின் படுகொலைகள் மற்றும் மூதூரில் இடம்பெற்ற 17 தொண்டு நிறுவனப் பணியாளர்கள் கொலைகள் தொடர்பிலான நடவடிக்கைகள் தற்போதே எடுக்கப்பட்டுள்ளன. அதேபோன்று போரின் போது காணாமற் போனவர்கள் குறித்து விசாரணையை மேற்கொள்வதற்கு ஓர் ஆணைக்குழுவை நியமிப்பதற்கு ஜனாதிபதி ஆணைபிறப்பித்துள்ளார். இவை யாவும் நடக்கவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் கூட்டத்தில் சர்வதேச சமூகத்தினால் எழுப்பப்படும் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான முயற்சிகளே என்பது இப்பொழுது ஆதாரபூர்வமாகத் தெரிகிறது.

அதேபோன்று, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கும் தீர்வினைக் காண்பதற்கு 6 மாதங்கள் அவகாசம் எடுக்குமெனக் கூறப்படுகிறது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தாமதிக்கும் உத்திக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அக்குழுவில் இருந்து ஜாதிகஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திரமுன்னணி உறுப்பினர்கள் வெளியேறப் போவதாக கூறிவருகின்றனர்.

எது எப்படியிருந்த போதிலும் ஆகக்குறைந்தது எதிர்வரும் நவம்பர் வரைக்குமாவது ராஜபக்ஷ அரசு இத்தகைய கருத்துக்களையோ அல்லது விமர்சனங்களையோ காதில் போடாது புறக்கணிக்கவே செய்யும். அத்துடன் வடக்கில் உள்ள இராணுவத்தினரின் செயற்பாடுகளும் மற்றும் வடக்கில் தேர்தலுக்கு முன்பதான பிரசார நடவடிக்கைகளும் அரசுக்கு விடுக்கப்படும் ஓர் சவாலாகவே அமையும்.

சாவகச்சேரியைச் சேர்ந்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளரான எஸ். சுயந்தன் என்பவரது இருப்பிடத்திற்கும் அதேபோன்று மற்றொரு வேட்பாளரான முன்னாள் விடுதலைப்புலிகளின் திருகோணமலை அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த எழிலனின் மனைவியான அனந்தி சசிதரனின் வீட்டிற்கும் சென்ற இராணுவத்தினர் அவர்களின் அரசியல் நடவடிக்கைகள் குறித்து விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். இது தேர்தல் விதிகளை மீறும் செயலாகும்.

வெலிவேரியாவில் சுத்தமான குடிநீருக்காகப் போராட்டம் நடத்திய மக்கள் மீது ஆயுதப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 3 இளைஞர்கள் கொல்லப்பட்டும் 20ற்கும் அதிகமானோர் காயப்பட்டதும் அல்லாமல் அச்சம்பவத்தின் போது காயமுற்றவர்களில் ஊடகவியலாளர்களும் அடங்குவர். 'அத்த' பத்திரிகையின் புகைப்பட ஊடகவியலாளரான சானும்குலசேகர மற்றும் 'லங்காதீப' பத்திரிகையின் பெண் ஊடகவியலாளரான தீபா அதிகாரி போன்றோர் தாக்கப்பட்டு காயங்களுக்குள்ளாகி கம்பஹா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதுடன் அவர்களது கமெராக்களும் சேதமாக்கப்பட்டன. 'ரிவிர' பத்திரிகையின் மாகாணச் செய்தியாளரின் கமெராவும் இராணுவத்தினரால் பறித்தெடுக்கப்பட்டு அதிலிருந்த புகைப்படங்கள் நீக்கப்பட்டன.

அண்மைக்காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் சந்தேகத்திற்கிடமின்றி மனிதஉரிமைகள் விடயத்தில் இலங்கை அரசுக்கு கறுப்புப் புள்ளிகளை வழங்குபவையாக அமைந்துவிட்டன. அதற்கு வலுவூட்டுவது போல கடந்தவாரம் நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் அமைப்பான 'மனித உரிமைகள் கண்காணிப்பகம்' வெளியிட்டுள்ள அறிக்கையும் அமைந்துள்ளது. அவ்வறிக்கையில் அமைப்பின் சட்டம் மற்றும் கொள்கைகளின் பணிப்பாளரான ஜேம்ஸ் றொஸ் "ராஜபக்ஷ அரசு சர்வதேச சமூகத்திற்கு எலும்புகளை வீசுவதில் சிறந்து விளங்குகின்றது. ஆனால் மோசமான குற்றச் செயல்களுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டு பிடித்து தண்டிப்பதற்கு கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதில்லை. மூதூரில் கொலையுண்ட 17 உதவிப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு நீதி கிடைக்கவில்லையானால் வேறு எவருக்காவது நீதி கிடைக்கும் என நம்புவது கடினமே" எனக் கூறியுள்ளார் என்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மனதில் நிலைத்த படைப்பாளுமைகள் – 01*

## லா.ச.ராமமிருதம்

(லால் குடி சப்தரிஷி ராமமிருதம்)



# நெஞ்சக் கிளர்வு

● வசியன்

எழுத்து, படைப்புக்கான ஒரு முயற்சியாக மேற்கொள்ளப்படுகையில் அவரவர் நெஞ்சில் உறைகின்ற படைப்பாற்றலின் மூர்த்தி கரத்தைப் பொறுத்து உன்னதத்துவத்தில் தனக்கான இடத்தைப் பெற்றுக் கொள்கிறது. இலக்கிய உலகில் தனக்கென ஓர் தனியிடத்தை வகிப்பவரான லா.ச.ரா என அழைக்கப்படும் லா.ச. ராமாமிர்தம் தனது மொழி ஆளுமையாலும் கவித்துவம் வாய்ந்த நடைச் சிறப்பாலும் நுண்ணிய பார்வையாலும் தனதான இடத்தைப் என்றென்றைக்குமாய் பேணிவந்தவர். "என்னைக் கண்டு பிடிப் பதற்காகவே எழுதுகிறேன்" என்று சொன்ன லா.ச.ரா இலக்கிய உலகில் நனவோடை உத்தியில் மிக வெற்றிகரமான பல படைப்புக்களை தந்து போனவர்.

அவரது சிறுகதைகளோ நாவல்களோ மனிதனின் உள்ளுலகத்தோடு ஊடாடுகின்ற மனித மனத்தின் ஆழமான இருண்ட மூளைகளில் உறையும் உணர்வுகளை மொழியின் வசமாக்கிப் படைக்கப்படுகின்றவையாகவே இருக்கின்றன.

அவரது சில சிறுகதைகளை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு எழுதப்படும் இந்தக் கட்டுரை ஒரு சிறு எத்தனம் தான். அவரது படைப்புக்கள் பற்றிய ஒருமுழுமையான பார்வையாக இது அமைய முடியாதெனிலும் நீண்டகாலமாக என்னுள் உறைந்து கிடந்த லா.ச.ரா படைப்புக்கள் தந்த அனுபவங்களும் தரிசனங்களும் பற்றிய ஒரு பகிர்வு முயற்சியாகவே எழுதப்படுகின்றது.

"உனது எழுத்தின் முழுச்சக்தியையும் பிரயோகித்து நெருப்பு என்று நீ எழுதினால் காகிதத்தில் பொசுங்கின வாசனை வர வேண்டும்" என்று சொன்னவர் லா.ச.ரா. அத்தனை தூரத்துக்கு படைப்பெனும் திரியினை உயர்த்தும் உன்னதமான கலைஞனாக அவர் விளங்குகிறார்.

... சொல் என்பது நான், என் தன்மை, என் பொருள், என் தேடல், என் ஆரம்பம் என் முடிவு, என் மறுபிறப்பு... சொல்லே மந்திரமும் தவமும்.... என்பது படைப்புப்பற்றிய அவரது விளக்கம். அவரது கதைகள் சிறுகதையானாலும், நாவலானாலும் அவரால் கையாளப்படும் மொழியினால் தமக்கான ஒரு ஸ்தானத்தை எப்போதும் தக்க வைத்துக் கொள்வதாகத் திகழ்கின்றன. அவரது எழுத்துக்களில் மிளிர்கிற கவித்துவம் ஒரு தனிச்சிறப்பு.

ஒரு கதையில் பெற்றதாயே தனது குழந்தையின் சிதைந்த தீ மூட்டும் படி நேரிடுகிறது. அந்தத் தாயின் கொடுந்துயரைப் பேச வந்த லா. ச.ரா. "கொள்ளியென்ன கொள்ளி... பெற்ற வயிற்றுச் சதையில் ஒருகொத்து கிள்ளி போட்டாலே பற்றிக்கொள்ளுமே..." என்று சொல்வார்.

பல இடங்களில் எமது வாழ்க்கை பற்றிய தத்துவங்களை இனிதான தன் மொழியியல் உரைத்த விதமே தனி. " எந்த நிமிஷம் எங்கே என்று சாவு காத்திருக்கையிலேயே வாழ்க்கையில் சௌகரியமாய் இருக்க முடிந்தும் ஒருவரையொருவா பரீட்சை பார்த்துக் கொண்டு விரல் வழி வழிய விட்ட தேன் போலவாழ் நாளை நழுவ விடுகிறோம்" என்பது அதில் ஒன்று.

ஒரு சிறுகதையில் பாத்திரமொன்றின் அவசரம் கொள்ளும் மனநிலையைச் சொல்ல வந்த அவர் மாடிப்படியேறும் அந்தப் பாத்திரத்தின் நினைவோட்டத்தை "இன்றைய மாடிக்கு இத்தனை படிகளா?" என்று எழுதுகிறார்.

புத்ர, இதழ்கள், பச்சைக்கனவு, அபிதா, பாற்கடல், த்வானி, சிந்தாநதி, என்பன லா.ச. ராமாமிருதத்தால் எழுதப்பட்ட அரிய படைப்புக்கள். 'பாற்கடல்' பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பாடத்துக்குரிய கதையாகப் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. பலருக்கு நினைவிருக்கக் கூடும். எழுத்தை வாசிப்பை வெறும் பொழுது போக்காகவே கல்விக்குரிய பாடப் பகுதியாகவோ குறுகிய நோக்கத்துடன் கொள்ளாமல் சரத் மானுபம் சார்ந்த நல்ல விடயமாகக் கருதுபவர்களுக்குத் தான் லா.ச. ரா காட்டும் படைப்புலர் வெளியின் பரப்பும் தொலைவும் புலப்படும். சிலர் லா.ச.ராவே சொல்லும் விளக்கம் "எல்லாம் அவரவர் நெஞ்சின் மீட்டலுக்கேற்ப என்பது தான்" சில விஷயங்கள் நேர்ந்து விடுகின்றன. அவை நேர்ந்த விதமல்லாது வேறு விதமாக நேர்ந் திருக்கவும் முடியாது. நேராமலிருக்கவும் முடியாது. அவை நேர்ந்து விட்டமையால் அவற்றில் ஒரு நேர்மையும் உண்டு. இதுவும் லா.ச.ரா கூறிய ஒருகருத்துத் தான்.

# பி.வி. ஸ்ரீ நிவாஸ் -

## நெஞ்சம் மறக்காத மென்குரல்

இசை என்றோ பாடல் என்றோ பேச வருகை யில் தமிழர்களாகிய எமக்குத் தவிர்க்க இயலாமல் நினைவுக்கு வருவது சினிமாப் பாடல்கள் தான். நீண்ட காலமாக இந் நிலைதான் நிலவி வருகின்றது.

நெடுங்காலமாக நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எங்கள் காதுகளில் விழுந்துகொண்டேயிருக்கிற விஷயம் திரைப்படப் பாடல்கள் தான்.

இவற்றுள் அவ்வப்போது நிகழ்கின்ற அதிசயம் போல் வெளிவந்த வருகிற பாடல்கள், அவற்றின் பாடகரது குரலினம், பாடப்படும் விதம், இசையமைப்பு, எல்லாவற்றையும் விட அந்தப் பாடல்களில் அவ்வப்போது வெகு தூக்கலாகத் தெரிந்த கவித்துவச் சிறப்பு ஆகிய காரணங்களால் சிரஞ்சீவித்துவம் கொண்டு விளங்குகின்றன.

பி.வி. ஸ்ரீ நிவாஸ் அத்தகைய பல்சிறப்புகள் கொண்ட பல பாடல்களைத் தந்தவர். அவரது மென்மையான ஆண்மைததும்பும் குரல் இப்போதும் காதில் ஒலிக்கிறது. 'நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்' ' நெஞ்சம் மறப்பதில்லை' 'நிலவே என்னிடம் நெருங்காதே' இந்தப் பாடல்களை நல்ல பாடல்களின் குறிப்பாகப் பழைய பாடல்களின் இரசிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அந்தப் பாடல்களினதும் அது போன்ற பல பாடல்களினதும் தனித்துவச் சிறப்புகள் நினைவில் என்றும் நிலைத்திருக்கின்றன. எழுத்தாளர் ஜெயகாந்தனால் எழுதப்பட்ட 'சிட்டுக்குருவி பாடுது தன் பெட்டைத் துணையை தேடுது' இப்போது நினைத்தாலும் இனிக்கின்ற ஒரு பாடல்.

இது போலவே 'நெஞ்சம் அலை மோதலே கண்ணும் குளமாகவே கொஞ்சும் கண்ணைப் பிரிந்தே போகிறாள். ராதை கண்ணனைப் பிரிந்தே போகிறாள்' ஒரு அற்புதமான பாடல்.

ஒரு பாத்திரத்தின் நெஞ்சிற் கணக்கும் உணர்வு களைத் தனது குரலின் வழியே தரவல்ல அற்புதமான பாடகர் ஸ்ரீ நிவாஸ் எமது மண்ணின் கவிஞர் சு. வில்லரத்தினத்தின் அபிமான பாடலாகிய இதனை அவர் பாடும் போது கேட்டு நெஞ்சம் நெகிழ்ந்த நினைவுகள் அவர் நண்பர்கள் எவருக்கும் மறந்திருக்காது. சு. வி. அரிய கவிஞர் மட்டுமல்ல இனிய பாடகரும் ஆவார். என்பதை நாம் கண்டு கொண்டதே இந்தப் பாடலூடாகத் தான்.

"காற்று வெளியிடைக் கண்ணம்மா" 'தோல்வி நிலையென நினைத்தால்" போன்ற பாடல்கள் பி.வி. ஸ்ரீ நிவாஸ் என்ற அரிய பாடகரை நாம் என்றும் மறந்திருக்க உதவும் நெஞ்சில் நிறைந்த பாடல்களாகும். நெஞ்சை வருடும் சந்தப் பாடல்களின் அருமை பழைய பாடல் இரசிகர்களுக்கு நன்கு புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28, ஓகஸ்ட் – 03, செப்ரெம்பர், 2013
sudarolijaffna@gmail.com
சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி–: 021 567 7609

## உண்மையில் எது வெற்றி?

தரிப்பிடம் இடம் மாற்றம் காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் இந்தப் பத்தி எழுதப்படும்வரை யாழ்ப்பாணத்தில் மினிபஸ்கள் எந்தவித முன்னறிவித்தலுமின்றி புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளன.

பிரதான பஸ் தரிப்பிடத்துக்கு அருகாக அமைந்திருந்த தனியார் பஸ் தரிப்பிடத்தை முற்றவெளிக்கு மாற்றியதை எதிர்த்தே இந்தத் திடீர் புறக்கணிப்பில் ஈடுபட்டிருப்பதாக மினிபஸ் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த இடமாற்றம் மூலம் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கே இலாபம் என்றும், தம்மை வேண்டுமென்றே ஓரவஞ்சனை செய்வதாகவும் இவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பாதிக்கப்படும் எந்தவொரு தரப்பும் தமது கோரிக்கையை முன்வைத்து ஜனநாயக ரீதியான எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது வழமை யான ஒன்றுதான்.


ஆனால், எங்களுடைய தார்மீகக் கோபத்தைக் காட்டுவதற்காக ஏராளமான பொதுமக்களின் வாழ்வியலோடு விளையாடுவதென்பது பொருத்தமற்றது. வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பு, போக்குவரத்துச் சேவையினரின் புறக்கணிப்பு என எல்லாவிதமான எதிர்ப்பு நடவடிக்கைகளின்போதும் எடுத்த எடுப்பிலேயே பாதிக்கப்படுவது பொதுமக்கள்தான்.

'அவலை நினைத்து உரலை இடித்த' கதையாக தமக்குப் பாதிப்பு உண்டுபண்ணியவர்களைப் பழிவாங்குவதாக நினைத்துக்கொண்டு போராட்டக்காரர்கள் அப்பாவி மக்களையே மறைமுகமாக வதைக்கிறார்கள்.

கடந்த இருநாள்களாக பணிப்புறக்கணிப்பு பற்றிய தகவலை அறியாமல், வழமைபோன்று பஸ் வருமென்று மணிக்கணக்கில் காத்திருந்த மக்களின் துயர் மினிபஸ்காரர்களுக்கு எட்டப்போவதில்லை. எத்தனையோ அவசரமான விடயங்களை இந்தப் புறக்கணிப்பு எந்தவித நியாயங்களுமின்றித் தள்ளிப்போட வைத்திருக்கின்றது.

ஆனால் தங்களுக்கு நீதி கிடைத்தால் மட்டும் போதுமென்று நினைக்கும் மினிபஸ்காரர்கள் நாளைக்கே தமக்குச் சாதகமான நிலை உருவானால் மீண்டும் போட்டி போட்டுக் கொண்டு, மக்களை ஏற்றுவதற்கு எந்த முகத்தோடு வருவார்கள்?

உரிமைக்காகப் போராடுவது தவறில்லை. ஆனால் ஒரு முன்னறிவித்தல் கொடுத்து மக்களின் வாழ்வியலை தளம்ப விடாமல் செய்வதே போராட்டத்தின் வெற்றியைத் தீர்மானிக்கும். இனியாவது மக்கள் நலனைப் பேணும் வகையில் போராட்டங்களை ஒழுங்குபடுத்துங்கள்.



# கடவுள் கைவிட்ட தளிர்கள்

அட்டைப்பட ஒளிஓவியம்
விருமாண்டி

■ பிரமன்

"டேய்! என்னையும் விளையாட்டில சேருங்கோடா"

"போடா! நீ நொண்டி.... ஓட மாட்டாய். உதுல இருந்து நாங்கள் விளையாடுறதைப் பார்"

அவன் சுவரோடு தன் ஊன்றுகோலைச் சாய்த்துவிட்டு ஒற்றைக் காலை மடித்து. சப்பாணி கட்டிக்கொண்டு விளையாட்டை வேடிக்கை பார்க்கத் தொடங்கினான். அவனுக்கு ஆயிரம் கால்கள் முளைத்து எல்லோரையும் விடவும் அவனே எல்லாத் திக்குகளிலும் ஒரே நேரத்தில் ஓடியாடிக் கொண்டிருப்பதாக கனவு காணத்தொடங்கினான்.

யாழ்ப்பாணத்தின் பெருந்திருவிழாவில் குவியும் சன வெக்கையால் நசுங்கிக்கொண்டிருக்கிறான் நல்லைக் கந்தன். ஓகஸ்ட் மாதம் விடுமுறை என்பதால் வெளிநாடுகளில் இருந்தெல்லாம் அரைக் காற்சட்டையணிந்து, 'ஐ' போன்களை ஏந்தி வலம் வரும் புலம்பெயரிகளும் ஒருமுறையாவது நல்லூருக்கு வந்து போவதை வழமையாகக் கொண்டிருப்பதால் கூட்டத்துக்குக் குறைச்சலில்லை.

போதாக்குறைக்கு நாட்டிலுள்ள விற்பனை நிலையங்கள் முழுவதும் தமது கிளைகளை எவ்வளவு விலைகொடுத்தேனும் நல்லூரில் திறப்பதற்கு முண்டியடிக்கின்றன. இன்னொரு புறத்தில் போட்டி போட்டுக்கொண்டு நல்லூர்த் திருவிழாவை நேரலையாக ஒலி, ஒளிபரப்ப இலத்திரனியல் ஊடகங்களும் களத்தில் குதித்திருக்கின்றன. இப்போது யாழ்ப்பாணத்தின் ஒட்டுமொத்தப் பார்வையும் நல்லூர்மீதுதான். கார்த்திகைத் திருவிழாவோடு யாழ்ப்பாணமே நல்லூருக்குள் தஞ்சமடைந்துவிடும். அர்ச்சனைக்கும், ஆலயத் திருப்பணிக்கும், கற்பூரத்துக்கும், கச்சானுக்கும், ஐஸ்கிறீமுக்கும், மணிக்கடைக்கும் ஏனைய பொருள்களுக்குமான காசு கரைந்தோடத் தொடங்கியிருக்கிறது.

ஆனால் பணக்காரக் கந்தனின் திருவிழாவில் கடவுளால் கைவிடப்பட்ட தளிர்களின் நடமாட்டம் ஒட்டுமொத்த நல்லூர்த் திருவிழாவையும் கேலிக்குரியதாக்கியிருக்கிறது. மூன்று தசாப்தங்களாக நீண்ட போர், உடைமைகளையும், உயிர்களையும் மட்டும் பறிக்கவில்லை. நிறையப் பேரை அங்கங்களையும் அது காவுகொண்டிருந்தது. அதிலும் குறிப்பாக அங்கங்களை இழந்த சிறுவர்களின் எண்ணிக்கை ஏராளம். அப்படிப்பட்ட அங்கங்களை இழந்து கடவுளால் கைவிடப்பட்ட இந்தத் தளிர்களை நல்லூர் வீதியில் பரவலாகக் காணமுடிகிறது.

தன் வயதையொத்த சிறுவர்கள் ஓடியாடி மணலில் விளையாடுவதை அங்கங்களை இழந்த இந்தச் சிறுவர்கள் தமது ஊன்றுகோலைச் சாய்த்துவிட்டு வேடிக்கை பார்த்து மனதுக்குள் வெதும்ப மட்டுமே முடிகிறது. ஜெய்ப்பூர் முதலான செயற்கை அவயவங்களை வழங்கும் நிறுவனங்கள் இருக்கின்றபோதும், பெற்றோரினது வறுமையும், பிள்ளைகளின் எதிர்காலம் மீதான அவர்களின் அக்கறையீனமும் இன்னமும் இந்தக் குழந்தைகளை இயலாதவர்களாகவே சமூகத்துக்கு அடையாளம் காட்டுகின்றது.

அங்கவீனம் என்பது, பரிதாபப்படவோ அல்லது பரிகசிக்கவோ கூடிய ஒரு விடயமல்ல. ஏனெனில் செயற்கை அவயவங்களின் உருவாக்கம் அங்கவீனங்களை ஒரு குறையாகக் கொள்ளும் மரபிலிருந்து மாற்றத்தை ஏற்படுத்தியிருக் கின்றது. செயற்கைக் காலுடன் நடமாடுபவர்கள் இரண்டு கால் இருப்பவர்களை விடவும் துணிச்சலோடும் உற்சாகத்தோடும் திரிவதைக் கண்முன்னே காணலாம். கால்களை இழந்து செயற்கைக் காலுடன் சைக்கிள் ஓடி, விறகு வெட்டி, அவற்றைக் கூவிக் கூவி விற்பவர்கள் யாழ்ப்பாணத்தில் நிறையப்பேர். அது போன்று அலுவலகங்களில் உயர் பதவிகளில் இருக்கும் சிலர் கூட செயற்கை அவயவங்களைப் பொருத்தியிருந்தாலும் சாதாரண மனிதர்கள் போலவே நடமாடுகிறார்கள்.

போரின் கொடும்பிடிக்குள் கடவுளால் கைவிடப்பட்ட காலத்தில் கால் கைகளை இழந்த இந்தத் தளிர்களின் எதிர்காலம் பற்றி, தம் புலம்பெயர் நாட்டின் பெருமையைப் பறைசாற்ற நல்லூர் வீதியில் மட்டுமல்லாமல், யாழ்.நகரமெங்கும் டொலர்களையும், பவுண்ஸ்களையும் அள்ளியெறியும் புலம்பெயரிகளும் உள்ளூர் தனவந்தர்களும் கொஞ்சம் கண் திறக்க வேண்டும். பொருளாதார நெருக்கடிகளால் முடங்கிப்போன இவர்களின் வாழ்வை, புதிய கால் அல்லது கையைக் கொடுத்து மீண்டும் துளிர்விட தம் பணத்தைச் செலவிடுவது ஆயிரம் கோயில்களைக் கட்டியதற்குச் சமன் அல்லவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அமைச்சின் பின்னணி ?

ஹரன்

**மொத்தத்தில் முப்படைகளுடன் சேர்ந்து பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கிய பொலிஸ்துறையும், முப்படைகளின் பிரதானியான ஜனாதிபதியிடம் அடகுவைக்கப்படுகிறது என்பது துலாம்பரமான உண்மை.**




இது வரை காலமும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிய பொலிஸ் திணைக்களம் சட்டம் மற்றும் ஒழுங்கு என்ற புதிய அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தச் செய்தி தற்போது அரசால் வெளியிடப்படும் மிகைப்படுத்தப்பட்ட பிரசாரமாகவே உள்ளது. பொதுமக்கள் சார்ந்த செயற்பாடுகளில் முக்கிய பங்காற்றும் பொலிஸ்துறையை முப்படைகளை நிர்வகிக்கும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்து பிரிப்பதற்காகவே இச்செயற்றிட்டம் ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக புதிய அமைச்சு உருவாக்கத்தை நியாயப்படுத்தியிருக்கிறார் இலங்கையின் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம். பொலிஸ்தரப்பை சுயாதீனமாக செயற்பட வைக்கவே இந்த அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அரசு தரப்பு சொல்கிறது. கேட்பவன் கேணையனாக இருந்தால் கேள்வரகில் நெய் வடியும் என்பதை போல் புதிய புதிய கதைகளை அவிழ்த்துவிட்ட வண்ணம் இருக்கின்றனர் அரச எடு பிடிகள்.

பொலிஸ்துறையை தனியாகப் பிரித்து ஜனாதிபதியிடம் ஒப்படைத்து விட்டால் சிவில் செயற்பாடுகளில் இராணுவத் தலையீடு, அரசியல் தலையீடு இருக்காது என்ற கதையாக நல்ல பிள்ளைக்கு நடித்திருக்கிறார் நீதியமைச்சர் ஹக்கீம். சுயாதீன நீதித்துறை மீதே நிறைவேற்று அதிகாரம் தனது நகங்களை ஆழமாக பதித்த போது கூட ஒரு நீதி அமைச்சர் என்பதை கூட மறந்து, வாய் பொத்தி அதிகார பீடத்திற்கு வால் பிடித்த ஹக்கீம் இப்போது தான் ஞானம் வந்ததை சிவில் செயற்பாடுகளில் அதிகாரத் தலையீடுகள் பற்றி கதைக்கத் தொடங்கியிருக்கிறார். அதிகார பீடத்திற்கு வால் பிடிப்பதற்காக எத்தகைய பணிவுக்கும் செல்வோம் என்பதைப் புதிய அமைச்சு விவகாரத்தினை விளங்கப்படுத்தியமை மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார் நீதியமைச்சர். ஏற்கனவே இலங்கை இனப்பிரச்சினை பற்றி ஆராய்கிறோம் என கூறி வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு கிளம்பிய கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இலங்கை இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வாக பொலிஸ் துறையைத் தனியான அமைச்சின் கீழ் கொண்டு வர வேண்டும் எனப் பரிந்துரைத்திருந்தது. இலங்கை இனப்பிரச்சினைக்கும் பொலிஸ் துறையைத் தனியாகப் பிரிப்பதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்பது அவர்களுக்கே மட்டும் தெரிந்த சிதம்பர இரகசியம்.

சில உப்புச்சப்பற்ற பரிந்துரைகளை கொண்டு உருவாக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் தமக்கு எந்த பாதிப்பும் இல்லையென தெரிந்தெடுத்து அதை நிறைவேற்றி விட்டால் வெளிநாடுகளுக்கு படம் காட்டலாம் என அரசும் நன்கு சிந்தித்து களமிறங்கியிருக்கிறது. குற்றவாளிகளிடமே அவர்களைப் பற்றி விசாரணை செய்யுமாறு பணிக்கப்பட்ட அதிசய இராணுவ உள்ளாய்வு விசாரணை பற்றிய பரிந்துரையையும் அரசு கடந்த காலத்தில் நிறைவேற்றியிருந்தது. தற்போது அடுத்த பரிந்துரையாக பொலிஸ்துறையை தனியான அமைச்சின் கீழ் பிரகடனப்படுத்தும் நடவடிக்கையிலும் அரசு மும்முரமாகவே இறங்கியிருக்கிறது. அதன் ஓரங்கமாகவே சட்டம் மற்றும் ஒழுங்கு எனும் புதிய அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆனால் இந்தஅமைச்சு உதயமான மறுநாளே இதனால் எமக்கு எந்த பாதிப்பும் இல்லை என்பது ஒரு இராணுவ அதிகாரியை இந்த அமைச்சின் செயலாளராக நியமித்ததன் மூலம் அரசு பகிரங்கப்படுத்திவிட்டது. எல்லாவற்றுக்கும் இராணுவ அதிகாரிகளை நியமிக்கும் பழக்கதோசத்திலேயே இந்த அமைச்சுக்கும் முன்னாள் இராணுவ அதிகாரிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் நந்தன மல்லவராய்ச்சியை நியமித்து விட்டது போலும்.

அரசு எல்லாத்துறைகளிலும் இராணுவ அதிகாரிகளை நியமிப்பது தனது உத்தரவுகளை வலுக்கட்டாயமாக திணிக்கும் ஒரு செயற்பாடாகவே பார்க்கப்படுகின்றது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நாங்கள் சர்வதேசம் சொல்ல முன்னரேயே நடைமுறைப்படுத்தத் தொடங்கினோம் என்று காட்டவே இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டதாக நோக்கப்படுகின்றது. இன்னும் சில மாதங்களுக்குள் பொதுநலவாய மாநாடு இலங்கையில் இடம்பெறவுள்ளது. அத்துடன் நவநீதம்பிள்ளையின் வருகை இலங்கைக்கு காய்ச்சலை அதிகமாக்கி இருக்கின்றது. இதற்காகவாவது ஏதாவது செய்தாக வேண்டும் என்ற கட்டாயத்தில் இந்த அமைச்சு உருவாக்கக்கப்பட்டதா என்ற சந்தேகம் எழுந்து நிற்கிறது.

ஒரு வேளை வடக்குமாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அதன் முழு அதிகாரமும் தனது கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அமைச்சிடமே இருக்கும்என்பதைக் காட்டவும் இந்த அமைச்சு உருவாக்கப்பட்டிருக்கலாம். எந்த அதிகாரத்தையும் எவரும் என்னிடமிருந்து பறித்து விடக்கூடாது என ஜனாதிபதி கர்ச்சித்து வரும் நிலையில் பொலிஸ் துறையை ஒரு அமைச்சொன்றுக்குள் உள்வாங்கி அதன் மூலம் தனது நேரடி தலையீட்டை அதற்குள் வைத்திருக்கலாம் என ஜனாதிபதி சிந்திப்பதாக தெரிகிறது. ஏற்கனவே வாஸ்குணவர்த்தன வழக்கு, வெலிவேரியா துப்பாக்கிச்சூடு என்பன பொலிஸ்துறைக்கு மாபெரும் கறையாகவே பார்க்கப்படுகின்றது.

இந்தநிலையில் வெலிவேரியா சூட்டுச்சம்பவம் சர்வதேசமத்தியில் பொலிஸாரோடு சேர்த்து இராணுவத்தையும் தலைகுனிய வைத்திருக்கிறது. அது பற்றிய கேள்விகள் எழுமிடத்து அதனை எதிர்கொள்ளவும் தனியான அமைச்சொன்று உருவாக்கப்பட்டதா என்ற யூகமும் எழுந்து நிற்கிறது.

மொத்தத்தில் முப்படைகளுடன் சேர்ந்து பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கிய பொலிஸ் துறையும், முப்படைகளின் பிரதானியான ஜனாதிபதியிடம் அடகுவைக்கப்படுகிறது என்பது துலாம்பரமான உண்மை. இனி வருங்காலங்களில் கலகமடக்கும் பொலிஸாரை கொண்டு அடக்க வேண்டிய ஆர்ப்பாட்டத்தை கூட கொமாண்டோ படைகளை அனுப்பி புதிய போர்க்களங்களை அரசு உருவாக்க முனையக் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெகன்

உண்மைச்சம்பவம்

# மனிதாபிமானம் அளித்த உயிர்ப்பிச்சை



அமெரிக்காவின் தெற்கு கரோலினா மாநிலத்தில் நான்கு வழிப்பாதைகளைக் கொண்ட அகன்ற நெடுஞ்சாலை அது. 2000 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஒரு நாள் மத்தியான வேளை.... மேலே சலனமற்ற நீலநிற வானம். அருமையான காலநிலை.

65 அடி நீளமான மண்ணென்னை நிரப்பிய ஒரு பவுசரை உல்லாசமாக ஓட்டிக்கொண்டிருந்தான் பாரஊர்தி ஓட்டுநர் ஜவ்றி. ஜோர்ஜ்டவுன் எனும் கரையோர நகரத்தில் மண்ணெண்ணையை இறக்கிவிட்டு வீடு திரும்பும் அவசரம் அவன் முகத்தில் தெரிந்தது. அன்று அவனது 28 ஆவது பிறந்த நாள். வீட்டிலே மூன்று மாதக் கர்ப்பிணியான அவன் மனைவியும் வயதில் குறைந்த மூன்று மகள்மாரும் அவனது வருகைக் காக ஆவலுடன் காத்திருந்தனர்.

வேகமாக எதிர்ப்பட்ட ஒரு பாலத்தைக் கடந் தான். வலது பக்கத்திலே கண்ணுக் கெட்டிய தூரம் வரை நெடிய மராங் களும் சைப்பிரஸ் வகைப் புல் தரையும் இடது புறத்தில் ஒரே சேற்று நிலமுமாக இருந்ததை ஜவ்றி கண்டான். அடிக்கடி அந் தப் பாதையில் போய் வந்தால் அந்தக் காட்சிகள் அவனுக் குப் பரீட்சயமாகியிருந்தன. எதிரே போய்கொண்டிருந்த ஒரு வாக னத்தை முந்திக்கொண்டு வேகத்தை அதி கரித்தான்.

எதிரே அந்தப் பாதையின் அரைப்பகுதியை ஆக்கிர மித்துக் கொண்டு பெரும் மரக்குற்றிகளை ஏற்றியிருந்த ஒரு பாரிய டிரக் நிறுத்தப்பட்டிருந்ததை அவன் எப்படிக் கவனி யாமல் விட்டான் என்பது ஆண்டவனுக்குத் தான் வெளிச் சம். மணிக்கு 85 கிலோ மீற்றர். வேகத்தில் சென்ற அவ னது 25 தொன் பாரமான பவுசர் அதேவேகத்தில் மரம் ஏற்றிய டிரக்கின் மீது மோதியது. நேரம் மதியம் 1.40 அந்த விபத்தில் அவனது பவுசரின் முன்பக்கம் முற்றிலும் நொறுங்கி விட்டது.

என்ன நடந்ததென்று உணரமுன்னரே ஜிவ்றி மயக்க மடைந்துவிட்டான். அதிஸ்டவசமாக மீண்டும் அவன் சுய நினைவை அடைந்தபோது ஒரு மிகப் பயங்கரமான ஆபத்தில் தான் சிக்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தான். அவனது மார்பும் கால்களும் விடுவித்துக் கொள்ள முடி யாத விதத்தில் நொறுங்கிய வாகனத்துக்குள் மாட்டிக்கொண்டி ருந்தன. உடனடியாக அவன் நினைவுக்கு வந்தது பின்னர் இணைக்கப்பட்டிருந்த பவுசரில் இருந்த எளிதில் தீப்பற்றக் கூடிய மண்ணெண்ணைதான். பவுசர் தீப்பற்றிக் கொண்ட தால் அவனது சாம்பல் கூட மிஞ்சாது என்பது அவனுக்குத் தெரியும். ஏற்பட்டிருந்த காயங்களினால் உடல் ரணமாக வலித்தது. தனது சக்திகளையெல்லாம் திரட்டி உதவி உதவி என்று அபயக்குரல் எழுப்பினான்.

அந்த நேரத்தில் ஜோர்ஜடவுன் நகரத்தில் இருந்து தனது டிரக் வாகனத்தில் வந்து கொண் டிருந்தான். 56 வயதான அன்ட்ரூ கொலினங். காட்டு விறகுகளை வெட்டி நகரத்துக்குக் கொண்டு வந்து விற்பது தான் அவன் தொழில். விபத்து நடந்தபோது அந்த இடத்திலிருந்து சுமார் அரைக் கிலோமீற்றர் தூரத்தில் அவனது வாக னம் வந்து கொண்டிருந்தது. விபத் தைப் பற்றி அவன் அறியவில்லை. ஆனால் ஒரு பெரும் ஓசை யுடன் தீப்பிழம்புகளோடு கூடிய பெரும் காடு மரங்கள் வானில் பறந்ததை அவன் அவதானித்தான். சிறிய வயதில் விபத்தொன்றில் சிக்கி அவன் ஒரு கண்பார்வையை இழந் திருந்தான். ஒன்பது பிள்ளைகளின் தந்தையான அவன் உடனடியாகவே மனிதாபிமான உணர்வால் உந்தப்பட்டு என்ன நடந்த தென்பதை அறிய விரைந்தான்.

ஏறத்தாழ அதே வேகத்தில் எதிர்ப்பக்கமாக தனது வாக னத்தில் வந்து கொண்டிருந்தான். 26 வயதான டக்ளஸ். அவன் ஒரு ஸ்தாபனத்தின் விற்பனை முகவராகப் பணியாற்றிக் கொண்டிருந்தான். விபத்தைக் கண்ட அவன் யாராயிருந் தாலும் இந்த விபத்தில் உயிரோடு இருக்கப் போவதில்லை என்று எண்ணினாலும் உடனடியாகவே தனது காரை விட்டிறங்கி டிரக்கை நோக்கி ஓடினான். அதற்குள் ஏற் கனவே அங்கு வந்திருந்த அன்ட்ரூ கொலின்ஸ் டிரக்கின் கத வைத் திறக்க முயன்று கொண்டிருந்தான். அவனோடு டக்ளஸும் இணைந்து கொண்டான்.

நீக்ரோ கலப்பு இனத்தவனான டக்ளஸ் நல்ல கட்டுமஸ் தான தேகத்தைக் கொண்டவன். ஜிவ்றியின் மெல்லிய முன கல் ஒலி அவன் உயிரோடு இருப்பதை உணர்த்தியது.

நாங்கள் வந்துவிட்டோம். பயப்படமால் இரு என்று இருவரும் திரும்பத் திரும்பக் கத்தி னார்கள். ஜிவ்றியின் மனோவலிமை இத னால் அதிகரிக்கும் என்பதும் உயிர்தப் பும் நம்பிக்கை அதிகமாகும் என்பதும் அவர் களுக்குத் தெரியும். ஜிவ்றியின் வாகன முற் பக்கம் ஏறக்குறைய முற்றிலும் நசுங்கி யிருந்தது. ஜிவ்றியின் உடல் வெளியே எடுக்க முடியாதபடி நசுங்கிய பாகங்களில் மாட்டிக்கொண்டிருந்தது. டிரக்கின் பாகங்களை வெட்டித்தான் அவனை வெளியே கொண்டு வரமுடியும். இவர்களைக் கண்ட ஜிவ்றி பின்னால் 50 கலனுக்கு மேல் பெற்றோல் இருக்கின்றது என்று தீனக் குரலில் கூறினான். மிகவும் அதிஸ்டவசமாக ஏற்பட்ட பாரிய விபத்தில் பவுசர் பகுதியிலிருந்து கபின் பகுதி பிய்த்துக் கொண்டு போய்விட்டதால் பவுசர் உடனடியாகத் தீப்பற்றவில்லை. அப் படி நடந்திராவிட்டால் கதையே வேறு மாதிரியிருந்திருக்கும்.

ஏற்படக் கூடிய ஆபத்தை உணர்ந்திருந்த போதும் தயங்கா மல் டக்ளஸ் உள்ளே புகுந்து கைகளினால் நசுங்கிய பாகங் களை விரிக்க முயன்றான். ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறாது என்பது அவர்களுக்கே தெரியும். எந்தக் கணத் திலும் பெற்றோல் டாங்கி தீப்பிடிக்கலாம். ஆகவே உதவிக்கு வந்த இருவரும் எந்த நிமிடத்திலும் பின் வாங்கக் கூடிய சாத்தியம் இருந்தது. இனி ஆண்டவன் தான் என்னைக் காப்பாற்ற வேணும். என்று நினைத்த ஜிவ்றி மெல்ல உணர் விழக்கத் தொடங்கினான். தலையில் ஏற்பட்டிருந்த காயத்தி லிருந்து வடிந்த இரத்தம் வழிந்து அவனது கண்களை மறைத்தது.

இனி ஆண்டவன் தான் என்னைக் காப்பாற்ற வேணும். என்று நினைத்த ஜிவ்றி மெல்ல உணர் விழக்கத் தொடங்கினான். தலையில் ஏற்பட் டிருந்த காயத்தி லிருந்து வடிந்த இரத்தம் வழிந்து அவனது கண்களை மறைத்தது.

இதற்கிடையில் எங்கிருந்தோ பலர் அந்த இடத்தில் கூடி யதை அவர்கள் அவதானித்தனர். ஆனால் ஆபத்தை உணர்ந்த அவர்கள் அருகில் வரத் தயங்கினார்கள். சற்றுத் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்ட அன்ட்ரூ மூச்சை ஒரு முறை ஆழமாக இழுத்தபடி டக்ளஸைப் பார்த்துக் கத்தினான். எனது கோடாரி வாகனத்தில் இருக் கிறது எடுத்துக் கொண்டு ஓடி வருகிறேன். அது வரை நீ இங்கே இரு எனச் சொல்லிக் கொண்டே ஓடினான்.

ஒரு சில நிமிடங்களின் பின் விறகு கொத்தும் பெரிய கோடாரியோடு வந்த அன்ட்ரூ வாகனத்தின் கூரையைத் தகர்க்கத் தொடங்கினான். அந்த வேளையில் தீயின் நாக்கு கள் மெது மெதுவாக டிரக்கின் பெற்றோல் டாங்கியை முத்த மிடத் தொடங்கியதை அவர்கள் கண்டார்கள். எந்த நிமிடத்தி லும் வெடிப்பு ஏற்பட்டு மூவருமே சாம்பராகலாம். ஆனாலும் அவர்கள் தயங்கவில்லை. தமது உயிருக்காகப் பயப்பட வில்லை. உள்ளே டக்ளஸ் ஜிவ்றியின் தலையை ஏந்தியபடி இருக்க ஆவேசம் வந்ததுபோல் கூரையைக் கோடாரியால் வெட்டிக் கொண்டிருந்தான். அன்ட்ரூ ஏற்கனவே ஒரு கண்பார்வையை இழந்திருந்த அவனது பார்வையைப் புகை பூரணமாக மறைத்தது. இருந்தா லும் சோர்ந்து விடவில்லை. அவன் மனிதாபி மானம் கொண்ட வனுக்கு இறைவனும் துணையிருப்பான் என்பது அங்கே நிரூபண மாகியிருந்தது.

கூரை எப்படித் தகர்ந்தது எப்படிக் கூரை வழி யாக உள்ளே நுழைய முடிந்தது என்பதெல்லாம் புரியாத புதிராகத்தான் இருக்கிறது. இருவரும் மிகவும் சிரமப்பட்டு ஜிவ்றியின் உடலை வெளியே எடுத்தார்கள். இதற்கிடையில் பெற் றோல் தாங்கியில் இருந்து வழிந்தோடிய பெற்றோல் தீப் பிடித்து எல்லா இடமும் பரவத் தொடங்கியது. மூவரின் கைகளிலும் கால்களிலும் தீ நாக்குகள் படரத் தொடங்கியதால் உரோமம் கருகும் வாசனை வரத் தொடங்கியது. உடை களும் உடைமைகளும் தீப்பற்றிக் கொண்டன.

கடைசி இமாலய முயற்சியாக எரியும் தீயுடன் இருவரும் ஜீவ்றியையும் தூக்கிக் கொண்டு ஓடி புல் தரையில் விழுந்து புரண்டு தீயை அணைத்துக் கொண்டார்கள். பாதுகாப்பான தூரத்திற்கு வந்து விட்டதையும் உணர்ந்து கொண்டார்கள்.

அடுத்த கணமே பவுஸர் தீப்பற்றிக் கொண் டதோடு பயங்கரமான நெருப்புக் கோலத் தோடு பல அடி துாரத்திற்கு வானில் பறந்தது. அந்த நெடுஞ்சாலை முழுவதுமே ஒரு நெருப்புக் கோளமாக காட்சியளித்தது. அத்தோடு தொடர் வெடிப்புக்களால் ஏற்பட்ட சத்தத்தில் அந்தப் பிரதேசமே அதிர்ந் தது. கூடியிருந்த கூட்டம் எப்படி ஓடித்தப்பினார்கள் என்று தெரிய வில்லை. 25 அடி சுற்றளவுக்கு எல்லாவற்றையும் அழித் தபடி நெருப்புக் கோளமென்றே காட்சியளித்தது. இதற்குள் எந்தப் புண்ணியவானோ அம்புலன்ஸ் வண்டிக்கும் தீயணைப்பு வாகனத்துக்கும் தகவல் கொடுத்திருந்தான்.

கூவிக் கொண்டு வந்த அம்புலன்ஸை கண்ட பிறகுதான் அன்ட்ரூஸுக்கும் டக்ஸுக்கும் மூச்சு வந்தது. இதற்கு முன் ஒருவரையொருவர் சந்தித் தேயிராத அவர்களை மனிதாபி மானம் ஒன்றி ணைத்தது. அக்கினி பகவான் தான் பரவி யதைப் போல் அவர்கள் உள்ளத்திலும் நட்பைப் பரவியதைப் போல் அவர்கள் உள்ளத் திலும் நட்பைப் பரவிவிட்டான்.

பல நாள் சிகிச்சைக்குப் பின்னர் மூவருமே பூரண சுகம் அடைந்தனர். அதற்குப் பிறகு அதே வருடம் ஜூலை மாதம் 28 ஆம் திகதி சார்ள்ஸ்டன் எனும் நகரத்திலே ஏற்பாடு செய் யப்பட்டிருந்த ஒரு விஷேட வைபவத்தில் அன்ட்ரூ மற்றும் டக்ளஸ் ஆகிய இருவருக்கும் வீரத்துக்கும் மனிதாபிமானத் திற்கும் அதியு யர்ந்த ஜனாதிபதியின் விருது வழங்கப்பட்டு. அவர்கள் அந்த மாகாணத்திலேயே மிகப் பெரிய கௌரவத் தைப் பெற்றுக் கொண்டார்கள்.

தலைக்காயம் காரணமாகப் பல நாள்கள் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக் கொண் டிருந்த ஜிவ்றி தன்னைச் சந்திக்க வந்த செய்தி யாளர்களுக்கு கூறிய வாசகம் இது.

இதுவரை பிறந்தநாள் கொண்டாடிய எவருக்குமே கிடைக் காத ஒரு பரிசை அவர்கள். இருக்கும் எனக்கு அளித்துவிட் டார்கள். ஆம் அவர்கள் எனது பிறந்த நாளுக்காக அளித்த பரிசு. எனது உயிர் இனி நான் வாழும் ஒவ் வொரு நாளும் அவர்கள எனக்களித்த பரிசோடு தான் வாழ்வேன். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாமே என் இறைவனுக்காக......

— சிறுகதை —

● பு.பிலோமினா,
ஊவாக்கெல, லிந்துவ

நேன்சி ஒவ்வொரு நாளும் குமுறிம் குமுறலோடு அன்றும் குமுறிக்கொண்டிருந்தாள். "இறைவா உலகத்தில எல்லா அம்மாக்களையும் நல்லபடியா வச்சிருக்கிறியே என்னோட இந்த அப்பாவி அம்மாவை மட்டும் இந்தக் கோலத்தில வச்சிட்டியே" என்று நேன்சியின் விழிகள் கரையை மீறிடும் அலையைப்போல் வியர்த்தது.

"நான் இவ்வளவு பெரியாளாகியும் என்னோட அம்மா இந்தப்பாடு படனுமா" என்று வருந்தினாள். என்னதான் இல்லாமல் போனாலும் இறைபக்தி நேன்சியிடம் அதிகமாகியிருந்தது. இதைக்கொண்டுதான் நேன்சின்கு அதிக பக்க பலம் கிடைத்தது. இப்படியிருக்கையில் அம்மாவான மேரி வெளியே சென்று பத்திரிகையும் கையுமாக வந்தாள்.

"இந்தா இதப்பிடி அம்மாயிருக்கையில இத வாசி என்று மேரி கொடுக்க, பத்திரிகையை நேன்சி "ஆமாம்மா நான் இருக்கிறதுல இதுமட்டும்தான் குறைச்சல். சரி குடு என்னதான் போட்டிருக்கு பார்ப்பம்" என்று பக்கங்களைத் திருப்பினால். வேலைகளுக்கான நிறைய விளம்பரம் இருந்தது. ஒரு சிறுவர் மடத்துக்கு சிறுவர்களைப் பராமரிப்பதற்கான வேலை போடப்பட்டிருந்தது. நேன்சிக்கு மிகவும் பிடித்ததாகவும் மனம் நிறைந்த இன்பத்தில் ஒருமுறை கண்களை மூடி

"என் யேசுவே என் மேலத்தான் உங்களுக்கு எவ்வளவு அன்பு. நான் கேட்டதையெல்லாம் நிறைவேற்றினீங்க. நான் நினைத்ததையெல்லாம் நேரம் கழித்தாவது தந்திடுவீங்களே! எனக்கு எல்லாமே நீங்கதான் .... நீங்கதான்' என்று கண்ணீரால் நன்றி கூறினாள். அம்மாவிடம் ஓடிப்போய் "அம்மா இங்க வாம்மா... இப்படி நில்லு" என்று கூறி வேலை சம்பந்தமானவைகளைக் கூறினாள். கூறிய உடனேயே அம்மாவின் கண்கள் சிவந்தன. அதற்கு "ஐய்யோ அம்மா என்னையக் கவலையும் கண்ணீருமாக அனுப்பி வைக்காதை.... நான் வேலைதானேம்மா செய்யப் போறேன்" என்று கூற,

அம்மா "சரி சரி இறைவனோட ஆசிர்வாதத்தோட போயிட்டு வா" நேன்சி புறப்பட்டாள். அம்மாவ தாஜபன்னிய நேன்சிக்குத் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அமிலத்தை அருந்தியமைப்போல் அம்மாவை விட்டுப் பிரிந்து நிலை தடுமாற்றத்தோடு ஒருவாரு அந்த மடத்தை வந்து சேர்ந்தாள்.

அங்கு மழலைகளின் குரலோசை குயிலோசைபோல் நெஞ்சத்தை வருடியது. அங்கு உரிமையாளரான திருமதி டேவிட்டிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு தனது பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டாள். ஏராளமான குழந்தைகள் ஏதோ ஒரு எதிர்பார்ப்போடும் ஏக்கத்தோடும் காணப்பட்டார்கள். நேன்சி ஒவ்வொரு குழந்தையையும் அன்பு முத்தங்களால் அரவணைத்துக் கொண்டாள். அதில் ஒருத்தன் மட்டும் பின் வாங்கி ஒழிந்து நின்றான். குட்டையான காற்சட்டையும் பெனியனும் உடுத்திக் கொண்டு வாயில் சூப்புவையும் உறிஞ்சியவாரு நின்றான். இதைக் கவனித்த நேன்சி ஓடிப்போய்,

அப்படியே தூக்கி அள்ளிக்கொண்டாள். "ஏம்பா உன்னோட பெயர் என்ன என்று நேன்சி கேட்க அ.... அ.... அபினேஷ்" எனக் கூறினான். " சரிப்பா உன்னைய அபி"னு கூப்புடுறேன்.

"சரி அபி ஏன் என்னையைக் கண்டு ஒழிஞ்சு நிற்கிற ஏன் பயமா?"

அபி 'இல்லை' எனக் கூறினான்.

அப்படினா வெட்கமா? இல்லையே என்று அபி பதில் சொல்ல அவனது கெஞ்சலான வாய்மொழி கேட்டு நேன்சி நெஞ்சம் கொள்ளைபோய் நின்றாள். இப்படியிருக்க நேன்சி தனது கடமையெல்லாம் திட்டமிட்டுச் செய்தாள். மழலைகளோடு மழலையாக மாறி, அனைத்துக் குழந்தைகளையும் சந்தோஷத்தின் எல்லைக்கே கூட்டிச் சென்றாள் நேன்சி.

அபி அதிகம் சிறியவனாயிருந்ததால் அவன் மேல் அன்பும் அனுதாபமும் அதிகமாயிந்தது நேன்சிக்கு. அபி ஓடி வரும்போது அவனது நெழி நெழி முடிகள் விரிந்து ஆடும். இவைகளையெல்லாம் நேன்சி ரசித்து ரசித்து சந்தோஷிப்பாள். இரவில் அபியை தூங்க வைத்துவிட்டு அவனது கால் மாட்டிலேயே படுத்துக்கொள்வாள். அபிக்கு நேன்சி தாயாகவே மாறிப்போனாள். அபியைப் பார்க்கும் போதெல்லாம் அவனுக்கும் தனக்கும் ஏதோ ஒரு நெருங்கிய பந்தம் இருப்பதாகவே நினைத்துக் கொள்வாள்.

இப்படியிருக்கையில் அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை, நேன்சி ஞாயிறு ஆராதனைக்கு அபியையும் மற்றச் சிறுவர்களையும் அழைத்துச் சென்று ஆராதனையில் கலந்து கொண்டாள். பின்பு அனைவரையும் பக்குவமாக அழைத்து வந்தாள். உள் நுழையும்போது ஒரு கார் வாசல்முன் நிறுத்தப்பட்டிருந்தது. அபி காரைக் கண்டவுடன் "கார் கார்" எனத் துள்ள ஆரம்பித்தான். அதற்குள் நேன்சி,

"டேய், டேய் என்னையை வம்புல மாட்டி விட்டுடாத, கார்ல கீறல் ஏதும் பட்டிட்டாப் போச்சு" என்று அபியைத் தூக்கிக்கொண்டு உள் நுழைந்தாள்.

இவர்கள் வரும் சத்தத்தைக் கேட்டு திருமதி டேவிட் "வந்து ட்டீங்களா?" எனக் கூறிக்கொண்டே அபியை நோக்கி,

"அபி குட்டி இங்கே வா... உன்னோட அம்மா வந்திருக்காங்க... உன்னைப் பார்க்க" எனக் கூறி,

'நேன்சி அபியை கூட்டிட்டு வாம்மா'' என்று கூறி, அபியோட அம்மாவையும் அழைத்தார் திருமதி டேவிட்.

அபியின் அம்மா ஆவலுடன் வந்தாள். வந்தவள் ஒருமுறை அதிசயத்தால் நின்று விட்டாள்.

திடீரென்று "நேன்சி....."என்று அலறிய குரலுடன் ஓடிவந்தாள் அபியின் அம்மா. அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்த்த நேன்சியும் அதிசயத்துக்குள்ளானாள்.பிறகுதான் தெரிய வந்தது இருவரும் நெருங்கிய நண்பிகள் என்று. பிறகு நேன்சி "ஏய் பிரின்சி, நீ எப்படி இங்க" என்று கூறிக்கொண்டே பதறியடித்துக்கொண்டு ஓடினாள்.

பிறகு பிரின்சி, "அபி ஏம்புள்ளதான் நேன்சி" எனக் கூறிக் கொண்டே நேன்சியின் தோள்களில் சாய்ந்துக் கொண்டு.

"என்னைய விட்டுட்டு எங்கப்போன நேன்சி, உன்னையை எங்கெல்லாம் தேடினேன். என் வாழ்க் கையில எல்லா நிமிஷமும் என்னோட இருந்தியே திடீரென்று என்னைய மறந்துட்டியா..எனக்கு யாருமே இல்ல யாருமே இல்ல" என்ற பிரின்சியின் வார்த்தையினூடான கண்ணீர்த் துளிகள் நேன்சியின் தோள்களை மழையாய் நனைத்தது.

அதற்கு நேன்சி,

"ஏய் பிரின்சி என்ன இது. குழந்தை மாதிரி" என்று அவளை நிமிர்த்தி அருவியாய் வழிந்தோடிய அவளது கண்ணீரைத் துடைத்தாள்.

"இங்கப்பாரு பிரின்சி, உலகத்துல ஏதோ ஒரு நிலையில ஏதோ ஒரு காரணத்தினால நாம பிரிய வேண்டியாகிறதுடா. அதிலே இறைவனுக்கு ஏற்புடையதாக இருந்தால், எப்பிடியும் சேர்த்து வச்சிருவாரு. அப்பிடியும் நாம ஒன்று நேராமப் போனாலும் அவுங்கள கைவிட்டுறது கூடாது. அவங்க எங்க இருந்தாலும் சந்தோஷமா இருக்கனும்னு பிரார்த்திக்கனும்"

"இப்ப பாரு உன்னையோட சேர்த்து உன்னோட குழந்தையும் என்னையோட சேர்த்துவைச்சிருக்காரு இறைவன். எவ்வளவு புனிதமானவர் பாரு" என்று நேன்சி பிரின்சியைத் தேற்றி அன்பால் அரவணைத்துக் கொண்டாள். பிரின்சியும், நேன்சியும் ஒரே வகுப்பில் படித்தவர்கள் பிரின்சி பெரிய இடத்துக்காரி. ஆனாலும் நேன்சியின் அன்பும், பாசமும் பெரிதாய் தோன்றியது.

பிரின்சி நேன்சிக்கும் சேர்த்தே சாப்பாடெல்லாம் கொண்டு போவாள். பிரின்சிக்குப் பள்ளியில் ஏதாவது பிரச்சினை என்றால் அவை அனைத்தையும் முறியடித்து அவளை உயர்த்துவதே நேன்சியின் வேலை. வீட்டுக்கு நேரமாகி வந்தாலும் என்னாலதான் நேரமாகிவிட்டது என்று எல்லா ஏச்சையும் பழிகளையும் நேன்சியே ஏற்றுக்கொள்வாள். இப்படியிருக்கையில் உயர்படிப்புக்காகப் பிரின்சி போகவேண்டியிருந்தது. பிரின்சி நேன்சியை வற்புறுத்தினாள் "வா என்னோட படிக்க" என்று அம்மாவின் நிலைமையால் நிராகரித்தாள் நேன்சி.

நேன்சியைப் பிரிய வலிமையில்லாமல் வேதனைப்பட்டாள் பிரன்சி. பின்பு பிரன்சியின் பெற்றோர் தண்டிக்கலாயினர். பின்பு பிரின்சி, நேன்சியின் பவித்திரமாக நட்பு எந்த வழியிலேயும் தொடர்பில்லாமல் பெற்றோரால் தகர்த்தெறியப்பட்டது. பின்னர் பிரன்சி தனது உயர்படிப்பிலேயும் அதிக மதிப்பெண்கள் பெற்று, ஒரு வைத்தியராகப் பணிபுரிந்தால். அவளோட வெற்றியெல்லாம் நேன்சியோட பகிர்ந்துகொள்ள முடியலேயே என்று வேதனைப்படு வாள்.

இப்படியிருக்க பிரன்சியைத் திருமணம் செய்து கொடுக்க ஆயத்தமாகினர் பெற்றோர். பிரன்சியும் திருமணத்துக்கு ஏற்றுக்கொண்டாள். பிரன்சிக்கு ஏற்ற அன்பான ஒரு கணவன் அமைந்தான். அவன் பெயர் 'திலீப்'.

திலீப் வித்தியாசமானவன் பிரின்சியை ஒரு குழந்தையைப்போல் கவனித்தான். அதன் பிறகு பிரின்சிக்கு ஒரு அழகான குழந்தையும் பிறந்தது. அவன்தான் அபி. அபி பிறந்து மூன்று மாதங்கள் கழிந்தது. பின்னர் திலீப்புக்கு வேலை விடயமாக 2 வருடத்துக்கு வெளிநாடு செல்லவிருந்தது. பிரின்சியும் குழந்தையும் விட்டுட்டுப் போகமுடியாத நிலைமையில் தவித்தான். பின்னர் அவளுக்கு போகவேண்டியதாகவே ஆயிற்று. இரண்டு வருடம் பழித்து வரவேண்டிய திலீப் 5 வருடங்கள் கழித்தும் வரவேயில்லை.

பின்னர்தான் அபியை இந்தச் சிறுவர் மடத்துக்குச் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பிரின்சிக்கு பிரின்சியின் இந்த நிலையை அறிந்த நேன்சி மிகவும் வேதனைப்பட்டாள். பிரின்சியைப் பார்த்து,

"பாரு பிரின்சி இத்தன வருஷத்துக்குப் பிறகு என்னையை உனக்குக் கொடுத்த கடவுள் உன்னோட திலீப்பைக் கட்டாயம் குடுப்பாரம்மா, இறைவனுக்காகக் காத்திரு" என்று கூறி முடிய பட்டாசுச் சத்தங்களும் வான வேடிக்கைகளும் காதுகளைப் பிளக்க, நத்தாரும் பிறந்தது.

பிரின்சியின் சோகம் கரைய ஒரு பிரகாசம் சுடர் விட்டது. தன் நண்பியின் சந்தோஷம் பார்த்து நேன்சி இன்பக் கழிப்புற்றாள்.

"தன் நண்பனுக்காக உயி ரையே கொடுக்கும் சினேகத்தை விட இந்த உலகில் சிறந்தது எதுவுமில்லை" ✲



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போனவர்களின் வருகை

தொடர் கதை

06




● தொல்புரம் சி. கதிர்காமநாதன்

"ஆரப்பா வந்த நிக்கினம்?"

"அது ...அதப்பா....."

கந்தசாமி தாமியாது வெளியே போனார்.

"அட குணத்தானே..... வா... உள்ளுக்க வா

குணத்தான் கூச்சலுடன் நெளிந்தான். அவனது காய்ந்து போன மெல்லிய முறுகிய உடம்பு மேலும் சுருண்டது.

"என்ன மங்களம் யோசிக்கிறாய்? அண்ணை! நான் நெடுக அங்க உந்த விஸ்கி, பிறண்டி, வொட்கா எண்டு குடிச்சு அலுத்தப் போச்சு.... அது தான் குணத்தானிட்ட சொன்னனான், நல்ல திறமான ரண்டு போத்தில் கள்ளு கொண்டு வரச்சொல்லி. அதான் அவன் ஆக்கள் நிக்கினம் எண்டு முழிச்சுக் கொண்டு நிக்கிறான்."

மங்களம் அசட்டுத்தனமாக சிரித்தாள். குணத்தான் ரண்டு போத்தல் கள்ளையும் கொடுத்து விட்டுப் போனான்.

நான் மேலும் இருக்க விரும்பவில்லை

"சரி நான் போட்டுவரப் போறன்."

"உங்கட பிள்ள என்ன மாதிரி வாற மாதிரி இருக்கோ?"

"போனில இடைக்கிடை கதைப்பன். வாறது பற்றி ஒண்டும் கதைக்கிறேல்ல. மனுசிக்கும் வருத்தம் ஏதோ வாற நேரம் வரட்டும்."

வீட்டின் புதுமணம் இப்போதும் மூக்கில்.....

அம்மன் கோயிலைத் தாண்டி வரும்போது ஐயர், யாரோ ஒருவருக்கு 'பார்வை' பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது, வெளியே பலர் காத்து இருந்தார்கள்.

கோயில் தாண்டி எனது பாதைக்கு திரும்பும் போது தம்பர் வீடு இன்னும் "அழகு கெடாமல் கம்பீரமாகத்தான் நின்றது.

ஜன்னல் கதவுகள் களவாடப்பட்டிருந்தாலும் அதன் பழைய 'ராஜாக்களை' இன்னும் கெடாமல்...

நான் அறிய எத்தனை பேர் வாழ்ந்த வீடு. எனது ஆரம்பப்பள்ளி வாழ்க்கை படித்தது. ஓடித்திரிந்தது எல்லாம் இந்தத் தெருதானே.

மாலையானதும் தெருவில் போவோரெல்லாம் எவ்வளவு மரியாதையாய் வீட்டைக் கடந்து போவார்கள். தோளில் கிடக்கும் துண்டு இடுப்புக்கு வந்து விடும். கும்பலாக, 'முசுப்பாத்தியுடன்' கதைத்துக் கொண்டு வந்தவர்கள் வீட்டை அண்மித்தவுடன் கதையை அடக்கி விடுவார்கள்.

குடிவெறியில் வருபவன் கூட மூச்சை அடக்கிக் கொள்வான்.

அவ்வளவு பயம் பயபக்தி வீட்டில் உள்ளவர்கள் மீது இருந்தது.

தம்பர் வீடு என்றால் தொல்புரத்திலிருந்து வட்டுக்கோட்டை வரை எல்லோருக்கும் தெரிந்திருந்தது. அவர் பெரிய வியாபாரி. தினமும் மூடை முடையாக சாமான்கள் கொண்டு வந்து குவிப்பார்கள். உள்ளே ஏகப்பட்ட உறவுகள் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தன.

ஒரு தடவை தம்பர் வீட்டில் கலியாணம் நடந்த போது தெரு முழுவதும் மறைத்துப் பந்தல் போட்டார்கள். தெரு தொடக்கம் முடிவு வரை சப்பரங்கள் அலங்கார வேலைப்பாடுகள். வீட்டில் அண்டா அண்டாவாக சமையல். ஏகப்பட்ட கூட்டம் எல்லோரும் எளிதில் உள்ளே போக முடியாது. நெருங்கிய அவர்களது 'சாதி ஆக்கள்' மட்டும் முன் வாசலால் உள்ளே போகலாம். மற்றவர்கள் வெளியே நிற்கவேண்டும். வியாபாரம் மூலம் வரும்பணத்தை பெட்டகத்தில் அடுக்கி வைப்பார்களென்றும், சிலவேளை வெளியே எடுத்து வெயிலில் 'காய வைப்பார்கள்' என்றும் கதை அடிபடும்.

தம்பரின் மூத்த மகனுக்கு எல்லோரும் பயம். சண்டித்தனம் அடிபாட்டுக்கு பேர் போனவர். 'தண்ணிப்' பாவனையும் இருந்தது. நண்பிகளும் அதிகம் எந்நேரமும் வீட்டில் கலகல எனக் கூட்டம் தான் மாலை நேரத்தில் விளக்கு வெளிச்சத்தில் ஆண்கள் கூட்டமாக இருந்து. 'காட்ஸ்' விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

பக்கத்து வீட்டு தாமோதரம்பிள்ளை வாத்தியார் விதானை செல்லத்துரை, போஸ்ட் மாஸ்ரர் முருகேசபிள்ளை, பொயிலைக் கார்த்திகேசு....

சிரிப்பு, கூப்பாடு, ஆர்ப்பாட்டம். இப்போது வீடு மௌனமாகி உள்ளது. இங்கு வாழ்ந்தவர்கள் எங்கே போய் விட்டார்கள்? தம்பர் இறந்த கையோடு பிள்ளைகள் மலேசியா, சிங்கப்பூர் என குடிபெயர்ந்து விட்டார்கள்.

வீடு வர பொழுது நன்றாக சாய்ந்து விட்டது.

(அடுத்தவாரம் தொடரும்)







**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**லட்சியம் நிறைவேற, முழுமனதுடன் பணிபுரியும், மேஷ ராசிக்காரர்களே!**

மனதில் சஞ்சலமும், செயல் நிறைவேறுவதில் தாமதமும் ஏற்படலாம். அறிமுகம் இல்லாதவரிடம், நிதானித்து பேசுவதால், சிரமம் தவிர்க்கலாம். குடும்பத் தேவைகளுக்கான பணச்செலவு அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். சீரான ஓய்வு, உடல் நலம் பாதுகாக்க உதவும். இல்லறத்துணை, ஒற்றுமை குணத்துடன் நடந்து, குடும்ப நலம் பாதுகாத்திடுவார்.




**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

**ஆடம்பர வாழ்க்கை முறையில், நாட்டமுள்ள, ரிஷப ராசிக்காரர்களே!**

எந்த விஷயத்திலும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். உங்களிடம் மோதல் போக்குடன் நடந்த வரும், அன்பு பாராட்டுக்கின்ற சூழ்நிலை உருவாகும். குடும்ப செலவுகளான பணவசதி, திருப்திகர அளவில் கிடைக்கும். உறவினர் குடும்ப விவகாரங்களில் [illegible] சொல்வதை தவிர்ப்பது, நற்பெயரை பாதுகாக்கும். குடும்ப பெண்கள், தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேற்றுவர்.




**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**பிறர் கருத்தின் நியாயத்தை ஏற்கும், நற்குணமுள்ள,மிதுன ராசிக்காரர்களே!**

ஆதாய பண வருமானம் பெற, கிடைக்கிற புதிய வாய்ப்புக்களை தவறாமல் பயன்படுத்துவீர்கள். அக்கம், பக்கத்தவரிடம் மனக்கிலேசம் விலகி, உங்கள் மீதான மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உறவினர்களின் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி வளரும். எதிரியிடம் விலகுவதால், சொந்தப்பணி எளிதாக நிறைவேறும். இல்லறத்துணை, நிர்வாகத்தின் கண்டிப்புக்கு உட்படாத வகையில், கவனத்துடன் பணிபுரிய வேண்டும்




**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**இனிய பேச்சுக்களால், பிறர் மனதில் இடம் பெறும், கடக ராசிக்காரர்களே!**

குடும்பத் தேவை நிறைவேற்றுவதில், தாமதம் குறுக்கிடும். தொடர்பில்லாத பணிகள் உருவாகி, நேரத்தை விரயமாக்கும். உடன் பிறந்தவர்களின் உதவி கிடைத்து, மனதில் நம்பிக்கை பெறுவீர்கள். இல்லறத்துணை பொறுமை குணத்துடன், குடும்ப நலன் பேணுவார். தொழில், வியாபாரத்தில் சராசரி இலக்கை அடைய, மாற்று உபாயம் பின்பற்றுவது அவசியம். பணியாளர்கள், பணி இலக்கு நிறைவேற்ற, கூடுதல் கால அவகாசம் தேவைப்படும்.




**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

**துணிச்சலுடன் செயல்பட்டு சூழ்நிலையை சாதகமாக்கும் சிம்ம ராசிக்காரர்களே!**

சிலர் கூறும் அவதூறு வார்த்தையை பொருட்படுத்தாமல் விலகுவதால், பணிகள் திட்டமிட்டபடி எளிதாக நிறைவேறும். இளைய சகோதர வகையில் மங்கல நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு. வீடு வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு பின்பற்ற வேண்டும். புத்திரரின் சொல் வேதங்களின் தத்துவம் போல அமைந்திடும். எதிரியால் வரும் கெடு செயலை முறியடித்திடுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு, எளிய முயற்சியால் சலுகைப்பயன் கிடைக்கும்.




**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

**சமயோசிதமாக செயல்புரிந்து தாராள நன்மை பெறும், கன்னி ராசிக்காரர்களே!**

குடும்பத்தில் புதிய செலவினங்கள் உருவாகி பணத்தேவையை அதிகப்படுத்தும். சூழ்நிலையை சமாளிக்க பணக்கடன் பெறுவதும், சேமிப்பை பயன்படுத்துவதுமான நடவடிக்கையை மேற்கொள்வீர்கள். நண்பர் உறவினர்களிடம் பேசுவதில் சூழ்நிலை உணர்ந்து நடந்து கொள்வது, [illegible] பாதுகாக்க உதவும். தொழிலில் கூடுதல் உழைப்பினால் உற்பத்தி, விற்பனையின் அளவை சரிசெய்வீர்கள். பணியாளர்கள், அக்கறையுடன் பணிபுரிந்து இலக்கை நிறைவேற்றுவர்.




**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**பிறர் தந்த சிறு உதவியையும், நன்றியுடன் நினைத்து வாழும், துலாம் ராசிக்காரர்களே!**

கடந்த நாட்களில், நிறைவேற்ற தாமதமான செயல்களை, அக்கறையுடன் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில், மங்கல நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு. அறிமுகம் இல்லாதவர்களுக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். பூர்வ சொத்தில் கிடைக்கின்ற பணவரவுக்கேற்ப, புதிய செலவுகளும் உருவாகும்.புத்திரரின் படிப்பு மேம்பட, மாற்று ஏற்பாடு செய்வீர்கள். உடல்நலத்திற்கு சிறு அளவிலான மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.




**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**எவருக்கும் தன்னால் இயன்ற வாக்குறுதி வழங்கும் விருச்சிக ராசிக்காரர்களே!**

சிலர் உங்களுக்கு தவறான ஆலோசனை சொல்வர், நேர்மை வழியில் நடந்து, வாழ்வு முறையை சரி செய்வீர்கள். வீடு, வாகனத்தில் அளவான பயன்பாட்டு வசதி கிடைக்கும். புத்திரரை கண்டிப்பதில் நிதான அணுகுமுறை வேண்டும். இல்லறத்துணை, புரிதல் திறன் குறைந்து, சிறுசிறு சச்சரவில் ஈடுபடுவர். எதிர்வாதம் பேசுவதை தவிர்ப்பதால், ஒற்றுமை சீராகும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத் தன்மைகளை உரிய கவனத்துடன் பாதுகாப்பது அவசியமாகும்.




**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**நற்செயல் புரிந்து, புகழ் பெறுவதில் விருப்பமுள்ள, தனுசு ராசிக்காரர்களே!**

இனிய எண்ணங்களால், மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். ஓய்வு நேரத்தை குறைத்து, பணியில் அதிக ஆர்வம் கொள்வீர்கள். குறைவு வராமல் பெருந்தன்மை குணத்துடன் நடந்து கொள்வது அவசியம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள், சக பணி சார்ந்தவர்களின் கருத்துக்கு, உரிய மரியாதை தருவது நல்எண்ணத்தை வளர்க்கும். குடும்ப பெண்கள், கணவரின் சம்மதமின்றி பணம், கடன் கொடுக்க, வாங்க கூடாது.




**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

**சாஸ்திர, சம்பிரதாயங்களை மதித்து செயல்படும் மகர ராசிக்காரர்களே!**

நல்ல விதமாக உங்களிடம் பழகியவர்களையும் நம்பகக் குறைவானவராக கருதுகிற மாறுபட்ட சூழ்நிலை ஏற்படலாம். நிறைவேற்ற வேண்டிய பணிகளை அக்கறையுடன் செயல்படுத்துவது உரிய பலனை பெற்றுத் தர உதவும். பூர்வ சொத்தில் அதிக பணவரவு கிடைக்கும். தொழிலில் எதிர்வரும் இடையூறை தாமதமின்றி சரி செய்வதால், உற்பத்தி, விற்பனை சீராகும். அரசியல்வாதிகள் சமரச பேச்சுவார்த்தையை சூழ்நிலை உணர்ந்து துவக்குவது நல்லது. பெண்கள், தியாக மனப்பான்மையுடன் குடும்ப பணிகளை நிறைவேற்றுவர்.




**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

**உறவினர், நண்பர்களை அன்புடன் உபசரித்து மகிழும் கும்ப ராசிக்காரர்களே!**

சமூகத்தில் பெற்ற நற்பெயரை பாதுகாப்பதில் அக்கறை கொள்வீர்கள். உடன்பிறந்தவர்களின் அன்பு, பாசம் அதிக அளவில் கிடைக்கும். சிலர் புதிய வீடு, வாகனம் வாங்குகிற திட்டத்தை நிறைவேற்றுவர். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவுகளை உண்ணக் கூடாது. இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனதிற்கு சந்தோஷம் தரும். தொழிலில் கூடுதல் மூலதனத்துடன் அபிவிருத்தி பணி புரிவீர்கள்.




**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**புதுமையை வரவேற்கும் மனம் கொண்ட, மீன ராசிக்காரர்களே!**

பூர்வ புண்ணிய பலன்கள், வாழ்வில் துணை நின்று சில நன்மைகளை பெற்றுத் தரும். தகுதிக்கு மீறிய செயல்களில் ஈடுபடக்கூடாது. வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் குடும்பத்தின் சூழ்நிலை உணர்ந்து நடந்து கொள்வார். இல்லறத்துணை, உங்களின் கருத்துகளை எதிர்மறையாக புரிந்து கொள்கிற கிரகநிலை உள்ளது. தொழில், வியாபாரத்தில் [illegible] அக்கறையுடன் பணிபுரிவதால் மட்டுமே, சராசரி பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் [illegible] நடவடிக்கைக்கு உட்பட நேரிடலாம். கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்



## அடைவா? அறுதியா?

அறிமுகமில்லா நீ
அலுவலகத்தில்
அறிமுகமானாய்
அன்னம் அளித்தாய்
அமிர்தமாக இருந்தது
அகத்தில் உள்ள விரக்திகளை
அப்பட்டமாகப் பொழிந்தாய்
அன்புக்கு அடிமையாகி விட்டோம் - இப்போது
அமைதியாகி விட்டாய்
அந்த நினைவுகளை
அடவு என்பதா?
அறுதி என்பதா?
அடைவு என்றால் மீட்கலாம்
அறுதி என்றால்......

ஜோசப் டொரிங்டன் ஸ்பெக்
மட்டக்களப்பு.


## எழுச்சி

சட்டத்தின் முன்
சகலரும் சமம்
சர்வாதிகாரம்
மக்கள் சக்திக்குள்
முடங்கப்படும்!
வாக்குறுதிகள்
மறுக்கப்படும் போது
மக்களின் எழுச்சி
வீறுகொண்டெழும்!
- அச்சுதன்,
சோனையூர்.



## தாய் மண்

உயிருக்கு
உயிராக
நீ -
உயிர் நீத்த போதும்
அடை காப்பாய்...!
- த.பருத்திதாசன்.



## உரிமைப்புலம்பல்

கனவுகள்
கலைக்கப்பட்டு அழுது புலம்புகிறது
நிம்மதி அத்தியாயங்கள்....
வேதங்கள்
மனிதாபிமானம் மரித்த பிரபஞ்சத்தில்
கலக்கமாய் போகிறது....



தடுமாறும்
தரணியில் தராதரம் ஏழைகளை
ஏறிமிதித்து முதலாளித்துவம் பேசுகிறது.....
சிந்தனைகள்
கிழித்து எறியப்பட்டு அடக்குமுறை
சிறைக்குள் ஊமையானது

அநாதைகள்
அணைப்பாரின்றி அடிமையாய்
விலங்கிடப்படுகிறது

உணர்வுகள் மரித்த உலகில்
உண்மைகளும்
உறங்கிக்கொண்டுதான்
இருக்கிறன்றது!

ஜே.எஸ்.ராஜ், யாழ்.பல்கலைகழகம்.

## முதல் வார்த்தை

தலையிடி காய்ச்சல்
தலை சாய்ந்த ஓர் மடி
நோயெனக்கு
"பாவம்" நோன்பிருப்பாள்
கடவுளிற்கு
கசக்கும் மருந்தெனினும்
தாய் எனக்காய்க் குடிப்பாள்



நிலாக் காட்டிச் சோறூட்டி
அன்புடனே பாலூட்டி
கண்ணுறங்கத் தாலாட்டி
அவள் மகிழ்வாள் சீராட்டி
அம்மா என்று நான் சொல்ல
அணைப்பாள் என்னைத்
தாய் மெல்ல
தத்தி நடை....
தவறி நான் விழுந்தாள்;
தன் எச்சில் தொட்டுத் தேய்த்து
என் அழுகை அடக்குவதில்
அவள் கெட்டிக்காரி

"அப்பா" சொல் செல்லம்
ஆனாலும்;
எப்போதும் 'அம்மாவே'
எனது முதல் வார்த்தை.

ராஜேந்திரன், வவுனியா.

## முதிர்க(ன்)னிகள்

முந்தநாள் வரைக்கும்
முந்நூறுவரன் பார்த்து
கூன் விழுந்தமுதுகின்
சுமைதாங்காது
போயேவிட்டார் மனுசன்
ஊர்கூட
காலாறிகல்லறைக்குள்
உறங்கிவிட்டார்பாவம்
"கல்யாணக் காசெல்லாம்
கருமாதிபண்ணிட்டு
கட்டையிலபோகாம
இருந்துதான் என்ன பயன்?"
பத்தினியாள் ஒப்பாரி
ஓயாமல் நீண்டுசெல்ல
சங்கடத்தில் சரி ந்தாள்
அந்த மண் குடிசைமுதிர் க(ன்)னி
மாப்பிள்ளை தேடியே
மரணிச்சுபோச்சுது அந்தாள்.
சீதனம் இல்லாம
"சின்னவீடாயும்" ஏற்கானுகளாம்
குடிசைவேயவக்கில்லாகிழவன்
கோபுரம் கட்ட
களவல்லோஎடுக்கவேணும்
போய் விட்டார்மனுசன்..
புலம்பிக்கிடந்தா
சோத்துக்குஎன்னசெய்ய?
ஊணர்ச்சிகள்
செத்தசதைப்பிண்டம் அவள்
தாயும் மகளும் நடையைக் கட்டினர்
கேள்விகள் ஆயிரம் அங்கே
இளநரை என்று இதுவரை
சொன்னதை
முதுநரை என்றாள் முதிர் க(ன்)னி
கல்யாணமின்றி கட்டிலுமின்றி
விதவையுமானாள் மலடியுமானாள்
"முதியோர் இல்லம்"அவர்களை
தத்தெடுத்துக் கொண்டது.

- இலக்கியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்யாவின் ஆச்சரியம்




ஆர்யா- நயன்தாரா நடிப்பில் தயாராகி வரும் படம் 'ராஜா ராணி'. படத்தில் ஜெய், நஸ்ரியா, சந்தானம், சத்யராஜ் மற்றும் சத்யன் எனப் பெரிய நட்சத்திரப் பட்டாளமே நடித்துள்ளது. மேலும் சத்யராஜ் இப்படத்தில் நயன்தாராவின் அப்பாவாக நடித்துள்ளார். சத்யராஜின் இளமையான நடிப்பைப் பார்த்து ஆச்சர்யப் பட்டுப் போனாராம் ஆர்யா. இது குறித்து ஆர்யா கூறுகையில், ''சிலர் கதை சொல்வதைக் கேட்டாலே ஓடி விடத் தோன்றும். ''ராஜா ராணி'' கதையை அட்லி தெளிவாகவும், புத்திசாலித் தனமாகவும் கூறினார். எனக்கு அவர் கதை சொன்ன விதம் மிகவும் பிடித்திருந்தது.

இப்படத்தில் சத்யராஜ் மிகவும் ஸ்டைலான அப்பாவாக நடித்துள்ளார். சில காட்சி களைப் பார்க்கும்போது இவர் நயனுக்கு அப்பாவாக நடிக்கிறாரா இல்லை எனக்கு அண்ணனா என சந்தேகம் வந்து விட்டது'' என்கிறார்.



கேரளத்து வரவான இனியா சினிமாவில் தான் நினைத்தபடி சாதிக்க முடியா[illegible] என விரக்தியுடன் இருக்கிறா[illegible] பாடகசாலை என்ற படத்தி[illegible] மூலம் தமிழுக்கு வந்த இனியா[illegible] வாகை சூட வா புகழின் [illegible]ச்சி[illegible] கொண்டு சென்றது.

அப்படத்தில் இனியாவின் நடி[illegible] பார்த்து பலரும் பாராட்டினா[illegible] இதனையடுத்து கண்பேசு[illegible] வார்த்தைகள், சென்னையில் ஒ[illegible] ஆகிய படங்களில் நடித்த இனி[illegible] அதிகம் எதிர்பார்ப்புடன் காத்[illegible] கொண்டிருந்த படம் மாசாண[illegible] ஆனால் அவர் எதிர்பார்த்தபடி [illegible] வெற்றி பெறாததால் வருத்தத்[illegible] இருக்கிறார். எனவே தான் நினைத்தபடி, தனது லட்சியத்[illegible] அடைய முடியாது என விரக்தி[illegible] இருக்கிறாராம்.

## விரக்தியில்...

## சினிமா

# தட்டிப்பறித்த சுருதி



அசின் கதாநாயகி யாக நடிக்க இருந்த இந்தி பட வாய்ப்பை ஸ்ருதி ஹாசன் தட்டிச் சென்றுள்ளார்.

இந்திப் பட இயக்குநர் அனீஸ் பாஸ்மி 2007இல் இயக்கிய படம், 'வெல்கம்'.

இதன் அடுத்த பாகத்தை 'வெல்கம் பேக்' என்ற பெயரில் இயக்குகிறார்.

இதில் கதாநாயகியாக நடிப்பதற்கு அசினை ஒப்பந்தம் செய்து வைத்திருந்தனர்.

இந்நிலையில் அவரை மாற்றிவிட்டு ஸ்ருதி ஹாசனை ஒப்பந்தம் செய்துள்ளனர்.

இது குறித்து அனீஸ் பாஸ்மி கூறுகையில், 'ஸ்ருதி இந்த கதைக்குப் பொருத்தமாக இருப்பதால் அவரிடம் பேசிக் கொண்டிருக்கிறோம்' என்றார்.

ஷங்கரின் 'ஐ' திரைப்படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார் விக்ரம். கதாபாத்திரத்திற்காக தன்னை அர்ப்பணித்து நடிக்கும் தமிழ்த் திரையுலக கதாநாயகர்களில் விக்ரம் முன்னிலையில் இருப்பவர்.

ஷங்கரின் திரைப்படத்தில் கிட்டத்தட்ட மூன்று மாறுபட்ட வேடங்களுக்காக தன்னை முற்றிலும் மாற்றி நடித்திருக்கிறாராம் விக்ரம். இப்படி கடந்த ஓராண்டை ஷங்கரின் 'ஐ' திரைப்படத் திற்காக மட்டும் செலவு செய்த விக்ரம். அடுத்த ஓராண்டில் இரண்டு படங்களில் நடித்துவிட வேண்டும் என்ற முடிவில் கௌதம் மேனன், தரணி ஆகிய இயக்குனர்களுடன் இரு படங் களில் ஒப்பந்தம் ஆகிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவான
ாவில் தான்
திக்க முடியாது
ன் இருக்கிறார்.
ன்ற படத்தின்
ந்த இனியாவை,
கழின் ச்சிக்கு
சென்றது.
பாவின் நடிப்பை
பாராட்டினார்.
கண்பேசும்
னையில் ஒருநாள்
நடித்த இனியா,
புடன் காத்துக்
டம் மாசாணி.
பார்த்தபடி படம்
ல் வருத்தத்தில்
னவே தான்
து லட்சியத்தை
ான விரக்தியில்
ாராம்.

# பாராட்டில்...



தமிழ் நடிகர்கள் பெரும்பாலும் தங்களுக்கு பிடித்த நடிகர் யார் என்றால் ரஜினியையே சொல்வார்கள்.

அதேபோல் நடிகைகளும் அனுஷ்காவையே சொல்லி வருகின்றனரவாம்.

சமீபத்தில் பிந்துமாதவி, "எனக்கு மிகவும் பிடித்தவர் அனுஷ்காதான். அவர் மாதிரி நானும் நடிக்க வேண்டும். பழகுவதற்கு இவரை மாதிரி ஒருவரைப் பார்க்கவே முடியாது" என்று புகழ்ந்துள்ளார்.

இவர் சொல்லி சில நாட்களுக்குள் அமலாபாலும் ஆரம்பித்து விட்டார் அனுஷ்கா புராணத்தை. "அனுஷ்கா அவ்வளவு பெரிய நடிகை. கொஞ்சம் கூட பந்தா இல்லாமல் பழகுவார். பெண்ணுக்குப் பெண்ணே பேராசை கொள்ளும் பேரழகெல்லாம் படைத்தவராக சினிமா உலகில் வலம் வருகிறார் அனுஷ்கா". என்று புகழ்ந்துள்ளார்.

# அகர்வாலின் ஆசை



குடும்பத்தினருடன் வெளிநாட்டு சுற்றுப் பயணத்தை முடித்து விட்டு மும்பை திரும்ப உள்ளார் காஜல் அகர்வால் -

எனது குடும்பத்தினருடன் பொழுதை கழித்தது மிகவும் சந்தோஷமாக இருந்தது. தமிழ், தெலுங்கு படங்களில் தொடர்ந்து முன்னணி இடத்தை தக்க வைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன்.

முன்னணி நடிகர்களுடன் நடித்து வரும் படங்கள், வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கையுள்ளது. அத்துடன் மாறுபட்ட கதாபாத்திரங்களில் நடிக்க வேண்டும். அதேநேரத்தில் அனார்கலி-சலீம் காதல் கதை என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும்.

ஒரு படத்திலாவது அனார்கலியாக நடிக்க வேண்டுமென தனது ஆசையை வெளிப்படுத்தியுள்ளார்.

# இரண்டு காதல்!

"அனகா என்ற பெயரில் சினிமாவில் அறிமுகமானேன். அந்த பெயரை வைத்து அழைக்க கஷ்டமாக உள்ளது என்றனர். அதன் பிறகு அமலாபால் என மாற்றினேன். அது ராசியாக அமைந்தது. நிறைய பட வாய்ப்புகள் வந்தன. பள்ளியில் படித்தபோது ஒரு பையனை பிடித்தது. அது காதலா? என்று புரியவில்லை. அவனை அடிக்கடி பார்க்க வேண்டும், பேச வேண்டும் என்று ஆசைப்பட்டேன். கொஞ்ச நாள்தான் அந்த ஈர்ப்பு இருந்தது.

கல்லூரிக்கு போனதும் இன்னொருவன் மேல் காதல் வந்தது. அறிவு முதிர்ச்சி இல்லாததால் அது காதலா? கவர்ச்சியா? என்று உணர முடியவில்லை. இப்போது அந்தக் காதலும் போய் விட்டது.

பொழுதுபோக்காக மாடலிங் பண்ணப் போய் மலையாள டைரக்டர் கண்ணில்பட்டு நடிகையாகி விட்டேன். எனக்கு கணவராக வருபவர் எல்லோருக்கும் உதவுபவராக இருக்க வேண்டும்" என்று தன் காதல் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார் அமலாபால்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
/ 28, ஓகஸ்ட் -03 செப்ரெம்பர் 2013



# விளையாட்டு

தொகுப்பு : வரூ

# தப்பித்த முதலிடம்

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆஷஸ் தொடருடன் இந்த வருடத்திற்கான ஐ.சி.சி.யின் அனைத்து வகைக் கிரிக்கெட் போட்டிகளும் நிறைவு பெறுகின்றன. இதன்படி அணிகள் மற்றும் வீரர்களின் தரப்படுத்தலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. ஏற்கனவே 2-1 என்ற கணக்கில் ஆஷஸ் தொடரை இங்கிலாந்து வெற்றி கொண்டிருப்பதால் தரவரிசையில் இனி பெரிதளவில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை.

பறிபோகும் என எதிர்பார்த்த இலங்கையணியின் 20/ 20 தரவரிசை முதலிடம், டில்ஷானின் அதிரடியால் தக்க வைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 20/ 20 தொடரில் 2-1 என்ற கணக்கில் இலங்கையணி தோல்வியடைந்ததால் ஆறு புள்ளிகளை இழக்க வேண்டி ஏற்பட்டது.

இந்த வெற்றியுடன் 6 புள்ளிகளை அதிகமாகப் பெற்ற தென்னாபிரிக்கா, இங்கிலாந்தைப் பின்தள்ளி 5 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. 2ஆவது இடத்தில் பாகிஸ்தான் உள்ளது.


துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து வீரா மக்கலம் (818) முதலிடத்தில் உள்ளதுடன், இலங்கையணியின் மஹேலஜெயவர் த்தன (731) ஆறாவது இடத்தில் உள்ளார். பந்துவீச்சில் மேற்கிந்திய வீரர் சுனில் நரேன் (817)முதலிடத்திலும், இலங்கை வீரர் அஜந்த மென்டீஸ் (686) 3ஆம் இடத்திலும், குலசேகரா (655) 7ஆம் இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளனர்.



ஒருநாள் அணிகளுக்கான தரப்படுத்தல்களின்படி இந்திய அணி (123) முதலிடத்திலும், அவுஸ்திரேலிய அணி (114) இரண்டாமிடத்திலும், இங்கிலாந்து அணி (1120 மூன்றாமிடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையணி 111 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் உள்ளது.

டெஸ்ட் போட்டிகளில், தென்னாபிரிக்கா அணி (135) முதலிடத்திலும், இந்திய அணி (116) இரண்டாமிடத்திலும், இங்கிலாந்து அணி (112) மூன்றாமிடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு அடுத்த படியாக 88 புள்ளிகளுடன் 7 ஆம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

# ஓய்வு பெற்றார் க்லோஸ்




ஜேர்மனியின் முன்னணி கால்பந்து வீரராக விளங்குபவர் மிரோஸ்லாவ் க்லோஸ்.

இவர் வரும் 2014 ஆம் ஆண்டு பிரேசிலில் நடக்க இருக்கும் உலகக்கிண்ண உதைப்பந்து போட்டிக்குப்பின் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

தேசியப் போட்டிகளில் பங்கேற்பதற்கும் இதே முடிவு எடுக்கப்படலாம் என்றும் அவர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார். லாசியோ அணியின் நட்சத்திர வீரரான க்லோஸ் (வயது 35), ஜேர்மனிக்காக 128 போட்டிகளில் பங்கேற்றுள்ளார். இதுவரை அவர் அடித்துள்ள கோல்களின் மொத்த எண்ணிக்கை 67 ஆகும். இன்னும் ஒரு கோல் அடித்தால் அவர் சக நாட்டவரான மியுல்லரின் சாதனையை சமன் செய்ய முடியும். மேலும், இந்த 67 கோல்களில் 14 உலகக் கிண்ணப் (3) போட்டிகளில் அடித்ததாகும். வரும் உலகக் கிண்ணப் போட்டியில் அவர் இன்னும் ஒரு கோல் அடித்தால், பிரேசில் வீரர் றொனால் டோவின் சாதனையான 15 என்ற எண்ணிக்கையைச் சமன் செய்வார். இந்த இரண்டு சாதனைகளை சமன் செய்வதுடன் மிரோஸ்லாவ் ஓய்வு பெறக்கூடும் என்றபோதிலும், ஜேர்மனிக்காக உலகக் கிண்ணத்தை வெல்வதே தனது இலட்சியம் என்று அவர் தெரிவித்தார்.

# செல்லப்பிள்ளை ரூனி

விளையாட்டு உலகில் எவ்வளவுக்கு எவ்வளவு வீரர்கள் திறமையை வெளிப்படுத்துகிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு கோடி கோடியாக சம்பாதிக்கவும் முடியும். கோல்ப், றென்னிஸ் துறைகளுக்கு அடுத்த படியாக வீரர்களை பண மழையில் நனைக்கும் விளையாட்டு உதைபந்து தான். உலகில் உதைபந்தாட்ட வீரர்களுக்குள்ள புகழை வைத்து அவர்களை தமது அணிக்குள் இழுத்துவிட பிரபலமான கழகங்கள் தூண்டில் போட்டுக்கொண்டே இருக்கும். அதற்காக என்ன விலையையும் அந்தக் கழகங்கள் கொடுக்கத் தயார்தான். ஏனெனில் பிரபலமான வீரர்களை ஒப்பந்தம் செய்வதன் மூலம் கழகத்தின் புகழும் அதிகரிப்பதுடன் போட்டிகளின் வெற்றிப் பெறுமதியையும் உயர்த்த முடியும்.




இதேவேளை பிறகழகங்களில் சிறப்பாக ஆடிவரும் வீரர்களை தமது அணிகளுக்குள் கொண்டு வர குறித்த கழகத்துக்கு ஒரு தொகைப் பணத்தை கொடுத்து வீரர்களைப் பெற்றுக் கொள்ளும் முறையும் உண்டு. இங்கிலாந்தின் புகழ்பெற்ற உதைபந்தாட்ட வீரரான ரூனியையும் இந்த முறையைப் பயன்படுத்தி தனது கழகத்துக்குள் கொண்டுவர செல்ஸி அணி முயன்றது. ஏற்கனவே ரூனி மான்ஸ்செஸ்டர் யுனைட்டட் அணிக்காக விளையாடி வருகிறார். எனவே அவரை தமது அணிக்கு விடுவித்தால் 20 மில்லியன் பவுண்ட்ஸ் தருவதாக மான்ஸ் செஸ்டர் அணிக்கு செல்ஸி அணி ஆசை காட்டியது. மான்ஸ்செஸ்டர் அணியின் முன்னாள் பயிற்சியாளருக்கும் ரூனிக்கும் இடையே பனிப்போர் இருந்தது. இதனால் அவரை மான்ஸ்செஸ்டர் அணி விற்றுவிடும் என்றே செல்ஸி அணி கணக்குப் போட்டது. ஆனால் எதிர்பாராத திருப்பமாக மான்ஸ்செஸ்டர் அணிக்கு புதிய பயிற்சியாளர் வந்து சேர்ந்தார். இவர் ரூனி மீது அதீத அக்கறை செலுத்தினார். 20 மில் லியன் பவுண்ட்ஸ"க்கு தரமுடியாது என்று மான்ஸ்செஸ்டர் கைவிரித்தது. அப்படியும் அடங்கவில்லை செல்ஸி. 20 மில்லியனை 30 மில்லியனாக உயர்த்தியது. ஆயினும் எங்களுக்குப் பணம் பெரிதில்லை ரூனிதான் வேண் டும் என்று அடித்துச் சொல்லிவிட்டது மான்ஸ் செஸ்டர். ஒருகாலத்தில் மான்ஸ்செஸ்டர் அணியின் வேண்டாப் பிள்ளையாக இருந்த ரூனி இப்போது அதன் செல்லப்பிள்ளையாக மாறிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு: ஸ்ருதி



# பெண்களைத் தாக்கும் மார்பகப் புற்றுநோய்

பெண்களைத் தாக்குகின்ற நோய்களில் இன்று மார்பகப் புற்றுநோய் மிகவும் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. பொதுவாகவே புற்று நோய்களின் தாக்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகம் என்று குறிப்பிடப்படுகின்ற சூழ்நிலையில் பெண்கள் மார்பகப் புற்றுநோய் பற்றியும் அறிந்திருக்க வேண்டிய கட்டாயநிலை தோன்றியுள்ளது. எதனால் இந்த மார்பகப் புற்றுநோய் தோன்றுகிறது..? யார் யாரையெல்லாம் அது தாக்கக்கூடிய தன்மை காணப்படுகிறது..? அதனைக் கண்டறிவதற்கான வழிமுறைகள் என்னென்ன..? போன்ற விடயங்களைப் பெண்கள் அறிந்திருக்கவேண்டும்.

குழந்தையின்மை, சீரான உணவுப்பழக்கமின்மை, இரசாயனப் பதார்த்தங்கள் கலந்த உணவுகளை உட்கொள்தல் மற்றும் மனக்குழப்பம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்த நோய் தோன்றுவதற்கு வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. பெண்களிலும் குறிப்பாக நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்களையே இந் நோய் அதிகம் தாக்குகின்றது. அதனால் முப்பத்தைந்து வயதிற்கு மேற்பட்ட பெண்கள் இதற்கான முன்னாய்வுப் பரீட்சையை எடுத்துக்கொள்ளலாம். மார்பகங்களில் வலி தோன்றுதல், சிறிய கட்டி போன்றவை காணப்படல் மற்றும் சிறு இரத்தக்கசிவு போன்றவை அறி குறிகளாகும்.

அறிகுறிகள் தென்படுகின்றவிடத்து உரிய முறையில் மருத்துவ பரிசோதனை செய்துகொண்டால் நோயின் தன்மையை உறுதி செய்துகொள்ளமுடியும். இங்கு இன்னுமொரு முக்கிய விடயமும் காணப்படுகின்றது. மார்பகங்களில் கட்டி காணப்படுகின்ற எல்லோரிற்கும் புற்றுநோய் தான் என்று எந்தவொரு நிச்சயிப்பும் இல்லை. மார்பகக் கட்டிகளில் எண்பது வீதமானவை சாதாரண கட்டிகளே. மருத்துவ பரிசோதனையின் போதே இதனைக் கண்டுபிடிக்கமுடியும். அத்தகைய புற்றுநோய் கூட குணப்படுத்தப்படமுடியக்கூடியது என்பதுடன் வாழ்வின் எல்லையை அதிகமாக நீடிக்கவும் உதவும். அதனால் சரியான முற்பாதுகாப்பு மட்டுமன்றி மருத்துவப் பரிசோதனையும் ஒவ்வொரு பெண்ணிற்கும் அவசியமாகும்.


## புதுயுகத்தைத் தேடி......

**மகளிர் பக்கம்**

## தடைகளைத்தாண்டும் தஸ்லிமா..!

கட்டுப்பாடுகள் மிகுந்த இஸ்லாமிய சமுகத்திலிருந்து உண்மையையும் யதார்த்தத்தையும் பேச விரும்பிய ஒரு பெண்ணிலக்கியவாதியாக உலக அரங்கில் அறியப்பட்டவர தஸ்லிமா நஸ்ரின். இலக்கிய உலகில் இவரைப் பல சமுகத்தவரும் தம்முடைய வரை யறைகளிற்கு அப்பால் வந்து அவருடைய யதாரத்தமான கேள்விகளிற்கும் எழுத்திற்கும் மதிப்பளித்தார்கள். அதனால் அவரின் இலக்கியங்கள் எல்லா மட்டத்தினராலும் எல்லா சமுகத்தினராலும் விரும்பப்பட்டது. ஆனால் எவ்வளவு தூரம் அவர் விரும்பப்பட்டாரோ அவ்வளவு தூரம் மாற்றத்தை விரும்பாத பலரால் வெறுக்கவும் செய்யப்பட்டார்.

இன்றைய பங்களாதேஷ், பாகிஸ்தானின் கிழக்கு அங்கமாக இருந்த காலப் பகுதியில் 1962 ஓகஸ்ட்டில் மைக்கேன்சிங்கில் பிறந்த இவர், அறிவியல் துறையில் தன்னுடைய கல்வியைத் தொடர்ந்த 1984 இல் மருத்துவத்துறையில் பட்டம் பெற்று பொதுமருத்துவத்துறையில் எட்டு ஆண்டுகள் சேவை செய்தார். இவரிற்கு இலக்கியத் துறையிலிருந்த ஆரவம் சிறு வயது முதலே இவரை இலக்கியம் நோக்கி கவர்ந்ததால் பதினைந்தாவது வயதுமுதல் கவிதைகளை எழுதத்தொடங்கினார். 'செஞ்சுதி' என்ற இதழுக்கு ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். 1986இல் முதலாவது கவிதை நூலையும் 1989 இல் இரண்டாவது கவிதைநூலையும் வெளயிட்டார். இவரின் எழுத்தாழுமை காரணமாகப் பல பத்திரிகைகள் இதழ்கள் இவரைத்தமக்காக எழுதுமாறு அழைத்தன. தொடர்ந்து மதக்கட்டுப் பாடுகள், பண்பாட்டு இறுக்கங்கள், உரிமைமறுப்புக்கள் போன்றவற்றிற்கு எதிராக தொடர்ச்சியாக எழுதிக்கொண்டிருந்ததால் இவரது சமுகத்திலிருந்தே இவரிற்கு எதிர்ப்புக்கள் கிளம்பத் தொடங்கியது.




இவர் எழுதிய பத்திரிகைகளிற்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இஸ்லாமிய அமைப்புக்கள் சில இவரது தலைக்குச் சன்மானம் வைத்திருந்ததாகவும் கூறப்படுகின்றது. இதனால் தஸ்லிமா வீட்டிலேயே இருக்க நேர்ந்தது. தவிர, அவர் தொடர்ந்து பணிபுரிய வேண்டுமானால் எழுது வதை நிறுத்தவேண்டுமெனவும் கேட் கப்பட்டது. தஸ்லிமா வேலையை விட்டார். எழுதுவதை தொடர்ந்தார். இருபத்து எட்டு நூல்களை இதுவரை இவர் எழுதியிருக்கிறார். பல்வேறு மொழிகளில் இவரது நூல்கள் மாற்றப்பட்டுமுள்ளன. இதில் எனது பெண்ணியம், கடுங்காற்று மற்றும் அந்த இருட்டு நாள்கள் ஆகிய மூன்று நாவலகளை அந்நாட்டு அரசு தடைசெய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**தஸ்லிமா நஸ்ரின் அடக்கப்பட்ட இனத்தின் விடுதலைக்குறியீடு.**

## போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து..!

தேவைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒரு விதம். தனிப்பட்ட ஒவ்வொருவரிற்கும் இருக்கின்ற தேவைகள் வித்தியாசப்பட்டவை.

பொதுவாகவே பெண்கள் தங்களினுடைய தேவைகளை அதிகரித்துக் கொண்டிருப்பதாக குற்றம் சாட்டப்படுகின்றது. ஆனால் அவர்கள் தேவைகளிற்கும் அப்பால் ஆசைகளையும் அதிகரித்துக்கொண்டிருக்கின்ற காலமாக இக் காலம் காணப்படுகின்றது.

தேவை என்பது ஒரு விடயத்தைச் செயற்படுத்துவதற்கு வேண்டப்படுகின்ற அத்தியாவசிய அடிப்படையே தேவை என்று வரையறுக்கப் படலாம்.

ஏளிமை என்பது எல்லோராலும் விரும்பப்படுவது. எளிமையாகவும் அதிகமாகவும் அலட்டிக் கொள்ளாதவர்களைத் தான் அதிகமாக எல்லோரும் விரும்புகிறார்கள். அதனால் சகோதரிகளே ஆடம்பரத்தின் மூலம் உங்களை மற்றவர்களிடம் கொண்டு சேர்த்துவிடலாம் என்று நினைப்பது தவறு. மற்றவர்கள் உங்களைப் பற்றி நல்ல எண்ணங்களைக் கொண்டிருப்பதை அது தவிர்த்துவிடக்கூடியது.

ஒரு கைக்கடிகாரம் உங்களிற்குத் தேவைப்படுகின்றது என்று வைத்துக்கொள்வோம். நேரம் பார்க்கக்கூடியதாக இருந்தால் போதுமே அதை விடுத்து உங்களினுடைய இயலளவை காட்டக் கூடியதாக பொன்னால் வேலைசெய்யப்பட்டதாகவோ அல்லது இரத்தினங்கள் பதித்ததாகவோ அவை இருக்கவேண்டுமென்றோ எந்த அவசியமுமில்லையே. நேரம் பாரர்க்க முடிந்தால் போதுமே. இதன் மூலம் உங்கள் பாதுகாப்பைப் பேண முடிவதுடன் வீண் சிரமங்களையும் தவிர்த்துக் கொள்ளமுடியுமே..

**ஒன்றை உணர்ந்து கொள்ளுங்கள் சகோதரிகளே! வாழ்க்கை அழகாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கே தவிர ஆடம்பரமாக வாழ்ந்து அவஸ்தைப் படுவதற்கல்ல.!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்டுகளோட சண்டித்தனம்

இந்தக் கோழிச் சண்டை தொடங் கினது எனக்கு வலு இடைஞ்சலாய்ப் போயிட் டுது. அங்காலை இங்காலை விலத்த ஏலாமல் நான் மாட்டுப்பட்டுப் கொண்டன்.

மதிலுக்கு மேலாலை எட்டிப் பார்த்து, ஆகாஷ் ஒவ்வொன்றுக்கும் விளக்கம் கேக்க, மதிலுக்கு இஞ்சாலை நிண்டு, நான் விளக்கம் கொடுக்க .... என்ரை அலுவல்கள் ஒன்றும் பார்க்க ஏலாமல்...

ஆனாலும் எங்கள் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டின் மூலவேர்களைத் தேடிவந்த ஆகாஷ் "அதுபெறியப்பா, சாறத்தை துாக்கிக் கட்டிக்கொண்டு ஆவேசமாக வாறது? - ஆகாஷ் கேட்க நானும் ஒரு வகுப்பு எடுப்பது போல ''அது தான் சண்முகம் மாமா, பாக்கியம் மாமியின்ரை 'கஸ்பன்ட்' ...."

"உவள் என்னடி கேட்டவள்...? இப்ப எடுத்துக் கொண்டு வாறன் கோடாலி...'' என்றவாறே வந்த மாமா, பாடலையை மூடிக்கொண்டு உள்ளே சென்றுவிட்டார். ஆகாஷ் "கேடாலி என்றால் என்ன பெறியப்பா? என்றான். " அவர் இப்ப கொண்டு வருவார்.... பார்" என்றேன்...மீண்டும் களத்தில், கிணற்ற டியில் தோன்றினார் சண்முகம் மாமா... ".... அவர் கையில் ஒண்டும் கொண்டு வரவில்லை.... அப்ப, கோடாலி எண்டால் என்ன பெறியப்பா" மீண்டும் ஆகாஷ் கேட் டான். "சண்முகம் அம்மான் நேரை இஞ்சை கோடாலியோடை வருவார்.... அப்ப பார்..." ஆத்திரம் அடக்க ஏலாமல் வந்தது சொன் னேன். வெளியில் வந்த சண்முகம் ''ஆகத் தொல்லை கூடிப்போச்சுது.... உலக்கை எடுத்துக் கொண்டுவந்து ஒரு பாடம் படிப்பிச்சால் தான் சரிவரும்... இப்ப பார் கொண்டுவாறன் உலக்கை...'' மீண்டும் படலையில் உள்ளே சென்று மறைந்தார் சண்முகம் அம்மான்.

'பெறியப்பா பெறியப்பா' 'உலகை' கொண்டு வரப்போறன் எண்டிட்டு உள்ளுக் குப் போறார். 'உலகை'க் கொண்டு வருவாரா? உலகை எண்டால் என்ன என்று ஒரே அறுவை ஆகாஷ்.

"அட உலக்கை. அது உலகை இல்லை. உலக்கை... எங்கை சொல்லு உலக்கை'' உற்சாகப்ப டுத்தினேன் ஆகாஷை. அவனும் வாயுக்குள்ளை கொழுக்கட்டை வைத்துக் கொண்டு கதைப்பது போல 'உழக்கை' என்றான். உலகை விட இது பரவாயில்லை. 'வெரிக்குட்' என்று பாராட்டினேன்.

மதிலின் மேலால் எட்டிப்பார்த்தவாறு அங் கிருந்து பார்வையை இங்கு திருப்பாமல் ' பெறி யப்பா பெரிய தடி மாதிரி; ஒரு போத்தலளவு மொத்த மரம் கொண்டு வாறார்... அது தான் 'உழக் கையா?' ..." பரபரப்பாக கேட்டான் ஆகாஷ்.

நானும் எட்டிப்பார்த்து அது உலக்கை என்று உறுதி செய்த பின் 'அது தான் உலக்கை' என்றேன். 'உழக்கை உழக்கை' என்று இரண்டு மூன்று தடவை கூவினான் ஆகாஷ். அவன் உழக்கை உழக்கை என்று கூவ, ''உங்களையே ஆகாஷ் கூப்பிட்ட வன்" என்றவாறு ஒரு எரிச்சலூட்டும் புன்னகை யுடன், வெளியே வந்தாள் என் மனைவி.

"ஓமோம் .... பெறியம்மாவின்ரை பெறியப்பாவை அவன் அப்படித்தான் கூப்பிடுகிறவன்... நீர் போம் உள்ளுக்கை'' என்று மனுசியை கலைத்துவிட் டேன். இதே சாட்டா சண்டையை ஒருக்கால் எட்டிப் பார்க்க அவவுக்கும் விருப்பம். பாக்கியம் மாமியின்ரை சத்தம் சரசு அக்காவின்ரை சத்தம், சண்முகம் அம்மானின்ரை சத்தம், அதோடை ரெண்டு மூன்று குழந்தைகள் வீரிட்டுக் கத்துற சத்தமும் சேர்ந்து விலக்குப் பிடிக்கிற ஆக்களின்ர இரைச்சலோடை, ஒருக்கால் எட்டிப் பார்க்கத் தான் சொல்லும். அந்த மாதிரிப்போய்க் கொண் டிருந்தது. 'பைற்' .அதுக்குள்ளை நான் ஒருத்தன் கோவிலில பூக்கொண்டு வந்து தூவிய ஹெலி கெப்டரை, அது ஒரு முறை வேறென்னவோ கொண்டு வந்து வீசியதை மறந்து ' பா' க் கொண்டு வர்ணிக்கும், வர்ணனையாளர் போல வர்ணித்துக் கொண்டிருந்தேன்.

கேள்விகளுக்கு விடை கூறியவாறு மதில் மறை விலிருந்து வர்ணனை செய்தபடி இருந்தேன். இல்லாட்டில் பாக்கியம் மாமி, ' மருமோன் பரம சிவம்.... நீங்களும் இதுகளைக் கேட்டுக் கொண்டு தானை இருக்கிறியள்' என்று தொடங்கினால், சரசு அக்காவின்ரை அவர் 'மேடைக்கு' வருகை தந்ததும்.... எனக்கு என்ன நடக்கும் எண்டு தெரியாது. விலகி இருக்கிறது புத்திசாலித்தனம். மூளை உள்ளாக்கள் இப்படியான சண்டைகளின் போது விலகியிருக்க வேண்டும். இல்லாட் டில் ஆசுப்பத்திரியில விடிய 'பீஜை' வெளி யேற நித்திரையால எழும்ப வேண்டிவரும். இப் பத்தையச் சண்டையளிலை, சண்டை பிடிச்சு ஆசுப்பத்திரிக்கு போற ஆக்களை விட, விலக்குப் பிடிக்கப்போய் ஆசுப் பத்திரியில ' ' 'அட்மிற்' ஆகிற ஆக்கள் தான் கூட. ஆகாஷ் " பெறியப்பா... பெறியப்பா... ஏன் அந்த ''உழக்கையைக் கொண்டு வந்தவர்?"' தொடங் கியிற்று கேள்வி.

நான் விடை கூறுமுன்னே அடுத்த கேள்வி. " இதை முன்னமே கொண்டு வந்திருக்கலாம். ஏன் வந்திட்டுப் போய், திரும்பவும் வந்திட் டுப் போய்... சொல்லிப் போட்டு போய் எடுத் துக் கொண்டு வாறார்?" நியாயமான சந்தேகம்.

" அது மகன், முன்னமே கொண்டு வந்தால் அதாலை அடிக்க வேணும். சொல்லிப் போட் டுப் போய் பிறகும் கொஞ்ச நேரத்தால கொண்டு வந்தால் அதுக்கிடையில் ஆக்கள் வந்து பிடிச்சுப் போடுவினம். அது தான் விலக்குப் பிடிக்கிற ஆக்கள் வரும் வரை தாம திச்சு, அவை வந்தாப் பிறகு உலக்கையை விசுக் கிக் கொண்டு வாறது" என்று நான் சொல்ல வும், இங்காலுப்பக்கம் சண்முகம்பிள்ளை "இவங்கள் பிடிச்சுப் போட்டாங்கள். இல்லாட் டில் தலை இரண்டாய்ப் பிளந்திருக்கும்" என்று தன் வீரப் பிரதாபத்தை எடுத்துக் கூறவும் சரியாக இருந்தது.

இந்தப் பக்கம் சரசு அக்காவின் 'அவர்' வரவே கள நிலைவரம் இன்னும் உக்கிர மடைந்தது. "பெண்டுகளோடை காட்டுற சண் டித்தனத்தை என்னிலை காட்டும்... உலக்கை கொண்டு வாறார் உலக்கை... சண்முகத்தாரை ஒரு கை பார்க்காமல் விடுகிறதில்லை" என்று சறத்தை உயர்த்தி சண்டிக்கட்டு கட்டிய படி வந்தார் சரசு அக்காவின் கணவர் சண்முக லிங்கம்.

''ஏன் பெறியப்பா, ஜம்பர் அல்லது 'சோட்ஸ்' போடாமல் சாறத்தோடை சண்டை பிடிக்க வாறது?" நியாயமான கேள்வி தான் ஆகாஷின் கேள்வி.

அது மகன் 'ஜம்பர்' அல்லது 'சோட்ஸ்' சோடை வந்தால் நேரடியாக சண்டையில இறங்க வேண்டும். சண்டை தொடங்கி விடும். இது சறத்தோடை வந்து அதை இறுக்கிக் கட்டி, 'றெடி' பண்ண, விலக்குப் பிடிக்கிறாக்கள் விலக்குப் பிடிச்சுப் போடு வினம். அதுக்கு ஒரு 'ரைம்' கொடுக்கிறதுக் காகத்தான் இப்படியான சண்டையளில, சாறத் தைக் கட்டிக் கொண்டு ஆம்பிளையள் வாறது.

அடி வாங்கினாலும் சொல்லலாம், "நான் சாறத்தை மடிச்சுக் கட்டிறதுக்கிடையில அடிச்சுப் போட்டான்.... உதுவும் ஒரு வீரமோ? இப்ப வாறதெண்டால் வாடா பார்ப்பம்...", எண்டு சாறத்தை மடிச்சுக் கட்டி 'றெடி' பண்ணலாம். அதுக்குள்ளை விலக் குப் பிடிக்கிற ஆக்கள் ஒரு மாதிரி விலக்குப் பிடிச்சிடுவினம்.

"ஆர் அவளின்ரை கோழியைப் பிடிச்சது எண்டு மேலுக்கு இருக்கிறவனுக்குத்தான் தெரியும்" என மண் அள்ளித் தூற்றினாள் பாக்கிய மாமி.

''ஐயையோ''உதுகள் பற்றி மேலுக்கு நிக்கிற எனக்கொண்டும் தெரியாது. என்னை உதுக்குள்ளை இழுக்காதேங்கோ என்று பக்கத்து வீட்டு மேல் மாடியிலை நின்று விடுப்புப் பார்த்துக் கொண்டிருந்த நமசிவா யத்தார், உள்ளே சென்று மறைந்தார்.



பம்பல் பரமசிவம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

15

# இருளின் கதவுகளைத் திறந்தவன்

**அமெரிக்காவிலுள்ள நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்து விக்கிலீக்ஸ் தளத்தின் அமெரிக்க வழங்கிகளைச் செயலிழக்கச் செய்தது. அவ்வளவுதான்! விக்கிலீக்ஸின் வழங்கி கள் செத்துவிட்டதால் இனி அதன் கதையும் காலிதான்!**

● ஔண்யன்

எங்கள் மீது நீங்கள் ஒரு அடி கொடுத்தால் பதிலுக்கு நூறு அடிகள் வாங்கத் தயாராயிருங்கள். நாங்கள் சொன்னதைத்தான் செய்வோம், செய்வதையே சொல்வோம் என்பதை தேவாலயக் குழுமத்துக்குக் கொடுத்த பதிலடி மூலம் யூலியன் நிரூபித்தான். ஏறக்குறைய 60 ஆண்டுகளாக ஆட்டம் போட்ட தேவாலயத்தின் முக்கிய புள்ளிகள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு, புதிய நிர்வாகத்தின் கீழ் தேவாலயம் சீராக இயங்கத்தொடங்கியது.

சிலநாள்கள் கழித்து விக்கிலீக்ஸ் அலுவலகத்துக்கு அதே தேவாலயக் குழுமத்திடமிருந்து இன்னொரு கடிதம் வந்தது. வாங்கிய அடி போதாதென்று மீண்டும் சீண்டுவதற்காகவே அந்தக் கடிதம் வந்திருக்குமென்று எண்ணியபடி, கடிதத்தைப் பிரித்த யூலியனுக்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. எங்கள் தேவாலயத்தில் நிகழ்ந்த குளறுபடிகளை வெளிக்கொணர்ந்து, மக்கள் முன் குற்றம் செய்தவர்களை அடையாளப்படுத்தப் படுவதற்கு தங்கள் இணையத்தளம் செய்த உதவிக்கு நன்றிகள் என்ற வாக்கியங்களே கடிதத்தில் தொங்கிக்கொண்டிருந்தன. மெல்லியதான புன்னகையோடு அந்தக்கடிதத்தை யூலியன் பத்திரப்படுத்திக்கொண்டான். உலகெங்கிலும் இருந்து வந்து குவிகின்ற புகழ்மழையில் நனைந்து தலைக்கனம் வருவதற்குப் பதிலாக இன்னமும் தேடல்களில் ஆழமாக இறங்கவேண் டும் என்ற வெறியே யூலியனுக்குள் அதிகரித்தது. இணைய வலையமைப்புகளை ஊணுறக்கமின்றி இரவு பகலாகப் பின் தொடர்ந்தபடியே அவனது நாள்கள் நகர்ந்தன. வலையமைப்புகளை பின்தொடர் வதற்கு நிறையப் பொறுமை அவசியம். அது மீன்பிடித் தலைப் போலதான். சிலவேளைகளில் எண்ணற்ற தகவல்கள் சிக்கும், அதே வேளை பல முறை எந்தவொரு இரகசியமும் சிக்காமல் ஏமாற்றத்தை மட்டுமே சுமந்து கொண்டு திரும்பவேண்டியிருக்கும். ஆனால் யூலியன் தரையிலேயே மீன்பிடிக்கும் கெட்டித்தனம் மிக்கவன் என்பதால் எப்போதுமே நிரம்பி வழியும் இரகசியங்களைக் கைப்பற்றிய பின்னரே அவன் நித்திரைக்குச் செல்வது வழமையாகி விட்டது. ஒவ்வொரு நாளும் இருளின் புதிய கதவுகள் விக்கிலீக்ஸில் திறக்கப்பட்டன. வழமையாக தணிக்கைக்குள்ளாகி, செம்மையாக்கப்பட்டு, தமது கோணத்துக்கேற்பவே தகவல்களை இணைய ஊடகங்கள் வாசகர்களுக்குத் திணித்துக் கொண்டிருக்கையில், நடந்தவற்றையெல்லாம் அப்படியே ஒரு ஆதாரம் கூட மிஸ் பண்ணாமல், அப்படியே திகட்டத் திகட்ட விருந்து வைக்கும் போது எல்லோரும் விக்கிலீக்ஸ் தளத்தைப் பார்வையிட முண்டியடித்ததில் தவறேதுமில்லைத் தானே?



தேவாலயக் குழுமம் பற்றிய தகவல்களுக்குப் பின்னர் ஐஸ்லாந்து, சுவிட்ஸர்லாந்து நாடுகளைச் சேர்ந்த புகழ்பெற்ற வங்கிகளின் முறைகேடுகள், முறையற்ற நிதிக் கையாடல் கள் என்பன விக்கிலீக்ஸில் வெளியிடப்பட்டன. வங்கிகளின் செயற்பாடுகள் யாவும் கணினிமயப்படுத்தப்பட்டு, அத்தகவல்கள் யாவும் தலைமை அலுவலகத்துக்கு பாதுகாப்பான இணைய வழிமூலம் அனுப்பப்பட்டு, அங்கு சேமித்து வைக்கப்படுவது வழக்கம். தன்னுடைய தகவல்வழங்கி ஒருவரின் மூலம் மிகவும் கஷ்டப்பட்டு, இணையவழி மூலம் தகவல் அனுப்பப்படும் இரகசியமுறையின் சங்கேதச் சொல்லை ஒருநாள் அறிய நேர்ந்தது. அதன் பிறகு யூலியனின் காட்டில் மழைதான். இந்த வங்கிகள் உலகிலேயே மிகவும் நம்பிக்கையான வங்கிகள் எனப் புகழ் பெற்றவை. ஆனால் இவ்வாறு கிடைத்த நற்பெயரைப் பயன்படுத்தி, மறைமுகமாக அவை ஏராளமான நிதிக்கையாடல்களிலும் ஈடுபட்டுவந்தன. அதிலும் இந்த வங்கிகளில் பணத்தை வைப்பிலிடுபவர்கள் தாம் அதைப்பற்றி தமது மனைவி, பிள்ளைகளுக்குக் கூட சொல்வதில்லை. இவ்வாறானவர்கள் மரணித்தால் அந்தப்பணத்தை அவரின் பின்னுரித்தாளிகளுக்குத் தாமாகவே அணுகிக் கொடுக்க வேண்டியது இந்த வங்கிகளின் கட்டாய விதிகளில் ஒன்று. ஆனால் அதற்கு மாறாக இறந்தவரின் பணத்தை நோகாமல், கூசாமல் அவ்வளவு பணத்தையும் தமது பொக்கற்றுக்குள் பதுக்கிவிடும் கைங்கரியத்தையே இந்த வங்கிகள் அநேகதருணங்களில் செய்துவந்தன.

அவற்றையெல்லாம் விக்கிலீக்ஸ் பட்டியலிட்டு, பந்தி வைத்தது. குய்யோ, முறையோவெனக் கூச்சலிட்டன வங்கிகள். உலகின் முன்னால் அவிழத் தொடங்கிய தங்கள் வேட்டியை இறுக்கிப் பிடித்துக் கொண்டு பேந்தப் பேந்த முழித்தன. தமது இரகசியத் தகவல்களை முறைகேடாக வெளிப்படுத்தி விட்டதாக சுவிஸ் வங்கி அமெரிக்காவிலுள்ள நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்து விக்கிலீக்ஸ் தளத்தின் அமெரிக்க வழங்கிகளைச் செயலிழக்கச் செய்தது. அவ்வளவுதான்! விக்கிலீக்ஸின் வழங்கிகள் செத்துவிட்டதால் இனி அதன் கதையும் காலிதான்! என விக்கிலீக்ஸின் எதிரிகள் ஆனந்தக் கூத்தாடினார்கள். ஆனால் அவர்கள் ஒன்று நினைக்க யூலியன் வேறொன்றைச்செய்தான். வழமை போலவே விக்கிலீக்ஸ் எவ்வித இடையூறுமின்றி தன் பயணத்தை தொடர்ந்தது. எப்படி இது சாத்தியம்? என சுவிஸ் வங்கி உள்ளிட்ட விக்கிலீக்ஸ் எதிர்ப்பாளர்கள் மண்டையைப் போட்டு உடைக்கத் தொடங்கினார்கள்.

**(திரைகள் இன்னும் திறக்கும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோசனைகளைத் தள்ளிப்போடாதீர்



**மே**ம்பாட்டுக்கான யோசனைகளைப் பற்றி வெறுமனே சிந்திப்பதில் பயனில்லை; அதை செயல்படுத்த ஏதேனும் நடவடிக்கை எடுங்கள்.

நீங்கள் வேலை செய்கின்ற மேசையை தேடி, எந்த வேலை வருகின்றதோ அதைச் செய்தால் போதும் என்று இருப்பீர்களானால், நீங்கள் இருந்த இடத்தில் இருக்க வேண்டியது தான். முன்னேற முடியாது. நீங்கள் உங்களுடைய நிறுவனத்தில் மிகச்சாதாரண மனிதர் ஆக இருப்பீர்கள். உங்கள் இடத்திற்கு வேறு ஒரு வரை மிகச்சுலபமாக இன்னும் குறைவான சம்பளத்தில் நியமித்து விடமுடியும்.

வியாபாரம் என்பது நகர்ந்து கொண்டே இருப்பது. இயங்கிக் கொண்டே இருப்பது. அந்த இயந்திரத்தில் மிகச் சாதாரணமான உதவியாளராக இருப்பதிலிருந்து உயர்ந்து சிறந்த நிர்வாக இயந்திரத்தை உருவாக்கும் நப ராக நிர்வாகத்தின் உடைமையாளராக உயர்வது எப்படி? மேம்பாட்டுக்கு, உடைமையாளராக உயர்வது எப்படி? மேம்பாட்டுக்கு, உயர்வுக்கு, வளர்ச்சிக்கு உருப்படியான யோசனைகளைச் சிந்திக்க வேண்டும். எழுதி வைக்க வேண்டும். வெளிப்படுத்த வேண்டும். உங்களது நிறுவனத்தில் நீங்கள் சாதாரணமான உதவியாள் என்ற நிலையில் இருந்து எளிதில் உங்களுக்குப் பதிலாக வேறு ஆளை நியமிக்கலாம் என்கிற நிலையில் இருந்து மாற வேண்டும். உயர்ந்து வர வேண்டும். இப்படி நினைக்கிறீர்களா? அதற்கான வழி என்ன?

01. மேம்பாட்டுக்கு வளர்ச்சிக்கு உருப்படியான யோசனைகளை நீங்கள் சிந்திக்க வேண்டும். நீங்கள் எதை மேம்படுத்த விரும்புகிறீர்களோ, அவற்றைப் பற்றி உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். அவ்வாறு செய்யும் போது உங்களுடைய கற்பனாசக்தி தூண்டிவிடப்படும். அந் நிலையில் புதிய யோசனைகளை 'பளிச்' 'பளிச்' என்று உருவாகும். அப்படி உருவாகும் யோசனைகளை எழுதி வையுங்கள்.

02. நீங்கள் சிந்திக்கிற எழுதி ஒவ்வொரு யோசனையினையும் அலசி ஆராய்ந்து மதிப்பிட்டுச் சீர்தூக்கிப் பாருங்கள். செயல்முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக அந்த யோசனைகளுடன் மேற்கொண்டு ஏற்படுகிற பயனுள்ள பரிந்துரைகளை இணையுங்கள். தூய்மைப்படுத்துங்கள். சீரமைத்துப்பாருங்கள். விளக்குங்கள். இவற்றை உடனே செய்யுங்கள். மேலும் செம்மைப்படுத்த உரிய நேரம் வரட்டும் என்று காத்திருந்து அந்த யோசனைகளை ஆறப்போட்டு வைக்காதீர்கள்.

3. மேம்பாட்டுக்கான உங்கள் யோசனைகளை நிதானமாக மரியாதையுடன் அடக்கமுடன் தாமதம் செய்யாமல் வெளிப்படுத்துங்கள்.

பின்னால் தரப்பட்டுள்ள வெற்றிக்கான நிருபிக்கப்பட்ட வழிகளை நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள். அவை உலகின் மிக வெற்றிகரமான வர்தக அதிபர் டாக்டர் வில்லியம் ஷோல் என்பவரால் பரிந்துரைக்கப்பட்டவை.

'உங்களிடம் ஒரு யோசனை பளிச்சிட்ட உடனேயே நீங்கள் அதை செயலில் காட்டத் தொடங்கிவிட வேண்டும். அந்த யோசனையைச் செயல்படுத்த பொருத்தமான நேரத்தையும், இடத்தையும் நோக்கி நீங்கள் காத்திருந்தால், அந்த இரண்டும் உங்களுக்குக் கிடைக்காமலே போய்விடலாம். ஆக உங்களுக்கு ஒரு புதிய யோசனை உதயமானால்உடனேஅதைச் செயல்படுத்தி விடுங்கள். பரிசோதனை செய்யாமலே 'ஆகா இது நல்ல யோசனை' என்று மகிழ்ந்து கொண்டிருப்பதை விட செயலில் பொருத்திப் பார்த்து 'இந்த யோசனை பயனற்றது' என்ற முடிவுக்கு வந்து விடுவதே கூட மேலானது' இவ்வாறு வில்லியம் ஷோல் கூறுகிறார்.

எனவே, எந்த ஒரு யோசனை ஆனாலும் அதை ஊறப்போட்டு வைக்காதீர்கள். மேம்பாட்டுக்கான யோசனைகளைப் பற்றி சிந்திக்கும் போது ஒரு யோசனையோடு தொடர்பு கொண்ட மற்றொரு யோசனை பளிச்சிடும். இது சங்கிலித் தொடர்போல வந்து கொண்டே இருக்கும். முதல் யோசனையை நீங்கள் ஊறப்போட்டால் பிற யோசனைகளை வழங்குகிற ஊற்றுக்கண் தடைபோட்டுப் போகும். ஆக எந்த யோசனை ஆனாலும் ஊறப்போடாதீர்கள்.

ஒரு யோசனை உதயமானால் அதை மறைத்து வைக்காதீர்கள். யோசனையை ஒளித்து வைத்தால் வெளி உலகம்காணாமலே அந்த யோசனை மறைந்து விடும்.

அவற்றால் விளைவது சாதகமான கருத்தா அல்லது பாதகமான கருத்தா என்பது பற்றிக் கவலைப்படாதீர்கள். மேலும் மேம்படுத்துவதற்காக உங்கள் யோசனையானது விமர்சனம் என்கிற சூறாவழியில் சிக்கலாம். மாறுதலுக்கான பரிந்துரைகள் எனும் பிரளயத்தில் உங்கள் யோசனை முழ்கடிக்கப்படலாம். ஆகவே விமர்சனம் மற்றும் பரிந்துரைகளை எதிர்காதீர்கள். புதிதாக வருகிற மாற்று யோசனை ஒவ்வொன்றும் உங்கள் யோசனைக்கு செழுமை ஊட்டும். அவற்றை வரவேற்று விடுங்கள். அவற்றைப் பாராட்டுங்கள். கருத்துக்களைக் கூறிய அனைவருக்கும் கடமைப்பட்டிருப்பதாகப் பகிரங்கமாகப் சொல்லுங்கள்.

அவர்களால் விவாதிக்கப்படுவது அவர்களுடைய கவனத்தை கவர்ந்து நிற்பது உங்கள் யோசனை; அதை மறந்து விடாதீர்கள். உங்களுடைய சில யோசனைகள் ஏற்கப்படா விட்டாலும் கவலையில்லை. அவற்றை யாரும் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்ற நிலையைக் காட்டிலும் பரிசீலனைக்கு ஏற்கப் பட்டதே சிறந்தது அல்லவா? ஆக மற்றவர்களுடைய கவனத்தை கவர்ந்திட வேண்டுமானால் அதற்கு மிகச் சுலபமான மிகச் சிறந்த - மிகவும் லாபகரமான வழி - சாதகமான வழி- நினைவில் நிற்கக் கூடிய வழி சாதகமான நினைவில் நிற்கக் கூடிய வழி- மேம்பாட்டுக்குச் சிறந்த யோசனைகளைச் சொல்வதுதான். எனவே எப்போதும் பயன்படுகிற - விரும்பப்படுகிற - ஒரு கொத்து யோசனைகளை தயாராய் வைத்திருங்கள்.


செயலில் காட்டக்கூடிய - பயன் தரக் கூடிய - பல யோசனைகளை வைத்திருங்கள். அவற்றைச் செயலில் காட்ட சமர்ப்பித்து விடுங்கள்.

உங்களுடைய உள்மனம் என்கிற அகண்ட பாத்திரத்தில் - யோசனைகளுக்கான கருவை ஏராளமாக வைத்திருங்கள். யோசனைகளை உற்பத்தி செய்து தள்ளுகிற சிந்தனைப் பாதையில் யோசனைகளைப் போட்டு நிரப்பி வையுங்கள். அவை நகர்ந்து முழுமையடையும் ஒரு கட்டத்தில் இருக்க வேண்டும்.

ஆகவே "ஏதாவது செயல்படுகிற செயல்படுத்துகின்ற மனிதன் நான்" என்று இந்தக் கணமே உங்களைப் பற்றித் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் சீக்கிரம் செல்வந்தர் ஆகி விடுவீர்கள்.


**சுடர் ஒளி வாசகர்களே!**



குடத்தில் இட்ட விளக்காக
உங்களுக்குள் மறைந்து கிடக்கும்
படைப்புத் திறன்களைக் குன்றின்
மேல் தீபமாக்கிட சுடர் ஒளி
காத்திருக்கிறது.

சிறுகதை, கவிதை, கட்டுரை,
துணுக்குகள், எதுவானாலும்
அனுப்பிவையுங்கள். தரமானவை
பிரசுரிக்கப்படும்.

படைப்புக்களை அனுப்பவேண்டிய
முகவரி:


சுடர் ஒளி,
இல.361
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறுவர் உலகம்

இலக்கம் 01 இல் இருந்து 16 வரையிலான இலக் கங்களைத் தொடர்பு படுத்தி உருவத்தைக் கண்டு பிடியுங்கள்.




# எருமைக் கணக்கு

பண்ணையார் ஒருவர் தன் ஐந்து வயது மகனுடன் ஆசிரியரிடம் வந்தார்.

''ஐயா! நான் பக்கத்து ஊர்ப் பண்ணையார்; செல்வம் படைத்தவன். என்னிடம் ஐம்பது எருமை மாடுகள் உள்ளன. இவன் என் ஒரே மகன். இவனுக்கு நீங்கள் கல்வி கற்றுக்கொடுக்க வேண்டும். அதற்கு எவ்வளவு பணம் கேட்கிறீர்கள்?''என்றார்.

''நூறு பணம் தாருங்கள். நன்றாக கல்வி கற்றுத் தருகிறேன். இவன் பேரும், புகழும் பெற்று விளங்குவான்,'' என்றார் ஆசிரியர்.

''ஆ! நூறு பணமா? அந்தப் பணத்திற்கு நல்ல எருமை மாடு ஒன்று வாங்கலாமே,'' என்றார் பண்ணையார்.

''வாங்குங்கள். உங்கள் பண்ணையில் ஐம்பத்து இரண்டு எருமை மாடுகள் உள்ளன. இப்படி மற்றவரிடம் பெருமை அடித்துக் கொள்ளலாம்,''

''ஆசிரியரான உங்களுக்குக் கணக்கு தெரியாதா? என்னிடம் ஐம்பது மாடுகள் உள்ளன. ஒரு மாடு சேர்ந்தால், ஐம்பத்து ஒன்று தானே ஆகும். எப்படி ஐம்பத்து இரண்டு வரும்?''

''மாடுகள் கணக்கில் உங்கள் மகனைச் சேர்க்கவில்லையே... அவனையும் சேர்த்தால் ஐம்பத்து இரண்டு ஆகும்!''

''என் மகனை மாடுகள் கணக்கில் சேர்க்க அவன் என்ன மாடா? இப்படிப் பேச உங்களுக்கு என்ன துணிச்சல்?'' என்று கோபத்துடன் கேட்டார் பண்ணையார்.

''கல்வி கற்றவன் மனிதன். படிக்காதவன் மாடு, மரம் போன்றவன். இது உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டார் ஆசிரியர்.

''என்னை மன்னியுங்கள். கல்வியின் பெருமையை உங்களால் தெரிந்து கொண்டேன். நீங்கள் கேட்ட பணம் தருகிறேன். இவனுக்கு நன்றாக கல்வி கற்றுக் கொடுங்கள். சிறந்த மனிதனாக இவனை மாற்றுங்கள்,'' என்றார் பண்ணையார்.

''அப்படியே செய்கிறேன்,'' என்றார் ஆசிரியர்.

# கேள்வி ஒன்று: பரிசு 1000 ரூபா

மாணவ, மாணவியரே! கூப்பனுக்குள் உள்ள கேள்விக்கு என்ன விடை என்று தெரியுமா? தெரிந்தால் உடனே எழுதி கூப்பனைக் கத்தரித்து 03.09.2013 இற்கு முன்னர் அனுப்பிவையுங்கள். சரியான விடை எழுதியோரில் ஒருவருக்கு 1000 ரூபா பணப்பரிசு காத்திருக்கிறது.

**கேள்வி:-**

ரஷ்யாவில் நடைபெற்று முடிந்த உலகத் தடகளப் போட்டியில் ஜமைக்காவின் உசைன் போல்ட் வென்ற தங்கப் பதக்கங்கள் எத்தனை?

பதில்:- ..............................

பெயர் :- ..............................

தரம் :- ..............................

பாடசாலை :- ..............................

அனுப்ப வேண்டிய முகவரி:

கேள்வி ஒன்று: பரிசு 1000 ரூபா.

சுடர் ஒளி

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

01



# மாயத் தீவில் மந்திரக் கிழவி

சிறுவர் மர்மத் தொடர் **16** – அம்புலி

நீண்ட நேரம் வானில் பறந்த மந்திரத் தேர் கடல்களையும், மலைகளையும், காடுகளையும் தாண்டிக் கடைசியாக மாயத் தீவில் இறங்கியது.

மாயத்தீவில் காலடி எடுத்து வைத்த பிறகு தான் இளவரசர்கள் இருவருக்கும் மீண்டும் சுயநினைவு வந்தது. முதலில் தாம் எங்கே நிற்கிறோம் என்றது கூட இளவரசர்களுக்குப் புரியவில்லை. பின்னர் மெதுவாக மந்திரக் கிழவியின் சித்து விளையாட்டால் மாயத் தீவுக்கு இருவரும் கொண்டுவரப்பட்டுள்ளதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். இந்திரவர்மனும், சந்திரவர்மனும் மிரண்டுபோய் நிற்பதைப் பார்த்த மந்திரக் கிழவி, தன்னுடைய மந்திரக் கோலை எடுத்துக் கொண்டு அவர்கள் அருகே வந்தாள்.

"பார்த்தீர்களா இந்த அற்புதத் தீவை! இந்த மந்திரத் தீவுக்கு வர நீங்கள் புண்ணியம் செய்திருக்க வேண்டும். உலகில் சொர்க்காபுரி இது தான்!" என்று தன் மந்திரத் தீவின் மகிமை பற்றி அவள் கூறத் தொடங்கினாள்.

மந்திரத் தீவினை நோட்டமிட்ட சந்திரவர்மனுக்கு உதறல் எடுக்கத் தொடங்கியது. மண்டை ஓட்டு வடிவில் அமைந்த மாளிகைகளும், இரத்த நீர் ஊற்றுக்களும், எலும்புகளால் செய்யப்பட்ட அலங்காரத் தோரணங்களும் மந்திரத் தீவு எங்கும் நிறைந்திருந்தன!

"இதுவா சொர்க்காபுரி? பார்ப்பதற்கு நரகம் போல் இருக்கிறது!" என்று தன்னை அறியாமல் கூறினான் இந்திரவர்மன்.

"வயதில் சிறியவர்களாக இருந்தபோதும் உங்கள் வாய்க் கொழுப்பு அதிகம் தான்! யாரங்கே! இவர்கள் இருவரையும் பிடித்துப் பத்திரமாக அடைத்து வையுங்கள். நாளை மறுதினம் பௌர்ணமி அன்று இவர்களைப் பலி கொடுக்க வேண்டும்!" என்று கூறிவிட்டு மந்திரக் கிழவி அவ்விடத்தை விட்டு நகரத் தொடங்கினாள். அவளின் ஏவலைக் கேட்டு எங்கிருந்தோ வந்த இரு இராட்சதர்கள், இளவரசர்களை பிடிக்க முற்பட்டனர்.

(மந்திரக் கிழவி வருவாள்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடப்பட்ட காதுகளும் திறக்கப்பட்ட வாய்களும்

அக்கினிகுமாரன்

இனி தமிழ்மக்கள் முன்னெடுப்பது தமது உரிமைகளைப் பெறுவதற்கான மூன்றாம் கட்டப் போர். வடமாகாண முதலமைச்சர் வேட்பாளர் முன்னாள் நீதியரசரான சி.வி. விக்கினேஸ்வரன் இப்படிக் கூறியதாகச் செய்திகள் வெளியாகின.

1956ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் அஹிம்சை வழியில் முன்னெடுக்கப்பட்டது. இது முதலாம் கட்டப் போர்! 1980 ஆம் ஆண்டு தொடக்கம அஹிம்சைப் போராட்டத்தின் மீது தொடர்ந்து ஆயுத அடக்குமுறை பிரயோகிக்கப்பட்ட நிலையில் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அது இரண்டாம் கட்டப்போர்.

2009 இல் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட நிலையில் இனப்பிரச்சினை சர்வதேச மயப்பட்ட பின்பு இப்போது முன்னெடுக்கப்படுவது ராஜதந்திரப் போர். இது மூன்றாம் கட்டப்போர்!

இதை சி.வி. விக்கினேஸ்வரன் மட்டுமல்ல தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தெளிவாகவே வலியுறுத்தியுள்ளது. உலக அளவிலும் இது ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது.

இதைத்தான் வடக்கின் முதலமைச்சர் வேட்பாளர் வெளிப்படுத்தியிருக்கிறார். எல்லோராலும் விளங்கப்பட்ட இந்த விடயத்தை அமைச்சர் மைத்திரி பால சிறிசேனாவினால் மட்டும் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் அர்த்தத்தைதேடி அலைகிறார். குருநாகலில் இடம்பெற்ற ஒரு மக்கள் சந்திப்பில் அர்த்தம் தேடுவதாகச் சொல்லிக் கொண்டு அபத்தங்களைக் கக்கியிருக்கிறார்.

மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்! என்பார்கள். ஆனால் இவர்கள் பேயைக் காண்பதில்லை. சிங்களமக்களை மிரண்டு போக வைக்க இல்லாத பேயை மீண்டும் மீண்டும் காட்டிக் காட்டிக் கொண்டிருக்கப் பார்க்கிறார்கள்.

விக்கினேஸ்வரனின் வார்த்தைகளுக்கு அர்த்தம் தேடிய அமைச்சர் அவர் கண்டு பிடித்த அர்த்தத்திற்குள் ஆள்விழுங்கிப்பேயைக்காட்டியிருக்கிறார்.

அவர் இலங்கை 2800 வருட கலாசாரப் பாரம்பரியம் கொண்ட நாடு எனவும் 30 வருடங்களாக இடம்பெற்ற போரை ஜனாதிபதி முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் உருவாக்கியிருப்பதாகவும் அதைக் குழப்ப சிங்கள மக்கள் எவரையும் அனுமதிக்கக் கூடாது எனவும் உரையில் தெரிவித்துள்ளார்.

அதாவது விக்கினேஸ்வரன் அவர்களால் குறிப்பிடப்பட்ட மூன்றாம் கட்டப்போர் 2800 வருட பாரம்பரியத்தையும் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் சீர் குலைத்து விடுமாம். அவர் நின்று உரையாற்றிய குருநாகல் மண்ணிலேயே அவர்களின் தொன்மை வாய்ந்த கலாசாரமும், சமாதானமும், கடந்த வருடம் மிகத் தெளிவான முறையில் வெளிப்படுத்தப்பட்டது.

குருநாகலின் பிரதான பள்ளிவாசலில் நோன்புத் தொழுகை இடம்பெற்ற வேளையில் புத்த பிக்குகள் தலைமையில் புகுந்த ஒரு கோஷ்டியினர் அங்கு வழிபாட்டில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களை விரட்டியடித்து விட்டு அங்கு பிரித் ஓதினர். அவர்களின் தொன்மை வாய்ந்த பண்பாட்டிற்கும் ,சமாதானத்திற்கும்,இன நல்லிணக்கத்திற்கும் இவற்றை விடவேறு சாட்சியம் தேவையா?

இன்று வரை இச்சம்பவம் தொடர்பாக எந்த ஒரு நபரும் கைது செய்யப்படவுமில்லை. தண்டிக்கப்படவுமில்லை என்றால் இவர் அமைச்சராக இருக்கும் அரசாங்கமும் இம்மூறை மீறல்களை ஆதரிக்கிறது என்று தானே அர்த்தம்?

அதே வடமேல் மாகாணத்தில் அவர் உரையாற்றிய அதே நாளில் சிங்கள ராவய என்ற அமைப்பு இன்னுமொரு விதமான நல்லிணக்கத்திற்குள் இறங்கிவிட்டது. அது முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இவ் வருடமும் மிருக பலி நடத்த அனுமதிக்கப்போவதில்லை எனவும் முடிந்தால் நடத்திப் பார்க்கட்டும் எனச் சவால் விட்டுள்ளது.

கடந்த வருடம் மிருக பலிக்கு எதிராக பிக்குகள் தலைமையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள், வன்முறைகள் காரணமாக ஆலய நிர்வாகம் மிருக பலியை நடத்தவில்லை. அதற்கு முன்னைய வருடத்தில் அமைச்சர் மேர்வின் சில்வா மிருக பலிக்கென கொண்டு வரப்பட்ட ஆடுகளையும், கோழிகளையும் அபகரித்துச் சென்று மிருக பலியை நிறுத்தினார். இச்சம்பவங்கள் தொடர்பாக எவர் மீதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அப்படியான முறையில் புத்த பிக்குகளும் அமைச்சர் மேர்வின்சில்வாவும் தங்கள் தொன்மை வாய்ந்த கலாசார பாரம்பரியத்தையும் நல்லிணக்கத்தையும் வெளிப்படுத்திக் கொண்டனர்.

இலங்கை அரசமைப்புச் சட்டத்தின்படி, எந்த ஒரு மதத்தினருக்கும் தங்கள் வழிபாட்டு முறைகளைக் கைக்கொள்ள பூரண சுதந்திரம் உண்டு. அந்த விதியை பகிரங்கமாக மீறும் பௌத்த பிக்குகள் மீதோ அவர்களுடன் இணைந்து செயற்படும் காடையர்கள் மீதோ, நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. அது மட்டுமல்ல இன்று வரை முஸ்லிம் பள்ளிவாசல்கள் மீதும் இந்துக் கோயில்கள் மீதும் வன்முறைகள் தொடர்கின்றன. இப்படியான ஒரு விசித்திரமான சமாதானம் தான் இந்த நாட்டில் தொன்மை வாய்ந்த 2800 வருடப் பராம்பரியம் வாய்ந்த கலாசாரமாக நிலை நிறுத்தப்பட்டுள்ளது. இப்படியான சம்பவங்கள் இடம்பெறும்போது அமைச்சரின் கண்களும் காதுகளும் மூடி விடும்! வாய் மட்டும் சமாதான,நல்லிணக்க மந்திரத்தை உச்சரித்துக் கொண்டேயிருக்கும்.

அநாகரிக தர்மபால காலத்தில் முளை விட்ட பௌத்த சிங்கள பேரினவாதப் போக்கு 1956 தனிச் சிங்கள சட்டத்தின் மூலம் ஒடுக்குமுறை வடிவம் எடுத்த போதுதான், இனப்பிரச்சினை தோன்றியது? அப்படியான கொடிய இன ஒடுக்குமுறை வலுவடைந்த போது தான் முதலாம் கட்ட போர் அஹிம்சை வடிவில் உருவெடுத்தது. அன்று இனப்பிரச்சினை தீர்வுக்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் இன வெறியர்களால் முறியடிக்கப்பட்டன. அன்று இனப்பிரச்சினைத் தீர்க்கப்பட்டிருந்தால் போர் முடிவுக்கு வந்திருக்கும்.

ஆனால் அரசோ அஹிம்சைப் போராட்டத்தின் மீது ஆயுத வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது. எனவே இரண்டாம் கட்டப் போர் ஆயுதப் போராட்டமாக வெடித்தது. ஆயுதப் போராட்ட காலத்தில் கூட நிரந்தர தீர்வு காண எடுக்கப்பட்ட முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டன.

எட்டப்பட வேண்டியது தீர்வு!

இடம் பெற்றதோ ஆயுதப் போராட்டத் தோற்கடிப்பு. என்ன காரணத்திற்காகப் போர் தொடங்கியதோ, அதற்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. மாறாக காரணங்கள் மேலும் மேலும் வலுப்படுத்தப்படுகின்றன. எனவே எப்படிப் போர் முடிவடைய முடியும்? அதனால் தான் தவிர்க்க முடியாதபடி மூன்றாம் கட்டப் போர் ஆரம்பமாகிவிட்டது.

இதன் மையம் இலங்கையில் தான். ஆனால் இப்போது இதன் களம் சர்வதேச மட்டத்திற்கு விளங்குவதில்லை. இந்த உண்மைகளைக் கேட்காமல் காதுகளையும்,பார்க்காமல் கண்களையும் மூடிக்கொண்டு அமைச்சர் வாயை மட்டும் அகலத் திறக்கிறார். எனவே வார்த்தைகள் அர்த்தங்களை விட்டு விட்டு வானவெளியில் வலம் வருகின்றன. இரண்டாம் கட்டப்போர் சர்வதேச உதவியுடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. எனவே அரசாங்கம் எவ்வளவு தான் உள்நாட்டுவிவகாரம் எனக் கூக்குரலிட்டாலும் மூன்றாம் கட்ட இராஜதந்திரப்போர் சர்வதேசக் களத்திற்கு விரிந்து விட்டது. எனவே நியாயமான, நிரந்தரமான தீர்வு எட்டப்படும் வரையும் போர் தொடரும்.



**“ மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்! என்பார்கள். ஆனால் இவர்கள் பேயைக் காண்பதில்லை. சிங்களமக்களை மிரண்டு போக வைக்க இல்லாத பேயை மீண்டும் மீண்டும் காட்டிக் காட்டிக் கொண்டிருக்கப் பார்க்கிறார்கள். ”**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் பெண்கள் சிக்குவதில்லையா?



## பித்தன் பதில்கள்

க.கனகா,
வடமராட்சி.

கே : பித்தரே! ஸீ தொலைக்காட்சியில் 'சொல்வதெல்லாம் உண்மை' நிகழ்ச்சியில் பல்வேறு குடும்பங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்ப்புச் சொல்கின்ற நாட்டாமை நடிகைக்கும் அவரோடு கூட நடித்த நடுத்தர நடிகருக்கும் இடையிலான தவறான தொடர்பு வெளிவந்திருக்கிறதே. இந்த நடிகைக்கு யார் தீர்ப்புக் கூறுவது?

ப : உதைத்தான் சொல்லுறது 'அறப்படிச்ச பல்லி கூழ்ப்பானைக்க விழுந்ததாம்'. உந்த நடிகை ரீவியில போடுற ஆட்டத்தைப் பார்க்க பத்திக்கொண்டு வாறது.



தான் ஒரு பத்தரைமாற்றுத் தங்கம் எண்ட நினைப்பில நிகழ்ச்சியில கலந்துகொள்ளுற ஆக்களுக்கு அற்வைஸ் சொல்லுறதோட நிக்கமாட்டா. அதுக்கு அங்கால போய் தான் சப்போட் பண்ற பக்கமாக நிண்டுகொண்டு எதிராளிகள ரீவி எண்டும் பார்க்காம அதட்டி உருட்டி நிகழ்ச்சிய முடிச்சுப்போடுவா. நிகழ்ச்சியில கலந்து கொள்ளுற ஆக்கள் உணர்ச்சிவசப்படுறதை விடவும் உந்த மனிசி கத்துற கத்துத்தான் கூடவாயிருக்கும். இப்ப இவவோட இரண்டு மூண்டு படங்களில கூட நடிச்ச குணச்சித்திர நடிகரோட தொடர்பு எண்ட விசயம் அம்பலத்துக்கு வந்திருக்கு. இப்ப இவாக்குத் தீர்ப்புச் சொல்ல இவவால பாதிக்கப்பட்ட தொலைக்காட்சிக் காரர்களைத் தான் கூட்டிக்கொண்டு வரவேணும்.

தி.நிந்துஜன்,
திருநகர், கிளிநொச்சி.

கே : பித்தரே! வடமாகாணத் தேர்தலில் போட்டியிடும் சட்டத்தரணி ஒருவர் படையினரின் நிகழ்வில் கலந்துகொண்டதை ஊடகங்கள் புகைப்பட ஆதாரங்களோடு வெளிப்படுத்தியிருந்தன. ஆனாலும் அப்படி எதுவும் நடக்கவில்லை என்று பொலிஸ்தரப்பு அடித்துச் சொல்கிறதே?

ப : அவிச்ச மீன் துடிக்கிறதெண்டு சொல்லவும் ஒரு திறமை வேணும். பொலிஸில இருக்கிறதுக்கு இந்தத் திறமை கட்டாயம் இருக்கோணும். இந்தியாவில மும்பையில உள்ள பொலிஸ்காரரில முக்காவாசிப் பேர் ஏதோவொரு அரசியல்வாதிக்கு வேலை செய்யிறதா பேப்பரில அண்டைக்கு வாசிச்சன். இலங்கையில மட்டுமல்ல உலகம் முழுக்க இருக்கிற எல்லாப் பொலிஸ்காரருக்கும் அரசியல் வாதிக்கு வால்பிடிக்கிறதுதான் பரம்பரைக் குணம் போல.
முந்தி ஒருக்கா தெல்லிப்பழையில சனம் ஆர்ப்பாட்டம் நடத்தேக்க அதைக் குழப்ப நினைச்ச இரண்டு மூண்டு பேரை பொலிஸிட்டப் பிடிச்சுக் குடுத்தவ. அதுவும் பேப்பரில படம் வந்தது. ஆனால் இப்ப ஆஸ்திரேலியாவில ஓடிப்போய் ஒளிச்சிருக்கிற அப்பத்த பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி "ஒருத்தரையும் ஆரும் பிடிச்சு பொலிஸிட்டத் தரேல்ல" எண்டு, தான் பிடிச்ச முயலுக்கு மூண்டு கால் எண்டு ஒற்றக்கால்ல நிண்டவர். அவற்ற பாணியிலதான் எல்லாப் பொலிஸ்காரரும் இருக்கினம். இப்பிடியான புளுகுகள கேட்கவேணும் எண்டது எங்கட விதி.

வி.பிரதீபன்,
நல்லூர்.


கே : பித்து! யாழ்ப்பாணத்தில் இப்போது இளம் பெண்கள் ஸ்கூட்டியில் பறப்பது அதிகரித்துள்ளது. கண்மண் தெரியாத வேகத்தில்கூட செல்கிறார்கள். ஆனால் விபத்துகளில் பெண்கள் சிக்குவது குறைவே இது எப்படி?

ப : உங்களுக்கு அருச்சுணன் கிளியை இலக்குப் பாத்த கதை தெரிஞ்சிருக்கும். மற்ற எல்லாருக்கும் மரம், கிளை, கிளி, கிளியின் சொண்டு என்று எல்லாமே தெரிய அருச்சுணனுக்கு மாத்திரம் கிளியின் கழுத்து மட்டுமே தெரிஞ்சது. அதால தான் அவன்ர இலக்குப் பிழைக்கிறேல்லை.



அதமாதிரித்தான் பொம்பிளையளும். ஸ்பீற்றா ஓடினாலும் அங்கால இஞ்சால பிராக்குப் பாக்கிறது குறைவு. ஆனா இப்பிடி ஓடுற பெட்டையளப் பார்த்து வாய் பிளந்து தங்கள மறக்கிறதால தான் கன பெடியள் சுவரோடையும் தூணோடையும் மோதிப் போட்டு ஆஸ்பத்திரியில படுக்கிறாங்கள்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 584



**மேலிருந்து கீழ்**
1. கண்தெரியாதவன்
2. ஊழியக்காரன்
3. மிடா
4. சேர்த்து வை
5. ரசிப்பவன்
8. இளம்பெண்
10. போத்தல்
11. விருப்பம்
12. சுணங்கு
13. ஆகாயம்
14. பாடுவதைத் தொழிலாகக் கொண்டவன்
17. மயக்கமூட்டும் பானம்
18. பார்ப்பதற்கு உதவும் உறுப்பு

**இடமிருந்து வலம்**
1. கதையின் பாத்திரம்
6. ஊட்டம்
7. மன ஈடுபாடு கொள்
9. சாப்பிடு
10. நளன் இவனோடு சூதாடி அனைத்தையும் இழந்தான்
11. தேசத்தின்
12. பருகச் செய்து வை
15. தாண்டு
16. பொறுப்பு
17. உள்ளம்
19. கனவு
20. தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி
21. தோழன்

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 584

சொற்சிலம்பம் 584 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 18 ஆம் மற்றும் 25 திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப் பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 582 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**
1.பகலவன், 2. சருவம், 3. குதிகால், 4. பரி, 8.அன்பு, 10.இருக்கை, 12. பரிபாடல், 14. வாகடம், 16. காப்பு, 17. டும், 20. பற

**இடமிருந்து வலம்**
1. பசளை, 3.கும்பம், 5. கரு, 6. பாதி, 7. லவன், 9. காதி, 11. வம்பு, 12. பரு, 13.அவா, 15.ரிக், 18. பாகை, 19. பப்படம், 21.புறம், 22. கல்வி.

### போட்டி இல. 581 இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | சி.எழில்வேள், அரசினர் வைத்தியசாலை, முழங்காவில். |
| 2ஆம் பரிசு | ந.பதிவேந்தன், இல. 7/2, பிரசாத் வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். |
| 3ஆம் பரிசு | மு.இராசரத்தினம், பூம்பொழில், திருநகர் தெற்கு, கிளிநொச்சி. |

### பாராட்டுப் பெறுவோர்

(1) பா.சிவதரன்,
பிரதான வீதி, தம்பிலுவில் - 01
(2) வி.நாராயணன்,
இல.16/ 14, சன்ஹில் கார்டின்ஸ்,
பாகொடறோட், நுகேகொட.
(3) வி.செல்வநாயகம்,
சிவன்கோயில் வீதி, புத்தூர்.
(4) திருமதி வஸந்தா பாலேந்திரா,
இல.21, நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை.
(5) ப.சுயந்தினி,
கிறிஸ்தரசர் மாணவியர் இல்லம்,
முருங்கன், மன்னார்.
(6) எஸ்.செல்வநாதன்,
இல.14/2, பீரிஸ் பிளேஸ்,
தெஹிவளை.
(7) செல்வி செ.தர்மினி,
வல்லை வீதி, அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
(8) பா.வசந்தபிரியன்,
இல.36 4/4, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையோருக்கான புதிய பகுதி!

# காதலர் மட்டும்...

## காதல் ஜோதிடம்



### உங்கள் பொருத்தம் எப்படி?

காதலர்கள் கட்டாயம் அறிய வேண்டிய சங்கதிகள்...

**காதல் சொதப்பும்!**

12-ம் இடம்: இந்த இடம் அயன, சயன போக ஸ்தானம். இந்த இடம், இந்த இடத்தின் அதிபதி பலம் பெறுவது மிக அவசியம். காதல், காம சுகங்கள் இந்த இடம் மூலமாகத்தான் கிடைக்கிறது. இந்த இடத்தில் நீச்ச, பாவ, தீய கிரகங்கள் இல்லாமல் இருப்பது நலம் தரும். இந்த இடத்தை நீச்ச கிரகங்கள், பாவ கிரகங்கள் பார்த்தால் காதல் சிறப்பாக அமையாது.

**விவகாரமான சனி-சந்திரன்**

சனி, சந்திரன் சேர்க்கை, பார்வை பரிவர்த்தனை, நட்சத்திர சாரம், சனி வீட்டில் சந்திரன், சந்திரன் வீட்டில் சனி, சனி, சந்திரன் நீசம் போன்ற அமைப்புகள் ஜாதகத்தில் இருந்தால் அப்படிப்பட்டவர்கள் சுலபமாக மனதை மாற்றிக் கொள்ளக் கூடியவர்களாக இருப்பார்கள். புகழ்ச்சிக்கு மயங்குவார்கள், சபல புத்தி, சஞ்சல மனம் இருக்கும். இவர்களை காதல் வயப்படுத்துவது சுலபம் அதே நேரம், மனம் மாறி எளிதில் வேறொருவர் மீது நாட்டம் ஏற்பட்டுவிடக்கூடிய சூழலும் இருக்கிறது. பெண்களின் ஜாதகத்தில் சுக்கிரனும், ஏழாம் அதிபதியும் பலம் குறைந்து நீச்சமாக இருப்பது, ஏழாம் வீட்டில் ராகு-சனி, சுக்கிரன்-கேது இருப்பது. நவாம்சத்தில் சுக்கிரன் வீட்டில் சனியும், சனி வீட்டில் சுக்கிரனும் இருப்பது ஆகியவை இருந்தால் பெண்கள் மீதே அவர்களுக்கு நாட்டம் ஏற்படலாம்.

ஆண்கள் ஜாதகத்தில் லக்னத்தில் ராகு அல்லது கேது இருந்து பத்தாம் இடத்தில் புதன் இருந்தால் வயதில் மூத்த காதலி அமைவார். ஏழாம் வீட்டில் நீச்ச கிரகம் இருந்தால் சபல புத்தி உண்டாகும். காதலியை மடக்குவதற்கு தந்திர நடவடிக்கைகளை கையாள்வார்கள். ஏழாம் வீட்டில் கூட்டுக்கிரக சேர்க்கை இருந்தால், காதலி கண்டுகொள்ளாமல் சென்றால்கூட பின்னால் அலைவார்கள். ஏழாம் வீட்டில் சனி-சுக்கிரன் இருந்தால், ஏற்கனவே திருமணமாகி கணவரை பிரிந்த பெண்ணின் தொடர்பு உண்டாகும். ஜாதகத்தில் இருக்கும் கிரக அமைப்புகள்தான் யோக, அவயோகத்துக்கு காரணமாக இருக்கிறது. நன்மை, தீமை இரண்டுக்குமே கிரகங்கள்தான் காரணம். ஒருவருக்கு கிடைக்கும் நல்லது, கெட்டது எல்லாவற்றையுமே பிராப்தம் என்கிறது ஜோதிட சாஸ்திரம்.

அதனால்தான் திருமண பொருத்தத்தின்போது ஜாதக பொருத்தம் மிக அவசியம் என்று கூறுகிறார்கள். இதில் சொல்லப்பட்டுள்ள கிரக அமைப்புகள் எல்லாம் இருந்தபோதிலும், சில நேரம் கைகூடாமல் போகலாம். அதற்கு வேறு கிரக சேர்க்கைகள் காரணமாக இருக்கும். மேலும் காதல், காமம் போன்ற விஷயங்களில் சந்தர்ப்ப சூழ்நிலைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அத்துடன் நீச்ச கிரக, பாவ கிரக, திசா புக்தி அந்தரங்களில் தொடர்புகள் ஏற்படுகின்றன. ராசிநாதன், லக்னாதிபதி பலமாக இருந்தால், எந்த சூழ்நிலையிலும் அவர் சஞ்சலம், சபலம் அடையமாட்டார் என்று அடித்து சொல்லலாம். இதில், ஜோதிட சாஸ்திரத்தின் அடிப்படையில் பொதுவான பலன்கள், கருத்துகளே கூறப்பட்டுள்ளன. அவரவர் சொந்த ஜாதகப்படி இதில் மாற்றங்கள் வரலாம். (அடுத்தவாரம் தொடரும்)

## காதலராவதற்கு தேவையான தகுதி



காலுக்குச் சரியான அளவில் செருப்பைத் தேர்வு செய்ய வேண்டும். சிறியதாக இருந்தால் காலில் புண் ஏற்படும். பெரியதாக இருந்தால் நடக்க முடியாது. இதேபோல்தான ஆண் அல்லது பெண் தனக்குத் தகுந்த சரியான இணையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதுடன் நிறுத்திக்கொள்ளாமல் தேர்ந்தெடுப்பதற்கான சில வழிமுறைகள்.....

1. இருவரும் ஒரே நிலையில் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்
2. ஆணை விட பெண்ணுக்கு மூன்று வயது வரை குறைவாக இருக்க வேண்டும்.
3. தலைமுடி, நகம், காதுகள், பாதங்கள் போன்றவற்றை முறைப்படி பராமரிப்பவராக இருக்க வேண்டும்.
4. திருமணம் செய்து கொள்ளும் முன் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் நன்றாகப் பார்த்து அறிந்து புரிந்து கொண்டிருக்க வேண்டும்.
5. முதல் பார்வையிலேயே பிடிக்காதவர்களை இணைத்து வைக்க குடும்பத்தினர் முயற்சிக்க கூடாது.
6. ஆணை விரும்புவதை பெண் சொல்லமாட்டாள் என்றாலும் கடைக் கண்பார்வை, கன்னம் சிவத்தல், புளகாங்கிதம் அடைதல், பேச்சில் தெரியும் இனிமை, குழைவு போன்றவற்றில் இருந்து அறிந்துகொள்ள முடியும்.
7. மனதுக்கு பிடித்த ஆணின் அருகே இருக்க விரும்பி ஏதாவது காரணத்துக்காக அந்த இடத்தையே சுற்றி சுற்றி வருவாள்.
8. நல்ல ஆடை அணியாத நேரத்தில் மனம் விரும்பிய ஆணின் முன் வர விரும்பமாட்டாள்.
9. பணக்காரன் என்பதற்காக யாரோ ஒருவனுக்குப் பெண்ணை மணமுடித்து வைக்கக் கூடாது.
10. சந்தேகப்படுபவர்களும் அடிக்கடி வெளியூர் பயணம் செய்பவர்களும் யாருக்கும் நல்ல துணையாக இருக்க முடியாது.

## காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு

உங்கள் வாழ்வில் அல்லது உங் களுக்குத் தெரிந்தவர்களின் வாழ்வில் காதல் பரிசுகள் பற்றிய சுவாரசியமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

தரமானவை வாரந் தோறும் இந்தப் பகுதியில் பிரசுரமாவதோடு, உங்களுக்கு ஆச்சரியமளிக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன.



**அனுப்ப வேண்டிய முகவரி:**
**காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு**
**சுடர் ஒளி**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## காதலுக்கு உதவிய எலி மருந்து

எனது நண்பன் ஒருவன் ஒரு பெண்ணை காதலித்தான். அதுவும் ஒருதலைக் காதல். பல முயற்சிகள். பல தியாகங்கள் செய்தும் அந்தப் பெண் எனது நண்பனை விரும்பவே இல்லை. இருந்தும் அவன் சளைக்காமல் முயற்சி செய்து கொண்டே இருந்தான். ஆனாலும் கைக் கூடவே இல்லை. கடைசியாக ஒருமுடிவுக்கு வந்தான். எனது நண்பன் அதாவது எலி மருந்து (Ran pek) ஒருபக்கட் வாங்கி அதனுடன் ஒரு கடிதமும் எழுதி, "இது எனது காதல் பரிசு. இந்தக் கடிதத்துடன் ஒரு எலி மருந்தும் (Ran pek) வைத்துள்ளேன். என் மேல் உண்மையான பாசம் இருந்தால், அன்பு இருந்தால் இந்தக் கடிதத்திற்குப் பதில் தரவும். என் மேல் அன்பு, பாசம் இல்லாவிட்டால் நான் அனுப்பிய எலி மருந்தைத் திருப்பி அனுப்பவும். நான் சந்தோசமாக உங்களை விட்டு சென்றுவிடுகிறேன்" என்று எழுதி எடுத்துக் கொண்டு காதலியின் வீட்டு பக்கமாகச் சென்ற போது காதலியும் அவளுடைய தங்கையும் படித்துக் கொண்டு இருக்கவே எனது நண்பன் ஜன்னல் வழியாக கடிதத்தைப் போட, அது போய் காதலியின் தங்கையின் மடியில் விழ, இருவரும் சேர்ந்து கடிதத்தைப் பார்த்து விட்டு, பயந்து, உடனே பதில் அனுப்பியிருந்தனர். இருந்தாலும் காதலியின் தங்கை எனது நண்பனுக்கு Ran pek என்று பெயரும் சூட்டிவிட்டார். காதலும் கைகூடி விட்டது. அதனுடன் ஒரு பட்டபெயரும் கிடைத்தது. எனது நண்பன் இன்றும் கூட அந்தப் பெண்ணுடன் சந்தோசமாக வாழ்கிறான். ஆனால் அவள் தங்கை எனது நண்பனை Ran pek என்று தான் அழைக்கிறாள். நானும் கூட Ran pek என்று தான் அழைக்கிறேன்.

**அஸ்கர் மொஹமட், ஹுணுகலை.**

## பரிசுபெற்ற வாசகி!




காதல்பரிசு போட்டியில் சிறந்த படைப்பை எழுதியிருந்த திருமதி கஸ்தூரி இராஜேந்திரனுக்கு **ரூபா 1000** பணப் பரிசை **"HONDA WORLD"** (பருத்துறை பிரதான வீதி, நெல்லியடி) நிறுவனத்தின் பிரதிநிதியொருவர் **"உதயன் - சுடர் ஒளி"** நல்லூர் உற்சவகாலப் பணிமனையில் வைத்து வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதயத்துடிப்பின் இடைவெளிக்குள்...



## காவியமான காதல் கதை

ஷாஜகான்-மும்தாஜினது காதலின் நினைவாக மட்டுமில்லாமல் உலக காதலர்களின் சின்னமாய் இன்றும் நிலைத்துள்ளது தாஜ்மஹால். மும்தாஜ் என்ற முப்பத்தேழு வயதுப் பௌர்ணமி தன் உயிரை ஷாஜஹானிடம் விட்டு காற்றோடு கலந்த நாளில் இருந்து ஷாஜகானுக்கு கண்ணீர் மட்டுமே உறவானது. மும்தாஜ் என்ற பிரபஞ்சப் பேரழகிக்காக கல்லறையை கட்டி அதன் அருகில் ஜோடிக் கிளியற்ற தனிமையில் வாடிக்கிடந்தார் சக்கரவரத்தி ஷாஜஹான். ஷாஜகான் மும்தாஜ் என்ற அரச வம்சத்து காதலுக்காக உடைக்கப்பட்ட கண்ணாடிகள் தான் ஹரின்-திலோத்தி

நடந்தது இதுதான்..

● தட்சா. ஜோ

சக்கரவர்த்தி ஷாஜகான், ஒரு கல்லை செதுக்க அதனுள் இருந்து 'மும்தாஜ்' என்ற அழகிய சிற்பம் கிடைத்தது. காலத்தின் கோலத்தால் சிற்பம் உடைய சிற்பி கல்லாகி விட்டான்!

சக்கரவர்த்தி ஜஹாங்கீர் ஷாஜகான் மீண்டும் தன் நிலைக்கு வரவேண்டும் எனில், அவர் தாஜ்மஹால் கனவு பலிக்க வேண்டும். சக்கரவரத்தியின் நண்பரும் பேரரசின் அமைச்சருமான ஆஷிப்பிற்கு ஷாஜகான் என்ற கப்பல் மும்தாஜ் எனும் கடலுக்குள் மூழ்கத் தொடங்கிவிட்டது என்பது புரிந்தது. அவர் மன்னனை பார்க்க வந்த வேளை ஏழு லட்சம் வீரர்களின் தலைவன் உடையத் தொடங்கியிருந்தான்.

'பேரரசே' என் ஆஷிப் அழைத்த போது மும்தாஜோடு பேசிக்கொண்டிருந்த ஷாஜகான் மெல்லத் திரும்பிய அதேவேளை மும்தாஜ் காற்றில் கரைகிறாள்! மொஹலாய சிங்கம் தன் உடல், பொருள், ஆவி ஒடுங்கிக் காணப்படுவதில் அமைச்சர் ஆஷிப் மட்டுமன்றி, மொத்த சாம்ரஜிஜமும் கண்ணீர் வடித்தது. ஆஷிப் மெல்ல மன்னரின் காதில் 'தங்கள் உடல் நலம் பரிசோதிக்க வைத்தியர் வந்திருக்கிறார்' என்றார். ஷாஜகானின் வெறுமையான கண்கள் வேண்டா வெறுப்பாக திறக்கப்பட்டன.

"நீ என் நண்பனா? சொல், நீ என் நண்பனா? நீ என் நண்பன் என்றால் எமனையல்லவா அழைத்து வர வேண்டும்!" மன்னர் இருமியபடி உறுமினார். ஆடிப் போனார் அமைச்சர் ஆஷிப்.

"இதோ வருகின்றான் என் நண்பன்" என மன்னர் காட்டிய திசையைப் பார்த்தார் ஆஷிப். பேரரசரர் காட்டிய திக்கில் கையில் மாதிரி ஓவிய சுருளுடன் மான் போல் வந்து கொண்டிருந்தான் ஓவியன் ஹரின்!

"ஆலம்பனா" என இளம் வயது ஓவியன் ஹரின் அழைக்க, ஷாஜகான் ஹரினைப் பார்த்து "எங்கே மும்தாஜ் மஹால்??" என்கிறார். ஹரின் தான் வரைந்த மாதிரி ஓவியத்தை மன்னனிடம் காட்டினான். அது ஹரின் கொடுக்கும் நான்காவது மாதிரிப் படம்.

மாதிரிப் படத்தினைப் பெற்றுக் கொண்ட மன்னர் கண்களைத் தாளிட்டுக் கொள்கிறார். ஓவியன் வாடிவிட்டான்.

மன்னனின் சிந்தனையில் ஓவியம் மும்தாஜினைப் போலவே அழகாக உள்ளது. ஆனால் என்னைப் போல சோகமாக இல்லை என்பதே ஓடிக்கொண்டிருந்தது. மன்னர் பேசினார், "மும்தாஜையும் என்னையும் கலந்து ஒரு ஓவியம் தேவை". ஹரின் மௌனமானான்.

அவனது சிந்தனையில் "மும்தாஜ் என்ற பிரபஞ்சப் பேரழகியை ஓவியமாக்கினேன்! ஒரு மொஹலய ரோஜாவை ரோஜாவால் வரைந்தேன். ஆனால் ஏன் அரசருக்கு அது பிடிக்கவில்லை? அவர் உயிரை ஏன் என் ஓவியம் தொடவில்லை??.

வீடு திரும்புகின்றான். ஹரினுக்கு மணவாழ்க்கை புதிது. அவன் மனைவி திலோத்தி பல் தெரியாது புன்னகைக்கும் சாருஹாசினி வகை. வீட்டிற்கு வந்த ஹரின், திலோத்தியை கண்டதும் மீண்டும் புயலாகினான். திலோத்தி என்ற பதினாறு வயதுப் பாற்கடலை ஹரின் என்ற ஓவியனின் உதடுகள் குடிக்கத் துவங்குகின. முற்றுப் புள்ளிகள் இல்லாமல் முத்தங்களால் கதை எழுத காதலில் மட்டும் தானே முடியும்.. எழுதினான் ஹரின். எழுதப்பட்டால் திலோத்தி..

"டக் டக்"

ராஜாங்க ஓலை ஓவியனின் வீட்டைத் தட்ட இன்பத்தில் மூழ்கிய தம்பதிகளுக்கு கதவு தட்டும் ஓசை எட்ட, ஹரின் மனம் கதவை திட்டியது.. கதவைத் திறந்து, ஓலையைப் வாங்கி செய்தியைப் படித்தனர் ஹரினும் திலோத்தியும். திகைப்பும் மலைப்புமே மிஞ்சியது.

"மொகலாய பேரரசு அமைச்சர் ஆஷிப்பின் கட்டளை! இன்னும் ஒரே ஒரு ஓவியம் தான் நீ வரையலாம் அது அரசர் மனம்படி அமைய வேண்டும்! இல்லையேல் மரண தண்டனை"

புது மணவாழ்வு மண்ணாகியது. இரவுகள் நீண்டன. மரண தண்டனை என்ற தீர்ப்பின் அதிர்விலிருந்து மெல்ல வெளியே வந்து கல்லானாள் திலோத்தி. திலோத்தி உணர்ந்தாள். காதல் என்பது ஹரினுக்கு சிறகு. ஆனால் ஷாஜகானுக்குப் புதை மணல். வானில் சிறகடிப்பவனுக்கு புதைந்து கொண்டிருப்பவனின் மனோநிலை தூரத்தில் உண்டு என்பதை.

முழுப் பௌர்ணமி இரவை அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருந்தான் ஹரின். "அரசர் எதைத்தான் எதிர்பார்க்கிறார்?" என மெதுவாக பேச்சுக் கொடுத்தாள் திலோத்தி.

நிமிடங்கள் பல கழித்து... "மும்தாஜை... மும்தாஜ் என்ற ஒரு பிரமாண்டமான கண்ணீர் துளியை" என்றான் ஹரின்.

"சுத்தக் கலைஞன் ஒரு சுய மரியாதைக் காரன்" தான் நிராகிக்கப்படுகிறோம் என்று அறிந்தால் அதை துடைத்துக்கொள்வதில்லை. தனக்குள் தன்னைத் தானே உடைத்துக் கொள்வான் என்பதை நிரூபித்தான் ஹரின்.

திலோத்தியின் கையில் இருந்த கத்தி மாம் பழத்தை அறுத்துக் கொண்டிருந்தது. அவளது கண்கள் ஹரினைப் பார்வையால் குடித்துக் கொண்டிருந்தன. ஆனால் அவள் மனம் மும்தரஜ் மஹாலை எண்ணிக்கொண்டிருந்தது. கத்தி மெல்ல அவள் விரலைப் பதம் பார்த்தது. ஆறிய அடுத்த நொடி அவள் விரல் ஹரி



ஆச்சரியமாய், அதிசயமாய் அடங்காத காதலுடன் தனக்காகத் துடிக்கும் அவனையே திலோத்தி நோக்கினாள். நகக் கண்களில் தீப்பொறிபட்டதைப் போல் ஹரின் பதறினான்.. அதுதான் 'தாஜ்மஹால்' என்ற பளிங்கு மாளிகை தோற்றத்திற்கான அத்திவாரம். திலோத்தியின் மனதில் ஒரு பொறி புறப்பட்டது.

மறுநாள் சக்கரவர்த்தியிடம் சென்ற திலோத்தி மும்தாஜ் மஹால் மாதிரி ஓவியம் வரைவதற்காக ஒரு மாத அவகாசம் பெறுகிறாள். ஒரு மாத காலத்துக்குள் காதல் என்பது எதிலிருந்து எதுவரை? அது அணுவின் துவக்கத்திலிருந்து அஸ்தியின் பிடிவரை என ஹரினுக்கு அறிய வைத்தாள் திலோத்தி!

ஓவியன் ஒரு மாதமும் காதலாய் கசிந்தான். காதலின் உச்சிவரைக்கும் இன்பத்தின் சிகரம் வரைக்கும் உறவின் வரைக்கும் ஹரினை அழைத்து சென்றாள் திலோத்தி.

ஒரு நாள் மாலை வீடு திரும்பினான் ஹரின். "திலோத்தி... திலோத்தி" என அன்பாக பலமுறை அழைத்தான். பதில் வரவில்லை. வீட்டினுள் வந்தான் ஹரின். ஓவியப் பலகை சுத்தம் செய்யப்பட்டிருந்தது. வர்ணமும் தயார் நிலையில் எடுத்து வைக்கப்பட்டிருந்தது. அருகில் ஒரு கடிதமும் படபடத்தது.

"அன்பே!"

சோகத்தின் ஆழம் அந்த சோகத்தின் ஆழத்திற்கு இறங்குபவரால் தான் உணர முடியும். சக்கரவர்த்தியின் மனசு உனக்கு வரவேண்டுமெனில், சக்கரவர்த்தியின் நிலைக்கு நீ வரவேண்டும். என்னை யமுனைத் தாயிடம் ஒப்படைத்து கொள்ளப்போகிறேன். என் மரணம் உனக்குள் சக்கரவர்திகளின் உணர்சிகளை நிரப்பும். ஒரே ஒரு ஓவியம் வரை. அது மும்தாஜ் மஹாலை உருவாக்கும். அழுது முடித்தபின் நமக்காக வரை.

இந் நேரம் இறந்து போயிருக்கும்

"திலோத்தி, திலோத்தி"

எட்டுத் திசைகளிலும் எதிரொலிக்கக் கத்தினான், கதறினான், உடைந்தான், தூளானான், தூசானான், இறுதியில் ஒன்றுமின்றிப் போனான். திலோத்தி அவனுக்கு கடலானான். அவன் கப்பலானான் மூழ்கத் தொடங்கினான். ஷாஜகானின் வலி ஹரினுக்குள்ளும் வந்தது. அவனால் ஒரு பிரமாண்டமான கண்ணீர் துளியைக் கற்பனை செய்ய முடிந்தது. வர்ணங்களை ஒதுக்கி கண்ணீரின் நிறத்திலேயே அந்தக் கண்ணீரை வரைந்தான்.


அற்புதமான ஓவியம் "ஷாஜகானின் உதடுகள் ஆண்டுகளுக்குப் பின் சிறிது மலர்ந்தது. மன்னனுக்குப் புரிந்தது அந்த ஓவியனின் மனைவி ஏதோ செய்திருக்கிறாள். ஹரினை ஷாஜகானாய் மாற வைத்து ஓவியம் செய்திருக்கிறாள். அமைச்சர் ஆஷிப் நடந்ததை கூற அதிர்கிறார் அரசர்.

"என்னது அவள் யமுனையாற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாளா? அந்த ஓவியன் ஹரின் எங்கே? திலோத்தியை அணைத்த யமுனைத் தாய் ஹரினுக்கு மட்டும் இடமளிக்க மறுத்துவிடுவாளா என்ன?" என்கிறார் ஆஷிப். உலகில் எல்லா நதிகளும் சிரித்துக் கொண்டுதான் ஓடுகின்றன. அழுது கொண்டு ஓடும் ஒரே நதி யமுனை நதியாகத்தான் இருக்கும்..!

"மும்தாஜின் மரணத்திற்காய் தாஜ்மஹால் ஜனனம்!
தாஜ்மஹாலின் ஜனனத்திற்காய் திலோத்தியின் மரணம்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்புநாதரின் விஸ்வரூபம்



சுழிபுரம் திருவடிநிலை கடற்கரைக்கு அருகில் உள்ள மிகவும் பழமையான சிவாலயமான சம்பில் துறை சம்புநாத ஈஸ்வரத்தில் 21 அடி உயரம் கொண்ட சிவனின் சிலையை நிறுவும் பணிகள் துரித கதியில் நடைபெறத் தொடங்கியுள்ளன.

தியான நிலையில் அமர்ந்துள்ள வகையில் இந்தச் சிலை வடிவமைக்கப்படவுள்ளது. சிவ தொண்டன் அமைப்பின் ஏற்பாட்டில் நிறுவப்பட்டுவரும் இந்தச் சிவன் உருவச்சிலை வடக்கிலேயே மிகப் பெரிய சிலை என்ற பெருமையைப் பெறவுள்ளது. புராதன ஈஸ்வரத்தின் தொன்மையை பிற மதங்களின் ஆக்கிரமிப்பு விழுங்கி விடாமல் இருப்பதற்காகவே இந்த முயற்சி என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பில்துறையை அண்மித்த பகுதியான ஜம்புகோளப் பட்டினத்தில் சங்கமித்தை வந்திறங்கியதாகக் கூறப்படும் நிகழ்ச்சிகளை மையப்படுத்திய சிலைகளும் விகாரையும் புதிதாக நிறுவப்பட்டுள்ளமை தெரிந்ததே.


**Green City Apartments**

## உங்கள் கனவுகள் நனவாகுமா???...

தற்போது கொழும்புக்கு நடந்து வரும் தூரத்தில்
தொடர்மாடி வீடமைப்புத் திட்டம்

**ரூபா. 1,285,000/=**

(ரூபா. பன்னிரண்டு இலச்சத்து எண்பத்தையாயிரம்)

- கொழும்பு 15 மட்டக்குளியவிற்கு நடந்துவரும் தூரத்தில்
- பெட்டாவுக்கு 30 நிமிடத்தல் செல்லலாம்
- நீர்கொழும்பு வீதிக்கு 10 நிமிடத்தில் செல்லலாம்
- லைசியம் சர்வதேச பாடசாலை, கார்கில்ஸ் ஃபூட்சிட்டி, கீஸ்ஸ் சுபர் மற்றும் கோவில் என்பன தெரியும் தூரத்தில்
- மேல்மாடியிலிருந்து கொழும்பு நகர் மற்றும் கடற்கரையை பார்வையிடலாம்.

*Housing Unit consists of Living, Dinning with Pantry, Bedroom with attached toilet (Commode fitted). Balcony and servant's toilet.*



விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டதிதிற்கு இன்றே வருகைதந்து **Housing Unit** ஐ ரூபா. **5,000/-** ம் செலுத்தி முன்பதிவு செய்துகொள்ளுங்கள் தாமதத்திற்கு வருந்தாதீர்கள..

**இடத்திற்கு செல்லும் மார்க்கம்** அலகந்தவிற்கு வந்து பள்ளியாவத்த வீதியில் இடதுபக்கம் திரும்பி காமில் மாவத்தையில் இடத்திற்கு செல்லலாம்.

### மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள

தமிழில் : 0776 9591 97 ராஜாவுடன் தொடர்பு கொள்ளுங்கள்
ஆங்கிலத்தில் : 0776 [illegible] ஜெரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்
சிங்களத்தில் : 0776 [illegible] குமாரவுடன் தொடர்பு கொள்ளுங்கள்

**Nimavin Developers (Pvt) Ltd**
187, Ward Place, Colombo 07.
Tel : (011) 2695714 / (011) 2695728
Visit our Web Site : www.nimavingreenpark.com



**Hero**

## ஹீரோ உந்துருளிகளுக்கு

# ரூ. 10,000/- வரை

# விலை தள்ளுபடி




| ஸ்ப்லெண்டர் ப்ரோ–100CC | சுப்பர் ஸ்ப்லெண்டர்–125CC | க்ளெமர்–125CC | எக்ஸ்ட்ரீம்–150CC |
|---|---|---|---|
| ~~ரூ.196,990/-~~ | ~~ரூ.227,990/-~~ | ~~ரூ.249,990/-~~ | ~~ரூ.288,000/-~~ |
| ரூ.188,990/- | ரூ.220,990/- | ரூ.239,990/- | ரூ.278,000/- |

**R.G.ட்ரேடர்ஸ் உந்துருளிகளுக்கான அபான்ஸின் அங்கீகாரம் பெற்ற முகவர்**

யாழ்ப்பாணம் - இல: 285, 287 ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம்: 021 2226185 • யாழ்ப்பாணம் - பலசரக் காட்சியறை இல: 291, ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம்: 021 2227667
நெல்லியடி - இல: 84, பருத்தித்துறை வீதி, நெல்லியடி: 021 2263... • சாவகச்சேரி: 0212270185 • நாவற்குளி - இல:50, கண்டி வீதி, நாவற்குளி சந்தி, நாவற்குளி • சுன்னாகம் - 12, 14, KKS வீதி, சுன்னாகம்: 021 2241985 • கிளிநொச்சி - கரடிபோக்கு சந்தி, A9 வீதி, கிளிநொச்சி: 021 2280185
... இல: A9 வீதி, ...: 0777 340056

Abans


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org